காவோலை
KAVOLAI

NEWSLETTER
Tamil Senior Citizens Association (ACT) Inc.

இதழ் Issue 2





















## INSIDE

⇒ காவோலை : செய்திகளும் புகைப்படங்களும்.

⇒ சிறப்புப் பகுதி : பொப்பிசைப் பிதா நித்தி கனகரத்தினம்.

⇒ இலக்கியம் கவிதைகள் : (1) காவோலையான முதுமை! (2) அம்மா (3) ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை.

சிறுகதைகள்: (1) அம்மாவின் கடிதம் (2) விடை காணமுடியாத வினா (3) தாய் மடி தேடி

கட்டுரை : தமிழர் திருநாள்

⇒ ஆன்மிகம் : (1) The Dance of Shiva (2) ஆருத்திரா தரிசனம் (3) யார் குற்றவாளி?

⇒ பாரம்பரிய சமையல் : ஒடியல் கூழ்

⇒ சினிமா விமர்சனங்கள் : (1) விசாரணை (2) மிருதன்








காவோலை NEWSLETTER
KAVOLAI

**Tamil Senior Citizens Association (ACT) Inc.**




Editor
**Valentine Thurairajah**
valentine.thurairajah@hotmail.com
ஆசிரியர்
**நித்தி துரைராஜா**

Magazine Design & Sub Editor
**Path Ragupathy**
path.ragupathy@live.com
இதழ் வடிவமைப்பு-இணை ஆசிரியர்
**பத்மநாதன் ரகுபதி**

## index

| | |
|---|---|
| Best Wishes on Festivals after Festivals | 03 |
| Editorial | 04 |
| காவோலையான முதுமை! | 05 |
| Tamil Senior Citizens Association BBQ | 06 |
| வெளியெரி உணவு ஒன்று கூடல் | 06 |
| Walking Group in Action | 07 |
| TSCA Supports Exercise Classes | 09 |
| TSCA Meeting | 10 |
| National Multicultural Festival 2016 | 11 |
| Forthcoming Events | 11 |
| Grant from ACT Housing | 12 |
| பாரம்பரிய சமையல் (ஒடியல் கூழ்) | 13 |
| TSCA Provides $700 to Chennai Flood Relief Fund | 14 |
| பொப்பிசைப் பிதா நித்தி கனகரத்தினம் சிறப்புப் பகுதி | 15 |
| இலங்கையின் பொப்பிசை வரலாறு | 16 |
| Multifaceted Nithi makes Music Too | 18 |
| நித்தி கனகரத்தினத்துடன் ஒரு நேர்காணல் | 19 |
| Nithi Kanagaratnam's Love Affair with Canberra | 21 |
| சிட்டுக் குருவியாய் சிறகடித்துத் திரிந்த காலம்.. | 25 |
| To the Baila Beat | 29 |
| ஐம்பது ஆண்டுகளாக சின்ன மாமியின் சின்ன மகளைத் தேடும் நித்தி கனகரத்தினம் | 30 |
| அம்மா | 32 |
| அம்மாவின் கடிதம் | 34 |
| ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை | 37 |
| தமிழர் திருநாள் | 39 |
| தாய் மடி தேடி | 41 |
| விடை காணமுடியாத வினா | 45 |
| The Dance of Shiva | 50 |
| ஆருத்திரா தரிசனம் | 55 |
| யார் குற்றவாளி? | 58 |
| சினிமா விமர்சனங்கள் | 59 |

# President's Message




## BEST WISHES ON FESTIVALS AFTER FESTIVALS

**Murugesu Ooruthiran**

Our members, tenants, friends, well wishers and their families have been busy celebrating festivals in December and January. My BEST WISHES to all who have faithfully celebrated Thiruvempavai, Thiruppavai, Christmas, New Year and Thaipongal.

**Tamil month of Markazhi**

Markazhi started on 17-12-15 and ended on 14-1-16. This is a pleasant month. In our native places, the month gets good rain fall, is cool and enjoyable, except for cruel climate changes. Farmers get ready for harvesting. In Baghavat Geeta, Krishna said He is Markazhi among months.



Ancient literature provides that one year (12months) on the earth is equal to one day(24 hours) in the angels world. There, the day (6 am) starts when the Tamil month of Thai starts on the earth. It is dawn there when it is Thaipongal here. When the month of Chithirai starts here, it is noon there. Night starts in the Angels world when we have Adippirappu here. Our Aippasi is midnight there. Our Markazhi is 4-6 am in the Angels world. Time from 4 to 6 am anywhere is called Piramma Muhoortham. Piramma Muhoortham is the best time of every day. This time is cool, almost free of disturbances and most suitable for meditation, prayers and any concentrated application of the mind. May be for this reason that Krishna exalted Markazhi, this is the time of Piramma Muhoortham, in His world.

<u>**Thiruvempavai/Thiruppavai**</u>

Thirivempavai, authored by Manickavasagar, is dedicated to Siva. Thiruppavai, authored by Sri Andal, a young lady, is dedicated to Vishnu. These celebrations take place for 10 days and end up on Markazhi full moon day. Apart from their devotional significance, the two, being several hundred years old works in Tamil, are splendid treasures of Tamil literature.




<u>**Christmas**</u>

25th December starts with the birthday celebrations for the divine Baby Jesus. His birth ushered salvation for the human race. He dedicated his life to teach people many truths about life. He stood by His principles and for that sake sacrificed His life, because his principles hurt the vested interests of some who were in power.




<u>**New Year**</u>

On 1-1-16, the International New Year, 2016, was welcomed all over the world with fireworks, decorations, celebrations, great expectations, hopes and prayers. Let us pray for positive and pleasant things to come through during this year. Let us pray unexpected disasters keep away and this year allows us to live in peace, positive understanding and a high level of tolerance.




Thaipongal, a prominent Tamil festival was on 15-1-16. This is a festival for group enjoyment; cooking and enjoying the pongal in an open environment, welcoming the rising sun. This also marks celebration of farming and the treasure of cattle. The SUN, FARMING, and CATTLE are absolute essentials for living- NOT for Tamils alone, for all living beings, everywhere on the earth. We Tamils can be proud this celebration started in our Tamil culture. This festival predominantly deserves to be celebrated by all, irrespective of religious affiliations. This is " barbecue" introduced long long ago by the Tamils, cooking in the open air, eating bellyful and enjoying as a group, chanting Pongalo Pongal.

This will arouse the sentiments expressed by Kaniyan Poongunranar in his ancient Tamil saying "Yathum Oore, Yavarum Kelir" ( In the world, all are our places, all are our relatives)



Editorial

## *The Role of Senior Citizens in Orally Transmitted Tamil Culture*

Heritage is the full range of our inherited traditions, cultural and social practices, monuments, objects (such as brass lamps) and beliefs. Heritage includes both tangible and intangible. In the Tamil culture, although literature is well documented over centuries the other aspects of such as memories, recipes of traditional food items, festivals, folk dances and many others in which we identify ourselves are important just as historical and archeological sites.

Cultural heritage of orally transmitted cultures such as Tamil are inherited from past generations, maintained in the present and bestowed for the benefit of future generations. Hence, the key conduit of the wealth of knowledge about customs, cultural and religious beliefs are the senior citizens who pass on their knowledge they acquired from the previous generations (parents and other elders) to the present generations. Some common practical examples are the draping of the 6 yards saree and similarly the draping of the dhoti. The current generation seeks the expertise from their mothers, aunts and other elders to wear the saree draped according to tradition. Similarly, preparations of traditional food items and recipes are passed on from generations to generations through senior citizens. When Tamils migrate to other countries, it is this intangible heritage that is carried overseas and passed on to their children and grandchildren through senior citizens. This is most demonstrated in traditional weddings and funerals. It is the seniors which are the source of knowledge about customs, cultural practices and beliefs.

Hence, senior citizens are the depository of this cultural heritage and custodians of this knowledge.

Similarly, in the area of performing arts, the Guru-Sishya model is the prevalent mode of transferring this knowledge from one generation to the other. For example, in the transfer of Bharatha Natyam and Carnatic singing. In folk songs and dances, lullabies, stories are also passed on from one generation to the other. For example, in Batticaloa in Sri Lanka, the traditional 'Vada modi' and 'Then modi' dances dramas which are indigenous to Sri Lanka are passed on from generations to generations. Only very recently, there are attempts to formalize and document these dances by people such as Prof Mounaguru of the Eastern University in Batticaloa.

In this second issue of Kavolai, we have tried to illustrate some aspects of this cultural heritage. We focus on one of the key festivals of Thai Pongal with a piece by Annathurai, followed by some traditional recipes.

As the message from the President of TSCA in the first issue of Kavolai, illustrated, TSCA will continue to support and encourage Tamil literature and Tamil writers and poets. In further development Tamil literature in Canberra, we have identified a number of Tamil writers and poets residing in Canberra to contribute to this issue of Kavolai. Many have stopped writing as they could not find suitable avenue to share their stories and poems. Kavolai will seek to fill this gap.

Tamil cultural heritage is evolving and has internalized some aspects of modernity. In this instance, we recognize and honour one of Sri Lanka's pioneer Tamil Pop music exponent Nithi Kanagaratnam who has sung his way into our hearts and culture. Nithi is no stranger to Canberra and has contributed to the musical development of the Canberra Tamil community. Singing Christmas carols in Tamil by the Tamil Christian community and including western instruments is another example, of evolving Tamil culture. Canberra poets such as 'aazhiyaal' delve in to modernity by introducing feminism in Tamil modern poetry with some refreshing ideas.

We encourage our TSCA members to write and share their experiences.

**Nithy Thurairajah**
**Editor - Kavolai**

***(formerly Senior Policy Officer with the Australian Heritage Commission within the Federal Department of Environment and Heritage)***

**Canberra**

(The views expressed are those of the Editor and should not be seen as necessarily representing the views of the TSCA or any other institution)

# காவோலையான முதுமை!

க.கணேசலிங்கம்

புலரும் காலைப் பொழுதினில் பரிதியின்
பொன்னொளி எங்கும் பரவிவிடும்!
மலரும் பூக்கள் இதழ்க ளவிழ்ந்து
மனங்கவர் நறுமணம் சிந்திவிடும்!
சிலரது கண்டு மகிழ்ந்திடு வார்,அவர்
சிந்தையில் வாழ்வும் அழகுபெறும்!
பலரும் போவார் வருவார் அதனைப்
பார்த்தனு பவிப்பவர் யாருளரோ?
முதிர்ந்த வயதினில் முன்னைய நினைவுகள்
முட்டி உளத்தினில் மோதிவிடும்!
எதிர்தெரி வழியினில் தனிமையில் எனைமறந்
தேகிடு வேன்!சிலர் எதிர்வருவார்!
கதிர்எறி ஞாயிறு மாலை மறைந்திடு
காட்சியும் போய்விடும்! மதியெழும்பும்!
உதிர்ந்திடு முணர்வுகள் ஓடிடு நிலையினில்
உடல்நலம் முதுமையில் குன்றிவிடும்!
தளர்ந்திடும் இதயம், தளரா முதுகின்
தண்டினில் சிதைவு, குருதியிலே
வளர்ந்திடு சர்க்கரை நோய், உடல் வலிக்கும்!.
'வயது முதிர்ந்தால் இப்படித்தான்!
தளர்வதும் நோயில் விழுவதும் இயற்கை!
தரணியில் ஏற்றிதை வாழ்ந்துவிடப்
பழகுதல் ஒன்றே வழி' எனப் பலரும்
பகருவர்! முதுமையின் நிலையிதுவோ?
"காய்ந்து விழும்கா வோலை இவர்கள்"!
காதினில் விழுந்திடு சொற்கள் இவை !
தேய்ந்து நலிந்தவர் குடிசைகள் வேயவும்
திருந்திய கடகம் பெட்டியுடன்
பாய்எனப் பலவும் பின்னவும் மரஞ்செடி
பலதும் வளர்ந்திடப் பசளையென
வாய்ந்தகா வோலையின் பயன்எவர் கண்டார்?
வாழ்வினில் முதுமையும் பயனுளதே

(February 2016)




# TAMIL SENIOR CITIZENS BARBEQUE

Our Association held a barbeque on 5th December 2015. The barbeque was well attended by members, tenants, their family members and some invitees.

The invitees included:

- Representative from **Indian Seniors Association**,
- Representatives from **Canberra Tamil Association**,
- Representative from **Canberra Tamil School**,
- Friends and well-wishers of our Association.

Some invited guests from **ACT Housing** were unable to attend.

Our members, tenants, family members and guests started assembling from 10.30 am. They all actively helped in making preparations. Preparations were commended as delicious, healthy and nutritious. Deliberately, unhealthy food items were avoided.

The event proved to be a memorable get-together. All interacted, enjoyed and had a pleasant time for more than 3 hours away from loneliness and boredom.

Big thanks are due to all who made preparations before the event and during the event. Also thanks to all who participated. Also a request to all members and tenants who did not attend- the Association solicits your participation.

Tradition in the past has been to have one barbeque event in Nov/Dec every year. There are strong reasons to believe at least one more barbeque should be organised every year, preferably between March and May.



## கான்பெரா தமிழ் முதியோர் சங்க ‘ வெளியெரி’ உணவு ஒன்று கூடல்

மேற்படி நிகழ்ச்சி 5-12-15 சனிக்கிழமை நடைபெற்றது. அங்கத்தவர்கள், குடியிருப்பாளர்கள், அவர்கள் குடும்ப அங்கத்தினர்கள், அழைக்கப்பட்ட விருந்தாளிகள் என பலர் வந்திருந்தார்கள்.

விருந்தாளிகள்

* இந்திய முதியோர் சங்க பிரதிநிதி.
* கான்பெரா தமிழ்ச் சங்க பிரதிநிதிகள்.
* கான்பெரா தமிழ்ப் பாடசாலை பிரதிநிதி.
* எமது சங்கத்தின் நண்பர்கள், நலம் விரும்பிகள்

கான்பெரா வீடமைப்பு திணைக்கள உத்தியோகத்தர் சிலரை அழைத்தோம், வர முடியாமையால் வரவில்லை.


எங்கள் அங்கத்தினர், குடியிருப்பாளர்கள், குடும்பத்தினர் காலை 10.30 தொடக்கம் ஒன்று கூடினர். சுறு சுறுப்பாக ஆயத்த வேலைகள் நடந்தன. தயாரிப்புகள் சுவையாகவும், சத்துள்ளவையாகவும் உடல் நலத்துக்கு உகந்தவையாகவும் இருந்தன. உடல் நலத்துக்கு தகாதவை வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டன.

நிகழ்ச்சி மறக்கமுடியாத ஒன்று கூடலாக அமைந்தது. எல்லோரும் 3 மணித்தியாலங்களுக்கு மேல் அளவளாவி, உரையாடி, தனிமையை மறந்து, மன உழைச்சல்களிருந்து விடுபட்டு மகிழ்வுற்றார்கள்.

நிகழ்வுக்கு முன்னதாகவும், நிகழ்வின்போது கடமையாற்றிய அனைவருக்கும் மறறும் வருகைதந்தவர்களுக்கும் எங்கள் நன்றிகள்.

வருகைதராத அங்கத்தினர்கள்,குடியிருப்பாளர்கள் இனிமேல் கட்டாயம் வருகை தரவேண்டும் என்பது எமது வேண்டுகோள்.


# Walking Group in Action














*Every Tuesday at 10.00 am the walking group gathers at #11, Bromby St,Isaacs.*

*Heart foundation who initiated the walking group organized trips to cotter dam, Gunghalin lake, Arboretum as new venues for us to walk in a different atmosphere.*

*Should any member like to participate, they could contact* ***Mrs.S.Sithamparanathan – 04 23666155***



TAMIL SENIOR CITIZENS ASSOCIATION (ACT) INCORPORATED
(REGISTERED No. A 2860)
11 Brombystreet,Isaacs, ACT 2607
Tel.: 02-61575400 /02-61010678
eMail :seniorstamil@gmail.com

# TSCA SUPPORTS EXERCISE CLASSES



Some members of Tamil Seniors Association are following exercise classes at the TSCA Hall, 11, Bromby Street Isaacs, ACT 2607.


The classes are conducted by a teacher arranged through Heart Foundation, so are suitable for the participants. Classes are held every Monday from 10 am to 11 am. The participants contribute $6 each per class. TSCA guarantees minimum payment of $50 if there is a shortfall.


If any of your members have interest in these exercise classes, they can join. If there is a significant increase in the number of participants, the contribution per head is likely to decrease.


We shall thank you to please disseminate this information among your members

Thank you and regards,

M.Ooruthiran,







*TSCA Meeting*

*Canberra Tamil Christian Fellowship Sang Carols at December 2015 TSCA meeting and also provided lunch. TSCA thanks members of the Carol Party*





*His Excellency Sri Lankan High commissioner & Vice. President at December 2015 TSCA Meeting*



*Celebration of some members*

*Birthdays in the January 2016 TSCA Meeting*

# 2016 National Multicultural Festival
FEBRUARY 12-14



It's estimated that about 280,000 people descended on the city centre over the weekend, for the celebration of culture, colour and food. Multicultural Affairs Minister Yvette Berry said early estimates indicated the festival had attracted 10,000 more visitors than the 2015 event.

"That's the reports that I've had back last night and this morning, that more people came," she said. Ms Berry said the festival's reputation continued to grow as a tourism drawcard for the ACT.

"It's not just Canberra that comes along, I met a group of people who came from all over Australia from Sydney and Melbourne and Western Australia, who come every year," she said.

"It just turns [Civic] into an amazing place, it certainly doesn't feel like the city centre you go through during the day.


"This year was the 20th anniversary ... and it keeps getting better and better every single year." She said the festival remained an important economic boost for Canberra.

"Last year about $7.5 million (was spent) over the three days," she said.

"This year I've had reports the ATMs ran out of money, so hopefully that economic boost has increased this year as well." ACT police said crowds were generally well behaved at the event, however a small number of people were taken into custody for intoxication and offensive behaviour.

(Source: ABC)

# Forthcoming Events



## EASTER 2016


In 2016, Easter will be celebrated with the Good Friday holiday on 25 March and Easter Monday holiday on 28 March.

Easter or Resurrection Sunday, is a festival and holiday celebrating the resurrection of Jesus Christ from the dead, described in the New Testament as having occurred on the third day of his burial after his crucifixion by Romans at Calvary c. 30 AD.It is the culmination of the Passion of Christ, preceded by Lent (or Great Lent), a forty-day period of fasting, prayer, and penance.

## சித்திரை தமிழ் வருடப் பிறப்பு



சித்திரை முதல் நாள் தமிழ் வருடப் பிறப்பாக கொண்டாடப்படுகிறது. சூரியன் மேஷ ராசிக்குள் நுழையும் ஆரம்பம் சித்திரையில் நிகழ்கிறது. ஆகவே இந்த ஆரம்பத்தையே புத்தாண்டின் தொடக்க நாளாகக் கொண்டு புது வருடத்தை அறிவியல் ரீதியாக தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர். அசுவதி தொடங்கி ரேவதி முடிய உள்ள 27 நட்சத்திரங்கள் இந்த 12 ராசிகளில் உள்ளன. அசுவதி மேஷத்தில் தொடங்குவதாலும் தமிழ் புத்தாண்டின் ஆரம்பம் சித்திரையில் ஆரம்பிப்பது உறுதிப்படுகிறது.



TAMIL SENIOR CITIZENS ASSOCIATION (ACT) INCORPORATED
(REGISTERED No. A 2860)
11 Brombystreet.Isaacs. ACT 2607
Tel.: 02-61575400 /02-61010678
eMail :seniorstamil@gmail.com

காவோலை
KAVOLAI

## *GRANT FROM ACT HOUSING.*

*ACT Housing has provided our Association a grant of $9244.31, net of GST.*

*This grant is for expenditure on welfare of the tenants of the 10 Community houses managed by our Association.*

*The grant is to be used during the financial year 2015 / 2016.*

*Our Association appreciates this kind gesture from the Territory Government.*

*This highlights the dedication of the Territory Government in looking after the interests of the tenants of the above community houses who are mostly seniors and of low or moderate income group.*

*Thanks to the Territory Government and ACT Housing on behalf of the tenants.*

*Thank you.*

*M.Ooruthiran*

*President.*



# *TSCA Provides $700 to Chennai Flood Relief Fund*

Dear Sir,

It is so nice of you to offer such a huge assistance to the flood affected people through Vikatan. In the AV dated 16th Dec 2015 we have outlined the areas in which we are going to work. On one hand we will be concentrating intensely on relief operations in the worst affected areas like Chennai, Kanchipuram, Thiruvallur, Cuddalore and Pondicherry.

Since most of the families have lost almost everything, they are in the verge of rebuilding their homes from the scratch. Therefore we are planning to provide the worst affected familes with kitchen utensils, 3 months provisions, 2 set of dresses, blankets, mosquito repellents, coils, milk powder, flash lights,diapers and sanitary napkins.We are also planning to give them a cash assistance of Rs.5,00 - 10,000 depending on their condition of house.

இந்தியாவில் வசிக்கும் வாசகர்களுக்கு:
Name : VASAN CHARITABLE TRUST
Bank : HDFC BANK,CHENNAI - ITC CENTRE - ANNA SALAI
A/C NO : 00040330019032,
IFSC code : HDFC0000004 (For NEFT/RTGS)
MICR Code : 600240002
வெளிநாட்டில் வசிக்கும் வாசகர்களுக்கு:
Name : VASAN CHARITABLE TRUST,
Bank : Indian Bank, Ethiraj salai Branch, Chennai-8
A/C NO : 443380918
IFSC code : IDIB 000C032 (For RTGS)

We are also in the process of identifying the flood affected old age homes and orphanages to provide them with material like blankets, 3 month provisions, TV, Fridge, Fan and 2 set of dresses to the inmates.We are also in the process of providing the students with text books and note books who have lost them in the flood waters.

On a long term basis we are working on a project named Restore Chennai. The Core aim of this project will be to identify the water bodies in and around Chennai and preparing and executing a blue to restore selected water bodies with the help of the locals.

We will be happy to share more details once we role out our proposals in the magazine.

Thanks once again for the interest and concern.

Best Regards

Ananda Vikatan

---

From: **tamil seniors** <seniorstamil@gmail.com>
Date: Sun, Jan 10, 2016 at 11:42 AM
Subject: Donation for Chennai Flood Relief
To: info@vasancharitabletrust.org

Tamil Senior Citizens Association of Canberra, Australia, wishes to make a donation of Australia $500.00 and Australia $200.00 from an anonymous individual

to the Chennai Flood Relief Fund.

We have chosen you as the suitable channel through which to make the donation. We have collected your instructions how to send the money from Ananda Vikatan issue of 16-12-15.For our records we shall require an official receipt, when you have collected the money.

Please confirm whether we could go ahead with our proposal with any other advice you may wish to include.

Thank you, with kind regards,

Murugesu Ooruthiran,

President,

TAMIL SENIOR CITIZENS ASSOCIATION (ACT) INCORPORATED
(REGISTERED No. A 2860)
11 Brombystreet.Isaacs. ACT 2607
Tel.: 02-61575400 /02-61010678
eMail :seniorstamil@gmail.com



# ஒடியல் கூழ்

ஒடியல் கூழ் என்பது பனங்கிழங்கை நன்றாகக் காயவைத்துக் கிடைக்கும் ஒடியலை மாவாக திரித்து எடுக்கப்பட்ட மாவைக் (ஒடியல் மா) கொண்டு தயாரிக்கப்படும் உணவு. கூழ் பதம் வருவதற்கும், பிரத்தியேகமான கூழ் வாசனைக்கும் ஒடியல் மா கட்டாயம் தேவை.

**தேவையானவை**

-ஒடியல் மா - 1/2 கிலோ

மீன் - 1 கிலோ (வகை வகையான சிறு மீன்கள். முள் குறைந்த மீன்களாக இருப்பது நல்லது)

-நண்டு - 6 துண்டுகள் (இவை கூட மிகச் சிறிய நண்டுகளாக இருந்தால் நல்லது)

-இறால் - 1/4 கிலோ

சின்ன சின்ன கணவாய்கள்.

-நெத்தலி மீன் கருவாடு 100 கிராம்

பயிற்றங்காய் - 250 கிராம் (1 அங்குல நீள துண்டுகள்)

-பலாக்கொட்டைகள் - 25 (கோது நீக்கி பாதியாக வெட்டியது)

-ஒரு பிடி கீரை, அல்லது கீரை வகைகள் ஒரு பிடி

அரிசி - 50 கிராம்

பச்சை மிளகாய் 10 இரண்டாக பிளந்தது

செத்தல் மிளகாய் - 15 அரைத்தது

பழப்புளி - 100 கிராம்

உப்பு - சுவைக்கேற்ப

**யாழ்ப்பாணத்து ஒடியல் கூழ் வகை**

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கூழ்களின் தன்மை மாறுபடும்.

முக்கிய குறிப்பு: நீங்கள் கூழ் வைப்பதற்காக தேவைப் படும் பொருள்கள் 1 கி.கிராம் மாவுக்கு, இரண்டு லிட்டர் தண்ணிர் தேவை. இப்படி சரியான அளவில் இரண்டும் இருந்தால்தான் கூழ் சரியான பதத்துக்கு வரும்

**ஒடியல் கூழ் செய்யும் முறை**

முதலில் ஒடியல் மாவை ஒரு சிரு பாத்திரத்தில் கொஞ்சம் நீர் விட்டு ஊறவிடவும். நீரில் மிதக்கும் தும்புகளை அகற்றி மாவை நன்றாக நீரில் கரைக்கவும். 2மணி நேரமாவது ஒடியல் மா ஊற வேண்டும். செத்தல் மிளகாய் எனப்படும் காய்ந்த மிளகாயை நீர் தெளித்து அம்மியில் நன்றாக விழுது போல் அரைக்கவும். காரம் அதிகமாக இருக்க வேண்டுமானல் 3 அல்லது 4 காய்ந்த மிளகாய் சேர்த்து அரைக்கவும். பழப் புளியை ஒரு சிறிய பாத்திரத்தில் நீர் விட்டு அதிகம் நீர்த்தன்மையில்லாமல் கரைத்து வைக்கவும்

இன்னொரு பெரிய பாத்திரத்தில் சரியான அளவு நீர் விட்டு கொதிக்க வைக்கவும். (கூழில் நிறைய பொருட்கள் போடுவதால் அவை நன்றாக வேகுமளவுக்கு தண்ணீர் அதிகமாய் இருக்க வேண்டும். அதே போல் பாத்திரமும் பெரிதாக இருந்தால் தான் பொருட்கள் அடி பிடிக்காமல் பதமாக இருக்கும்.) அதனுள் கழுவிய அரிசி, பயற்றங்காய், பலாக்கொட்டைகள், மீன்துண்டுகள்,மீன்தலைகள், நண்டு, இறால்,நெத்தலி கருவாடு, கீரை ஆகியவற்றை போட்டு நன்றாக அவிய விடவும்.

நன்றாக அவிந்ததும் ஒடியல் மா (நீரை வடித்துவிட்டு கரைசலான ஒடியல் மாவை மட்டும் எடுக்கவும்.) அரைத்து வைத்துள்ள மிளகாய் விழுது, கரைத்த புளி என்பவற்றைப் போட்டு கலந்து சுவைக்கேற்ப உப்புச் சேர்த்து குறைந்த நெருப்பில் வைத்து கூழ் தடிப்பானதும் சூடாக பரிமாறவும்.மிகவும் நல்லது

**ஒடியல் கூழ் அருந்தும் முறை**

ஒடியல் கூழ் அருந்துவதில் சில நுனுப்பங்கள் இருக்கின்றன, ஒரு சாதாரண பாத்திரத்தில் ஒடியல் கூழை விட்டு குடித்தால் அதன் சரியான சுவை தெரியாது, அதானால் பனை ஓலையில் பிளா தயாரித்து அதில் கூழ் குடிக்கும்போது அதிக சுவையைத் தரும். அடுத்ததாக உறவினர் நண்பர்களோடு சேர்ந்து, அதாவது பலருடன் சேர்ந்து கூழ் குடிக்கும் போது அதன் உணர்வுகள் புரியும். கூழ் குடித்து அரை மணி நேரத்துக்கு முன் நீர் அருந்தல் ஆகாது. கூழ் குடிக்கும் போது பேச கூடாது, காரணம் கூழில் உள்ள மீன் முறகள் தொண்டை பகுதியில் போறுக்க கூடும், சிறு குழந்தைகள் கூழ் குடிக்கும் போது அதிக கவனம் எடுக்கவும், காரணம்: கூழின் கார தன்மை, மற்றும் கூழில் இருக்கும் மீன் முள்ளுகள். கூழ் எப்பொழுதும் அதிக சூடாகவே குடிக்க வேண்டும்.

# 'பொப்பிசைப் பிதா' நித்தி கனகரத்தினம்

## சிறப்புப் பகுதி



இலங்கையின் பொப்பிசை வரலாறு

Multifaceted Nithi Makes Music Too


என் திருமணத்துக்கு பல்லி மிட்டாய் வாங்கி வந்திருந்த செல்லம்மா
சிட்டுக் குருவியாய் சிறகடித்து திரிந்த காலம்.......

*Nithi Kanagaratnam's Love Affair with Canberra*
Nithy Thurairajah
Editor - Kavolai

To the Baila Beat

ஐம்பது ஆண்டுகளாக சின்ன மாமியின் சின்ன மகளைத் தேடும் நித்தி கனகரத்தினம்!

காவோலையான முதுமை!
க.கணேசலிங்கம்



அம்மாவின் கடிதம்
யோகன்

அம்மா
ஆழியாள்





விடை காணமுடியாத வினா
யோகேஸ்வரி கணேசலிங்கம்

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

தாய் மடி தேடி
இரவுச்சூரியன்

ஆருத்திரா தரிசனம்
சித்தாந்தரத்தினம், கலாநிதி க.கணேசலிங்கம்

*The Dance of Siva*
*Ananda K. Coomaraswamy*

சினிமா விமர்சனம்



# இலங்கையின் பொப்பிசை வரலாறு

"பொப் எனும் இசை வடிவம் போத்துக்கேயர்களினால் 15 ஆம், 16ஆம் நூற்றாண்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டு பிரபலப்படுத்தப்பட்டதாக அறியமுடிகின்றது. இந்த வகையில் இலங்கை 1505ம் ஆண்டு போத்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்டு 1658 வரை போர்த்துக்கேயர்களால் ஆளப்பட்டது. அந்தக் காலங்களில் இலங்கையில் வாழ்ந்த இந்து, பௌத்த சமயங்களைச் சேர்ந்த மக்களை கட்டாயமாக கிறிஸ்தவ மதத்திற்கு மாறவேண்டும் எனப் போர்த்துக்கேயர் ஆணை பிறப்பித்திருந்தனர். இதன் காரணமாக கோவில்கள், விகாரைகள் என்பன இடிக்கப்பட்டு, இவர்கள் கிறிஸ்தவ துதிகளைப்பாடவேண்டும் என கேட்கப்பட்டனர்.

மேற் கூறிய காரணங்களால் இடிக்கப்பட்ட ஆலயங்கள், விகாரைகள் இருந்த இடங்களில் தேவாலயங்கள் கட்டியெழுப்பப் பட்டது. அப்போதைய இலங்கை மக்களை உடனயடியாக முழு கிறிஸ்தவர்களாக மாற்றுவது சிரமம் என உணர்ந்த போத்துக்கேயர், தேவ ஆராதனைகளுக்கு தமது வழக்கத்தில் இருந்த பொப் இசையினை பயன்படுத்த தொடங்கினர். இங்கு போத்துக்கேயர்களால் 16ஆம் நூற்றாண்டில் விதைக்கப்பட்ட பொப் இசை அத்திவாரத்தின் சாயலே இன்றும் இலங்கையின் பொப் இசையில் பாரிய தாக்கத்ததை ஏற்படுத்தி வருகின்றது.அன்றில் இருந்து ஊர்ப்பாடகர்கள், அண்ணாவியர்கள் வாயிலாக, சில தமிழ் பொப் இசைப் பாடல்கள் செவிமடுக்கப்பட்டு வந்துள்ளன. அந்தக்காலங்களில் பெரும்பாலும், திருமண வீடுகளில் சில பாடகர்கள் இப்படியான பொப் பாடல்களை பாடிவந்திருந்தனர்.

"சின்னத்தம்பி சீமானாம் சிப்பிலி சந்தைக்கு போனானாம்"
அங்கே ஒருத்தியை கண்டானாம் கும்மட்டம் தம்பட்டம் போட்டானாம்"
என்று ஆரம்பிக்கும் பாடலும்,
அன்றைய போத்துக்கேய ஆட்சியாளர்களையே எதிர்ப்பது போன்று அமையும் பாடலான
"என்ன பிடிக்கிறாய் அந்தோனி?
எலி பிடிக்கிறன் சிஞ்சோரே!
பொத்தி பொத்தி பிடி அந்தோனி!!
பூறிக் கொண்டோடுது சிஞ்சோரே"
போன்ற பாடல்கள் நாம் அறிந்த வகையில் போத்துக்கேயர் காலங்களிலேயே தமிழில் உருவாகிய பிரபலமான பொப்பிசைப் பாடல்கள்.

ஆகவே இது போன்ற பல பாடல்கள் கால மாற்றங்களால் அழிந்துபோய்விட்டன. அதன் பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் (1815 -1948), மேலைத் தேச நாகரிகங்கள் அறிமுகப்படுத்தப் பட்டதும், ஒரு முழுமையான நிர்வாக அமைப்பு முறை வந்ததும், இசை வடிவத்தில் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தின. ஆங்கிலேயர்களின் பாண்ட், மொங்கட் ட்ரம், டிஸ், ட்டம்பற் ட்ரம்,போன்ற வாத்தியங்கள்,இந்த இசையில் பெரும் தாக்கத்தின்னை ஏற்படுத்தின. ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் பொப் இசை ஒரு புது வேகத்துடன் அரங்கேற ஆரம்பித்தது. குறிப்பாக அந்த காலங்களில் பல கார்னிவேல்களில் (விசேட நிகழ்வுகள்), விசேட சிறப்பு நிகழ்சிகள், பீஸ்ட் வைபவங்கள் போன்ற நிகழ்வுகளிலும், அப்போது இலங்கையில் பரபல்யம் பெற்ற "ருவிஸ்ட்" என்ற அட்டத்தின் போதும் இந்த பொப் இசை மேற்கத்தேய இசைக் கருவிகளின் பக்கவாத்தியத்துடன் புது உத்வேகத்துடன் அரங்கேறியது.

அதன் பின்னர் மீண்டும் பல விழாகளிலும், திருமணம் போன்ற வீட்டு விசேடங்களுக்கும் இந்த பாடல்கள் இசைக்கப்பட்டன. இலங்கையின் சுதந்திரத்தின் (1948) பின்னரான காலங்களில், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் பல புதிய இசைக் குழுக்கள் ஆரம்பமாகி மேற்படி பொப் இசையினை, வழங்கி மிகப் பிரபலமாகின. இதில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவர் கண்ணன் நேசன் அவர்கள். இவ்வாறு 1950 களின் கடைசி பகுதிகளில் தமிழ் பொப் இசை இசைக் குழுக்களால் இசைக்கப்பட்டு மக்கள் மத்தியில் பிரபலமாகத் தொடங்கியது. இருப்பினும் தென்னிந்திய திரை இசைக்கு பலரும் முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்து காரணத்தால் ஈழத்தில் தமிழ் திரையிசையின் தாக்கம் ஏற்றபட்ட காரணத்தினால் 1960 களில் பொப் இசையினை மட்டுப்படுத்தப்பட்ட அளவே கேட்ககக் கூடியதாக இருந்தது.

அதன் பின்னர் இலங்கையில் நிகழ்ந்த பல அரசியற் குழப்பங்கள், 1958ம் ஆண்டு கலவரம், ஸ்ரீமா ஆட்சியில் ஏற்பட்ட பஞ்சம் என்பனவற்றால் மேற்படி தமிழ்ப் பொப் இசைக்கும் பஞ்சம் ஏற்படலாகிற்று. 1977 ஆம் அண்டு ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் ஆட்சியை கைப்பற்றி இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கையினை கொண்டு வந்து;அனைத்தையும் நவநாகரிகப்படுத்தி, மேலைநாட்டு கலாச்சாரங்கள், அப்படியே கொழும்புக்கு வந்து

இன்றும் நீங்கள் முணுமுணுக்கும்.நித்தியின் "சின்ன மாமியே உன் சின்னமகள் எங்கே" ,"கள்ளுக்கடை பக்கம் போகாதே" "குடத்தனையில குடியிருக்கிறது" போன்ற பாடல்கள் வெளியாகி மிகப் பெரும் வெற்றி பெற்றன. அவை இலங்கையில் மட்டுமன்றி இலங்கை வானொலியில் ஒலிபரப்பட்டு இந்தியாவிலும் பெரும் தாக்கத்தை எற்படுத்தி இந்தியாவிலும் வெற்றிக்கொடி நாட்டின. நித்தி கனகரத்தினைத் தொடர்ந்து ஏ.ஈ.மனோகரன்; அமுதன் அண்ணாமலை, எஸ். இராமச்சந்திரன். வி.முத்தழகு, ஸ்டெனி சிவாநந்தன், அன்சார், என்.இமானுவேல் போன்றோர் ஈழத்து பொப்பிசைச் துறைக்கு வந்து சேர பொப்பிசை வளரத் தொடங்கியது.

பல இசைக் குழுக்களும் காலப் போக்கில் பொப் இசையினுள் தடம் பதிக்க பல பாடல்கள் வெளிவரத் தொடங்கின. இக் காலம் ஈழத்து பொப்பிசையின் பொற் காலம் என்று கூட சொல்லலாம். அன்றைய காலங்களில் இலங்கையில் பொப்பிசை, நகைச்சுவை, மற்றும் சில கலைகள் இலங்கை மண்ணியற் பண்பு, இலங்கை மொழி வழக்கு, என்பவற்றை மட்டுமன்றி சமுதாய சீர்திருத்தங்களையும் முன்னிறுத்துவதாக இருந்தன என்றால் மிகையாகாது. இதற்கு "நித்தி கனகரத்தினத்தின் கள்ளுக்கடை பக்கம் பொகாதே!" என்ற பாடலை உதாரணமாகச் சொல்லலாம். அந்தக் காலங்களில் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் பெரியவர்கள், படித்தவர்கள், பாமரர்கள் என்ற பேதங்கள் இன்றி அனைவரும் கள்ளு அருந்துபவர்களாக இருந்தனர்.குறிப்பாக மாணவர்கள் பாடசாலைகளில் உயர்கல்வி கற்கும்போதும்,பல்கலைக் கழகங்களில் இருந்தும் கள்ளுக்கு தவறணைகளுக்கே நேரடியாக போபவர்களாக இருந்தனர்.இந்த காலங்களிலேயே நித்தி கனகரத்தினத்தின் " கள்ளுக்கடை பக்கம் போகாதே, காலைப்பிடித்து கெஞ்சுகின்றேன்" என்ற பாடல் வெளியானது.

இதில் இன்னும் ஒரு சிறப்பு என்னவென்றால் இந்தப்பாடல் இலங்கை வானொலி மூலம் தமிழ் நாட்டிலும் பரவி, அப்போது முதலைமைச்சராக இருந்த எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களால், தமிழக மதுவிலக்கு பிரச்சாரத்திற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தமையாகும். பின்னர் இலங்கை பொப் இசைப் பாடல்கள் தென்னிந்திய தமிழ் திரைகளிலும் இடம்பெறலாயிற்று.

ரஜனிகாந்த் நடித்த அவசர அடி ரங்கா, எஸ்.பி. பாலசுப்ரமணியம் நடித்த சிவரஞ்சனி விஜயகாந்த் நடித்த ரமணா - முதலான படங்களிலும் நித்தியின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
பந்தயம் படத்தில் 'சின்னமாமி' பாடலை விஜய் அண்டனி ரீமிக்ஸ் பாடலாக மாற்றியமைத்திருக்கிறார். அதற்கு முன்பு தேவா படத்தில் மன்சூர் அலிகானும், மணிவண்ணனும் பாடுவது போல ஒரு பாடல் 'சொல்லுங்க மருமகனே...' என்ற எனது பாடலின் சில வரிகளை மாற்றி அந்தப் படத்தில் பயன்படுத்தியிருந்தார்கள் 'கண்டேன் சீதை'யை படத்தில் விவேக் பாடும் பாடல் காட்சியில் அமெரிக்காவில் மாப்பிள்ளைன்னா பொண்ணு
கேட்கிறாங்க...' என்ற பாடல் வரும். அந்தப் பாடலை ஒரு இருபது வருடங்களுக்கு முன்பாகவே லண்டனில் மாப்பிள்ளைன்னா பொண்ணு கேட்கிறாங்க... வெளியானது.

1977 அம் அண்டு, "அவர் எனக்கே சொந்தம்"என்ற படத்தில் "சுராங்கனி, சுராங்கனி" என்ற பாடலை இளையராஜா உட்புகுத்தினார், இதனோடு நின்றுவிடாது. இந்த இலங்கை பொப் இசையை ஒட்டியதாக, "அண்ணே அண்ணே சிப்பாயண்ணே", "உப்புமா கிண்டி வையடி", பட்டண்ணா சொன்னாரண்ணா, போன்ற பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின. இன்றும் பல பொப் பாடல்கள் மீள் கலவை இசை வடிவில் (ரீமிக்ஸ்) சில திரைப்படங்களில் வருவதை நீங்கள் பார்த்திருக்க முடியும்.

எனினும், 1983 களின் பின்னதான இலங்கையின் இனப் பிரச்சினை காரணமாக, கலைஞர்கள். பாடகர்களின் வெளியேற்றம், தென்னிந்திய சினிமா பாடல் மோகம் போன்ற பல காரங்களினால் இன்று இந்த இலங்கை பொப் பாடல்களின் வருகையானது குறைவடைந்து செல்கின்றது. இதற்கு உயிர் கொடுத்து அதை ஒலிபரப்பி தமது பாரம்பரியங்களை பேணிப் பாதுகாத்து அடுத்த தலை முறையிடம் கொண்டு செல்லும் நல்ல முயற்சினைச் செய்ய முடியாதவர்களாக இலங்கையிலுள்ள அரச, தனியார் வானொலிகள் விளங்குகின்றன. எனினும், மேற்படி பொப் இசையில் சிங்களவர்கள் இன்று சிகரத்தை அடைநதுள்ளனர்.சிங்கள ஊடகங்களும், பத்திரிகைகளும் அதற்குரிய கௌரவங்களை கொடுத்து அவ் இசையினை ஊக்குவிக்கின்றன.

எது எப்படியோ, இன்று புலத்தில் புலம்பெயர்ந்து வாழும் மேற்படி பொப்பிசை திலகங்களை தொடர்பு கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களாவது தமது இலங்கைத் தமிழர்களின் தனிச் சிறப்பான பொப் இசையினை மீண்டும் துளிர்விக்க முயற்சி எடுக்க வேண்டும்!

# Multifaceted Nithi Makes Music Too

K.S.Sivakumaran
IMPRINT




Influenced by the Pop music scene in the West, a group of Lankan young people got together to popularize Tamil songs in a way deviating from the classical and folk modes. Critics then thought that Tamil popular music has come to stay in Lanka. But it was not to be as it was short-lived. And yet it encouraged many young people to perform differently even though based on Tamil film songs.

Back to Niththi Kanagaratnam. His first appearance as a Pop singer was at the Thinakaran (our sister paper) Festival in 1967. He exhibited his talents as a singer, lyricist, composer and a guitarist. He remains a singer for the past 43 years. He told us two weeks back that he had sung in Tamil films produced in India, mentioning films like Panthayam, London Maapillai and Kandaen Seethaiyai. He has six albums of music to his credit.

Studying in the English medium in Yaalpaanam (Jaffna) and Colombo mainly in the science stream taught for sometime in Central College and Ooraavathurai (Kayts) St. Anthony's College science subjects. That was during 1966-67. Then he joined the then Hardy Technical Institute in Amparai specializing in Botany and qualifying with a degree in Agriculture. Later he obtained his Masters degree.

When he was young he used to visit Christian churches to hear music and also attended Saiva (Hindu) Thevaram Pannisai (devotional hymns) classes in Jaffna. Beginning from his 10th year he was absorbingly interested in music. Enjoying reading poetry in Tamil he made attempts to compose music for them and even vocalized those lyrics.

"I learned to write lyrics, compose tunes and sing those in my spare time," he said. He could even draw and paint at a young age, he prided himself. However he admits that he has not learned music in a scientific sense but could understand the nuances of musical notes by hearing only.

In 1965 he entered the music world in English. He claims that he has sung with the late Rukmani Devi. Guitar was an instrument he tried to master playing. In countries abroad he plays the guitar and sing. In the west he puts himself as a singer of western 'pop' music, he underscored.

He is thankful to fellow musicians and singers for the support they give him. That include the late Rukmani Devi, Indrani Perera, Clarence Wijeratne, Claude Fernando (who composed music for Nith's lyrics), the late Mohideen Beig, Papa Miskin and not forgetting the Lankan Tamilian pop singers in the calibre of A. E. Manoharan (who popularized the evergreen Sinhala song: Surangani - in Indian Tamil films), Kalavathy Chinnasamy, Rajendran, Sathiyamoorthy, Muthalagu (who is a popular singer in Sinhala as well) and the famous duo Parameas-Kones from Thirkoanamalai (Trincomalee) Nithi Kanagaratnam informs that so far he has composed music for 33 of his own lyrics and sung 24 of them in public performances. His lyrics speak of love and family relationships he explained. He did not have the opportunity to sing songs written by others in his musical career of 43 years.

He recalls that when 'Pop' Music came into the scene in Tamil Stanley Sivananthan, A E Manoharan, Amuthan Annamalai, S Ramachandran, Emmanuel and K S Balachandran were in the forefront with him. He pays tribute to the Tamil Commercial Service of the Radio Lanka for popularizing Lankan Tamil Pop Music.

He mentions the names of some presenters of that period- B H Abdul Hameed (he is now internationally known host in Tamil Musical programs the world over both on stage and the TV), Nadarajasivam (head of a Tamil private radio), Puvanalojini Nadarajasivam, Mylvaganam Sarvananda, Ramadas (popular actor and producer of plays in Tamil for stage and radio), Appukutty Rajagopal (now in U K) and Kumar Kanagaratnam (electronic engineer) He opines the Sinhala Pop Music scene has reached a high degree of sophistication and music all over the world has assumed new dimensions with modern electronic devices. "In my time we didn't have such facilities" he regrets. He advises that the world is just one entity and spiritual inclination could gorge unity amongst us.

Presently Nithi Kanagaratnam lives in Australia and is engaged in researching in Etymology on the roots of Tamil words in the Pacific Ocean area. He wants to write a thesis to an Indian University on the subject.



அன்றும் இன்றும் ஆர்வம் காட்டுகின்றேன்

சின்ன மாமியே புகழ் நித்தி கனகரட்ணத்துடன் ஓர் நேர்காணல்

ஆண்டு 70களில் ஈழத்து கலைஞர்களின் புகழின் உச்சியில் இருந்த பொப் இசை பிதா திரு. நித்தி கனகரட்ணம் அவர்கள் தற்போது melbourne இல் வசித்து வருகிறார். பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு பல சேவைகள் ஆற்றிவருகின்றார். பழகுவதற்கு மிகவும் நல்லவர். சின்னமாமியே புகழ் திரு. நித்தி கனகரட்ணத்துடன் ஓர் நேர்காணல்

வணக்கம் திரு நித்தி கனகரட்ணம் அவர்களே!

தமிழ் அவுஸ்திரேலியன் தமிழ் சஞ்சிகைக்காக ஒரு கலந்துரையாடலில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி.

வணக்கம் பகிரதன்! உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி.

ஆண்டு 70களில் உங்கள் பாடல்களை கேட்டு ஆடி ஓடி வளர்ந்த இளைஞர்கள் பலர். அதில் நானும் ஒருவன். உங்கள் இசைப்பயணம் ஆரம்பத்தை பற்றி பகிர்ந்து கொள்ளலாமா?

நிச்சயமாக. எனது இசைப்பயணம் 1950ம் ஆண்டிலேயே வேம்படி மகளிர் கல்லூரியில் (அப்போது கலவன் பாடசாலை) சிறுவனாக படிக்கும்போதே ஆரம்பித்துவிட்டது. அதைத் தொடர்ந்து கொழும்பில் முதல் முதலாக சரஸ்வதி மண்டபத்திலும் யாழ் மத்திய கல்லூரி மாணவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இசைக்குழுவிலும் ஆங்கிலத்தில் முதல் முதலாக பாடியிருந்தேன். இந்த நிகழ்ச்சி யாழ் திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து கொழும்பில் மேற்கத்திய இசைக்குழுவி...

பாடிவந்திருக்கின்றேன்.

**உங்கள் புகழ் பெற்ற பாடல் 'சின்னமாமியே உன் சின்னமகள் எங்கே?' உருவானது பற்றி...**

அம்பாறை HARDY COLLEGE மாணவர்கள் வெளி பயிற்சி பட்டறைக்காக செல்வது வழமை. அந்த வேளையில் ஒரு நண்பரால் கவிதை வடிவமைக்கப்பட்ட வரிகளை, பின்பு சொற்களை மாற்றி இசை வடிவில் பாடலாக அமைத்திருந்தேன்.

அதை மேடையில் பாடியபோது பெரும் வரவேற்பை பெற்றது. தொடர்ந்து யாழ் பரியோவான் பாடசாலைக்கும் மத்திய கல்லூரிக்கும் நடைபெற்ற துடுப்பெருந்தாட்ட நிகழ்வின்போது ஒரு பரிட்சார்த்தமாக பாடியிருந்தோம். மிகவும் சிறுவர் முதல் பெரியோர் வரை யாழ். பேச்சு தமிழில் அமைந்திருந்த பாடல்களை ரசித்து பார்த்தபோது ஏற்பட்ட உற்சாகத்தில் அமைந்தவைதான் பல பாடல்கள்.

இதில் சின்னமாமியே, ஐயயோ ஊரே கேட்டுபோச்சு, கள்ளுக்கடை பக்கம் போகாதே போன்ற பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

**ஆண்டு 70களில் தொடங்கி இன்று வரை இசையின் மடியில் தவழ்ந்துவரும் ஒரு தமிழ் கலைஞர் நீங்கள். அந்த வகையில் இன்றைய கலைஞர்களுக்கு உங்கள் அனுபவத்திலிருந்து கூறும் அறிவுரை அல்லது வேண்டுகோள் என்ன?**

நல்ல கேள்வி. எந்த கலைஞருக்கும் முதலில் தற்பெருமையோ, தலைக்கனமோ வரக்கூடாது. அதாவது "கட்டில் ஏறுமுன் கால் ஆட்டக்கூடாது" என்பார்கள். அதே போல் ஏறும் ஏணியையும் உதைக்க கூடாது. இங்கு ஒன்றை கூறவேண்டும். இலங்கையில்தான் முதல் முதலில் FARFESA என்ற KEY BOURD மூலம் பாடலை பதிவு செய்திருந்தார்கள். இந்த வகையில்தான் சின்னமாமியே பாடலும் பதிவு செய்யப்பட்டது.

**உங்கள் தற்போதைய கலைப்பயணம் நிலைப்பாடு பற்றி தெரிந்து கொள்ளலாமா? குறிப்பாக நீங்கள் ஈழத்தில் பல நாட்களை கழித்துவருகின்றீர்கள். அங்கு பல சமூக பணிகளில் ஈடுபட்டிருப்பதை அறிந்துள்ளோம். அது பற்றி...**

முதலில் கலைப்பயணம் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளது. பல வெளி நாடுகளில் கலைநிகழ்ச்சிகளை வழங்கியிருந்தேன். பல வருடங்களுக்கு பின்பு யாழ். அரியாலை விளையாட்டு கழகம் வழங்கிய தமிழ் புது வருட நிகழ்வின் போது பல்லாயிரக்கணக்கான ஏனதூர் மக்களின் முன் குறிப்பாக இந்த நிகழ்வின்போது யாழ் இந்து கல்லூரி மாணவர்கள் மிகவும் ஊக்கத்துடன் எமது படைப்புகளுக்கு முன்னிடம் கொடுக்க வேண்டும் என்று ஆவலாக உள்ளனர். விரைவில் ஒரு இசைத்தட்டை வெளியிடவும் உள்ளார்கள். அதைத்தவிர ரூபவாகினி, சக்தி TV போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நடுவராக பணிபுரிந்தேன்.

அண்மையில் ATHYS JEWELLERS தயாரித்து வழங்கும் "பாடுவோர் பாடலாம்" நிகழ்ச்சியிலும் நடுவராக பணி புரியவுள்ளேன்.


**நல்லது நித்தி அவர்களே! இவற்றை விட உங்களுக்கு வேறு துறைகளில் ஆர்வம் உள்ளதா? அப்படியாயின் அவை பற்றி சற்று கூறுங்களேன்.**

ஆம், தமிழ்மொழியின் ஆரம்பம் பற்றியும், வேறு மொழிகளில் அதன் சுவடுகள் பற்றியும் ஆய்வு செய்து ஒரு நூலை தயாரித்து வருகின்றேன். விரைவில் அது வெளிவரும்.

**ஆண்டு 70களில் புகழின் உச்சியில் இருந்த நீங்கள் இன்று 70 வயதில் melbourne பல்கலை கழகத்தில் பயில்வதாக அறிந்தேன். அது பற்றி...**

ஆம் இயற்கை வைத்தியத்துறையில் படித்து பட்டம் பெறுவதற்கு படித்து கொண்டிருக்கின்றேன்.

எமது கலைகளை நன்கு [illegible] அறிந்து கற்கின்றனர். அறிவை பகிரும் செயலில் அன்றும் இன்றும் ஆர்வம் காட்டும் இவர் என்னை தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் தொலைபேசி இல - 0432 288615 இல், அவுஸ்திரேலியன் தமிழ் சஞ்சிகை நிர்வாகத்தினூடாக தொடர்பு கொள்ளலாம். இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய Tamil Australian சஞ்சிகைக்கும், உங்களுக்கும் நன்றிகளும்,



வாழ்த்துகளும்.

அன்றைய நாட்களில் உங்கள் முழு நேர நிகழ்ச்சிக்கென பல அரங்குகள் நிறைந்திருந்தன. அந்த வகையில் தற்போது ஒரு நிகழ்ச்சியை வழங்க வேண்டும் என்பது ஆவல். விரைவில் அது எல்லாம் வல்ல இறைவனால் நிறைவேறும் என்று கூறி அவுஸ்திரேலியன் தமிழ் சஞ்சிகையின் சார்பில் விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். ●




# Nithi Kanagaratnam's Love Affair with Canberra

**Nithy Thurairajah**
**Editor - Kavolai**

*Nithi Kanagaratnam is no stranger to Canberra and has over the years has performed at various functions both at a personal level attending family functions and at community events. Although this is not a comprehensive account of Nithi's contribution to musical development in Canberra, I nevertheless I like to recount some of the key moments that defines Nithi's love affair with Canberra. One of the first concerts was organized by me at a bar 'Shadows' in Woden in the late 1990s. Another key moment was when Nithi was invited by then Canberra resident Meganathan in 1997 to perform with the legendary Tamil Cinema playback singer L.R Easwary at his book launch ' Oru Nadikanin Uruvakkam' This was a Tamil translation by Meganathan of a play by Stanislavski.*

*Nith's greatest contribution to musical development in Canberra was when he set music and trained a group of amateur singers (both males and females) from the Canberra Tamil community to perform a Tamil Musical comedy titled 'Colombo Mail' with a script written by Melbourne based Mavai Nithianandan. The singing training was intense during Nithi's visits to Canberra. Nithi identified hidden talents of Canberra singers and trained them to very high standard with the assistance of Tamil Singing teacher Thamilselvi (Selvi). The first performance was in aid of the Canberra Murugan Temple in October 2001 organized by Mr Solomon and Mrs Thamilselvi Yogananthan. The key narrators were Mavai Nithianandan and Dr Abhirami Yoganathan. In November 2001, the Canberra based singers travelled to Melbourne to perform at the Bharathi School Vizha at the invitation of Mavai Nithianandan. 'Colombo Mail' was modified to include some dramatic scenes to the original musical script. Some of the males who performed were Sukumar, S. Gnanasingham, Thirunavukarasu, Shivakkumar Yogananthan, Dr Manivannan, Nithi Thurairajah and Saravanan. The females were Thamilselvi , Jayanthi Kumaranayagam, Sukanya and Mathubashini.*





This was followed by a concert in 2002 at a professional theatre at ANU organize by the Australian Tamil Foundation Canberra (ATFC) with a grant from the ACT Government. The key narrators in this instance were Mavai Nithianandan & Ms Mathubashini Ragupathy.

On a personal note, Nithi has shared some of my happiest and saddest moments in my life. He performed at my daughter's first birthday in Melbourne and then again at my 50th birthday celebrations in Canberra accompanied by Radkika Sukumar on the key board and Bernard Parker on the trumpet. On a sad note, Nithi attended my late wife Sukanya's funeral on 8 August 2011 in Canberra and sang at her funeral.


Both my wife and I have cherished Nithi's company, singing and discussions on the development of Tamil pop music in Sri Lanka and in Australia. Many of these discussions tend to go well in to the very early hours of the morning. Nithi's songs reflects some of the contemporary cultural and social values and dilemmas and is mainly drawn from Tamil folk song repertoire. The diction is distinctly Sri Lankan Tamil and in many ways provided a common cultural and musical theme to all communities from Sri Lanka. Nithi is a generous human being and has devoted personal time and resources for his visits to Canberra.

Nithi always lamented that there were no patent rights in Lanka and that he could not patent his compositions but his generosity comes through when he says he is happy that other singers have sung and popularised his songs. In my opinion, there is really no Sri Lanka Baila pop concert without at least a single song from his albums.


**(This is personal note and should not be seen as necessarily reflecting the views of the TSCA).**





































## At the Bharathi School Vizha—Melbourne










இசை

### என் திருமணத்துக்கு பல்லி மிட்டாய் வாங்கி வந்திருந்த செல்லம்மா

# சிட்டுக் குருவியாய் சிறகடித்து திரிந்த காலம்.......

"எனக்கு சின்ன வயதில் மணலில் ஆனா எழுதுவதென்றால் ரொம்பவும் பயம். ஒரு நாள் அந்த மணலில் ஒரு குண்டூசி கிடந்து என் விரலில் குத்திக் கிழித்துவிட்டது. அன்றிலிருந்து மணலில் எழுத்து வரைவது என்றாலேயே எனக்குப் பயம். தயாளம் ராஜா தான் எனக்கு 'அ' கரம் கற்பித்த ஆசிரியை. எனது வீடு யாழ்ப்பாணம் உரும்பிராய்.

இரண்டாம் குறுக்குத் தெருவில்தான் நாங்கள் வசித்தோம். எங்கள் வீட்டைச் சுற்றி நிறைய கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள். எனது அப்பா பெயர் கனகரட்ணம். அம்மா ஆச்சிமுத்து" என்று தமது ஆரம்பகாலம் பற்றி சொல்லத் தொடங்கிய நித்தி கனகரட்ணம், தமது முதல் பாடசாலை பிரவேசம் என்று அந்த இனிமையான நாட்களின் நினைவுகளை அசைபோடத் தொடங்கினார்.



"வேம்படி மகளிர் கல்லூரி ஐந்தாம் ஆண்டு வரை கலவன் பாடசாலையாகவும் இயங்கி வந்தது. நான் பள்ளிக்குச் சென்ற முதல் நாள் அப்பா எனக்கு வாங்கித் தந்த மிதியடிக் கட்டை செருப்பை அணிந்து, சன்சூட் போட்டுக்கொண்டு வீதியில் அம்மாவின் கையை பிடித்துக்கொண்டு நடந்தேன். என் காலில் கிடந்த அந்த மிதியடி கட்டை டக், டக் என்று ஓசை எழுப்ப எனக்கு ஒரு இனம் புரியாத பூரிப்பு ஏற்பட்டது. எனது வகுப்பாசிரியையாக இருந்தவர் துரையப்பா டீச்சர்.

அப்போது என்னோடு ஒரே பெஞ்சில் அமர்ந்திருந்த நண்பர்களான லக்ஷ்மன், சத்தியநாயகம், சித்தார்த்தன், ஜெகநாதன், தனலால் ஆகியோர் என் நினைவில் அப்படியே இருக்கிறார்கள்...."என்ற நித்தியிடம் நீங்கள் குட்டி பையனாக இருந்தபோது செய்த குறும்பு ஏதேனும் ஞாபகத்தில் இருக்கிறதா என்று கேட்டோம்.

"இரண்டாம் வகுப்பில் படிக்கும்போது நானும் லக்ஷ்மனும் அமர்ந்திருக்க எங்களுக்கு நடுவில் வினோதினி என்ற மாணவியும் அமர்ந்திருப்பா. அப்படி அவள் எங்களுக்கு நடுவில் அமர்ந்திருப்பது எங்களுக்குப் பிடிக்காது. எனவே நாங்கள் இருவரும் அவளை நெருக்குவோம். அவள் அழுவாள். இப்போ அந்த வினோதினி டொக்டராக ஆஸ்திரேலியாவில் இருக்கிறா. அப்புறம் பாடசாலையின் பின்புறம் உள்ள மறைவில் எனது நண்பர்கள் சிகரட் பிடிப்பார்கள். அதில் சித்தார்த்தன் 'ஆடத்' சிகரெட்டை கொண்டுவருவான் கொஞ்சம் விலையுயர்ந்த சிகரெட் அது. (சித்தார்தனின் அப்பா தான் யாழ். வின்சர் தியேட்டரின் உரிமையாளர்)அவன் எனக்கும் சிகரெட் தருவான். நான் பயம் காரணமாக வாங்க மறுத்து விடுவேன். பிறகு எனக்கும் அவர்கள் மாதிரி சிகரெட் பிடிக்க ஆசை வந்தது. ஒருநாள் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் ஒரு காகிதத்தில் தும்பை சுருட்டி பீடி மாதிரி செய்து குடித்துப் பார்த்தேன். நெஞ்செல்லாம் எரிந்தது.

எங்கள் பாடசாலையில் டார்க்ரூம் என்று ஒரு அறை இருந்தது. அது எப்போதும் இருட்டாகவே இருக்கும். 'பாடசாலையில் யாராவது தப்பு செய்தால் 'அந்த டார்க் ரூமில் போட்டு மூடிவிடுவோம்....!' என்று ஆசிரியர்கள் மிரட்டியதால் நான் அதற்கு பயந்து எனது சேட்டைகளை நிறுத்திக்கொண்டேன். எனது வீட்டுக்கு முன்னால் உள்ள வீட்டில் தர்மராஜா என்று ஒருவர் இருந்தார். அவர் நல்ல நகைச்சுவையாளர். நாடகம் மாதிரி நடித்து நகைச்சுவைக் கதைகள் சொல்வார்.

அவரோடு சேர்ந்து நாங்களும் ஆடுவோம். எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ஆரியமலர் டீச்சர் தான் எங்களுக்கு மேக் அப் போடுவார். தர்மராஜா தியேட்டரில் வெட்டி வீசும் பிலிம் ரோல்களை எடுத்து வந்து டோர்ச் லைட் மூலம் ஒளிப்பாய்ச்சி படம் காட்டுவார். வீட்டில் கட்டிலுக்கு கீழே தான் இருட்டாக இருக்கும். அங்கேதான் படம் காட்டுவார். நாங்களும் கட்டிலுக்கு கீழே படுத்துக்கொண்டு படம் பார்ப்போம். நான் நாலு வயதுவரையும் வீட்டில் உடை அணியாமல் இருப்பேன். என் வீட்டு வாசலில் நிர்வாணமாக நான் நிற்பதை அந்த வழியாக கருப்பு குடையுடன் வரும் கிரேஸ்வடிவேலு டீச்சர் பார்த்து விட்டு இனி நீ உடுப்பு போடாமல் இருந்தால் இந்தக் குடைக்குள் போட்டு தூக்கிட்டு போய்விடுவேன் என்று மிரட்டுவார். அதனால் கிரேஸ் வடிவேலு டீச்சர் வருவதை கண்டாலே வீட்டுக்குள் ஓடி பதுங்கி விடுவேன். ஒரு நாள் கிரேஸ் வடிவேலு குடையுடன் வருவதை கண்ட நான் ஓடிச் சென்று வீட்டுக்குள் பழைய

"பதுங்கிக் கொண்டேன். வீட்டுக்குள் வந்த கிரேஸ், எங்க போயிட்டான் குட்டிப்பையன் என்று வீடெல்லாம் தேடிப் பார்த்தார். அம்மாவும் கூடவே தேடிப் பார்த்தும் நான் கிடைக்கவில்லை. அம்மாவுக்கு பயம் பிடித்துவிட்டது பிறகு நான் அமர்ந்திருந்த அந்த துணிக்கூடை கொஞ்சம் ஆடவே அதில் உள்ள துணிகளை எடுத்துப் பார்த்தபோது அந்தக் கூடைக்குள் நான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்கிறேன்அறுபத்தேழாம் ஆண்டில் நான் பிரபலமான பொப்பிசை பாடகராக வந்தபோது வேம்படி மகளிர் கல்லூரியில் என்னை கௌரவித்தார்கள். அப்போது நான் துணிக்கூடைக்குள் ஒளிந்த சம்பவத்தை கிரேஸ் வடிவேலு நினைவு கூர்ந்தார் என்று தமது சிறு வயது நினைவுகளில் மூழ்கிப் போன நித்தியிடம் இசைத்துறை பிரவேம் பற்றிக் கேட்டோம்.



**(யாழ். ஜிம்ரீவ்ஸ் ரசிகர் மன்றத்தின் நிகழ்வொன்றில் பாடி பரிசு பெற்ற படம். பரிசு வழங்குபவர் திருமதி பொன்னையா. நடுவில் யாழ்ப்பாணத்துக்கு டிரம்ஸ்சை அறிமுகம் செய்த கிடான் டி சில்வா.)**

'யாழ். மத்திய கல்லூரியில் படிக்கும்போது எனக்குள் இசையார்வம் அதிகமாக இருந்தது. தேவதாஸ் படப் பாடல்களை நான் அதிகமாக பாடித்திரிந்துகொண்டிருந்த காலமது.

எங்கள் பள்ளியில் மிஸ் தோமஸ்தான் பியானோ வாசிக்க கற்று கொடுத்தார். ஒரு முறை யாழ். சென்ட்ரல் கல்லூரியில் நடத்த கிரிக்கெட் போட்டியைப் பார்க்கப் போனப்போது அங்கே சில சிங்கள வாலிபர்கள் கிட்டாரை இசைத்துக்கொண்டு பைலாப் பாடல்களை பாடிக்கொண்டிருந்தார்கள். எனக்கு அதில் ஒரு ஈர்ப்பு வந்துவிட்டது. பிறகு பாடசாலைக்கு சென்ற நானும் நண்பர் கதிரேசனும் பள்ளி வளாகத்தில் பைலாப் பாடல்களை பாடி ஆடிக்கொண்டிருந்தோம். அதைக் கவனித்த மிஸ் தோமஸ் எங்களை அழைத்து இதை நீங்கள் மேடையில் ஆடிப் பாடினால் என்ன?' என்று கேட்க நாங்களும் சம்மதித்து பள்ளியில் நடத்த ஒரு விழாவில் பாடி ஆடினோம். எனக்குள் ஒரு பொப்பிசை பாடகன் உருவாக அந்த சம்பவம் தான் காரணமாக இருந்தது. அதற்கு பிறகு ஒரு பொப்பிசை குழுவை நான் ஆரம்பித்தேன். வேலை ஏதும் இல்லாமல் ஊரைச் சுற்றிக்கொண்டிருந்த காலம் அது. இசைக் குழுவுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று நானும் என் நண்பர்களும் யோசித்தபோது எனது நண்பர் சூரியபாலா, 'நாங்கள் சும்மா ஊரைச் சுற்றிக் கொண்டு காலம் கடத்திக்கொண் டிருப்பதால் நாம் அனைவருமே நடைப் பிணங்கள் தான். எனவே,(பொப் லிவிங் பொசில்ஸ்) வாழும் பிணங்கள் என்ற பெயரையே சூட்டுவோம் என்று ஐடியா தந்தார். அதையே பெயராக சூட்டினோம். இலங்கையின் முதலாவது தமிழ் பொப்பிசை பாடல்களை உருவாக்கிய பெருமை எங்களுக்கே உண்டு. அதனால்தான் பொப்பிசை பிதா என்ற சிறப்புப் பட்டமும் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கூறும் நித்தி, தமது பொப்பிசைப் பாடல்கள் உலகமெங்கும் சக்கைப்போடு போட்ட கதையையும் பகிர்ந்து கொண்டார்.

நான் பாடிய 'சின்ன மாமியே...', 'கள்ளுக் கடை பக்கம் போகாதே...' என்ற பாடல்கள்தான் என்னை தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்தது. தமிழ் நாட்டில் எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்த போது அவர் கொண்டு வந்த 'மது ஒழிப்பு' திட்டத்திற்கு எனது 'கள்ளுக் கடைப் பக்கம் போகாதே...' என்ற பாடலைத்தான் விளம்பர குறியிசைப் பாடலாக வைத்துக் கொண்டாராம். ஒருமுறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விழாவிற்கு வந்திருந்த நடிகர் ஜெய்சங்கர் எங்கள் முதலமைச்சரே பொதுமேடைகளில் உங்களின் பாடலைத்தான் ஐயா பாடுறாரு என்று என்னிடம் சொன்னார். அப்போதுதான் எம். ஜி. ஆர். மது ஒழிப்பு திட்டத்திற்கு எனது பாடலை பயன்படுத்தி வருவது எனக்குத் தெரிந்தது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், எம். ஜி. ஆர். காலத்திலிருந்து இன்று வரை எனது பாடல்களை எத்தனையோ பேர் என் அனுமதியின்றியே பயன்படுத்தி பெயர் வாங்கியிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தத்தான். சரி, பயன்படுத்தியதே பயன்படுத்தியாயிற்று, குறைந்த பட்சம் எனக்கு நன்றி என்ற ஒரு வார்த்தையைக் கூட சொல்லவில்லை என்பதுதான் எனது ஆதங்கம்.

அண்மையில் வெளியான பந்தயம் படத்தில் 'சின்னமாமி' பாடலை விஜய் அண்டனி ரீமிக்ஸ் பாடலாக மாற்றியமைத்திருக்கிறார். அதற்கு முன்பு தேவா படத்தில் மன்சூர் அலிகானும், மணிவண்ணனும் பாடுவது போல ஒரு பாடல் 'சொல்லுங்க மருமகனே...' என்ற எனது பாடலின் சில வரிகளை மாற்றி அந்தப் படத்தில் பயன்படுத்தியிருந்தார்கள் 'கண்டேன் சீதை'யை படத்தில் விவேக் பாடும் பாடல் காட்சியில் அமெரிக்காவில் மாப்பிள்ளைன்னா பொண்ணு

கேட்கிறாங்க...' என்ற பாடல் வரும். அந்தப் பாடலை ஒரு இருபது வருடங்களுக்கு முன்பாகவே நான் லண்டனில் மாப்பிள்ளைன்னா பொண்ணு கேட்கிறாங்க... என்று எழுதிப் பாடினேன். இதையெல்லாம் எப்படிச் சொல்வது என்று புலம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் அண்மையில் கலைஞர் டிவியும், மக்கள் தொலைக்காட்சியும் எனக்கு அந்த வாய்ப்பை வழங்கி என்னை மனம் திறந்து பேச வைத்தார்கள். நண்பர் ஹமீதும் கலைஞர் டி.வியின் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் என்னை கௌரவித்ததோடு நான் பாடிய சில பாடல்களை ஒளிபரப்பி என் முகத்தை தமிழக மக்களுக்கு அறிமுகம் செய்தார்...' என்று தனது இசைப் பயணத்தின் சில சம்பவங்களை எம்மிடம் பகிர்ந்து கொண்ட நித்தியிடம், காதல் அனுபவங்கள் பற்றிக் கேட்டோம்.

'எனக்கு ரோகிணி நட்சத்திரம். அதனால் எனக்கு பெண்களுடன் அதிகளவு நட்பு இருக்கும் என்றும் பெண்களுக்கும் என்னை பிடிக்கும் என்றும் என் ஜாதகம் சொல்வதாக சோதிடர் சொன்னார். அதுவும் ஒரு வகையில் உண்மைதான். எனக்கு பன்னிரெண்டு வயதாக இருக்கும் போது எங்கள் பக்கத்து வீட்டுக்கு மலேசியாவிலிருந்து சரோ வந்திருந்தாள். அவளுக்கு பத்து வயதிருக்கும். எனக்கு அவளுடன் பேச விளையாட ரொம்ப பிடிக்கும். எங்கள் வீட்டுக்கும் சரோ இருந்த வீட்டிற்கும் இடையில் ஒரு கிடுகு வேலி இருந்தது. நான் அந்த வேலியின் மீது கையை வைத்து கொண்டு பேசுவேன். சரோ அடுத்த பக்கத்தில் நிற்பா. நான் அப்படி அந்த வேலியில் தொடர்ந்து கையை வைத்துக் கொண்டு பேசிப் பேசியே எங்கள் வீட்டு கிடுகு வேலியும் தாழ்ந்து போய்விட்டது. ஒருநாள் என் அம்மா, 'தம்பி இனி நீ சரோவுடன் பேசக் கூடாது' என்றாள். நான் ஏன் என்று கேட்க அம்மா அதற்கு பதில் சொல்லவில்லை. பிறகு தான் எனக்கு, அவள் பருவமடைந்து விட்ட கதை தெரிய வந்தது. அதற்குப் பிறகு நான் அவளை பார்க்கவில்லை. அவள் மலேசியா சென்று விட்டாள் என்று நினைக்கிறேன்.

பிறகு என் ரசிகைகளில் ஒருத்தி, அவள் பெயர் பத்மினி. அவள் வேறு ஒருவனை காதலித்தாள். ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் அவர்கள் பிரிந்து விட்டார்களாம். அவள் தனது வேதனையை என்னிடம் சொல்லி அழுதாள். பெண்கள் அழுதால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. என் இதயம் கரைந்தது. முடிவில் நானே அவளை காதலிக்க முடிவு செய்தேன். ஊரறிய நான் அவளை காதலித்தேன். எனக்கு அவள் சரிப்பட்டு வரமாட்டாள் என்று என் குடும்பத்தினரும் நண்பர்களும் எவ்வளவோ சொல்லியும் நான் கேட்கவில்லை. பேராதனைப் பூங்காவை நானும் பத்மினியும் சுற்றிப் பார்க்க சென்ற போது அங்கே இருந்த ஒரு மூங்கில் மரத்தில் என் பெயரின் முதல் எழுத்தையும் அவள் பெயரின் முதல் எழுத்தையும் ஒரு இதயம் வரைந்து அதற்குள் பொறித்து வைத்தேன். இன்றும் அந்த மூங்கில் மரத்தில் அந்தப் பெயர்கள் இருக்கலாம்.



(லிவிங் ஃபொசில்ஸ் இசைக்குழு. பின்வரிசையில் முதலாவதாக நித்தி)

இடையில் நான் இந்தியாவிற்கு படிக்கச் சென்று இரண்டு வருடங்களை அங்கே கழித்து விட்டு வந்த போது, பத்மினி வேறு ஒருவனை காதலித்துக் கொண்டிருந்தாள். அதோடு என் காதல் முறிந்து போனது. பிறகு எனக்கு என் வீட்டில் திருமணம் பேசினார்கள். அப்போது எனது நண்பியான மஞ்சுளா என்னிடத்தில் வந்து 'நித்தி நீ விரும்பும் பெண் எப்படி இருக்க வேண்டும்?' என்று கேட்டாள்.

அதற்கு நான், நீண்ட கூந்தல் வளர்த்த, கூந்தல் நிறைய பூ வைத்த ஒரு தமிழ் சொட்டும் பெண் தான் எனக்கு பிடிக்கும் என்றேன். அதற்குப் பிறகு மஞ்சுளா அழைத்ததின் பேரில் மஞ்சுளா தங்கியிருந்த பம்பலப்பிட்டி மகளிர் விடுதிக்கு ஒருநாள் நான் சென்றிருந்தேன். அங்கே ஒரு காரில் வந்து இறங்கினாள் என் கற்பனை நாயகி. என் மனது இந்த செல்வராணியுடன் சங்கமமாகி விட்டது. என்னோடு பேசக் கூடாது என்று செல்வராணியை மஞ்சுளா மிரட்டியதாக செல்வராணி ஒருமுறை கூறினாள். பிறகு இரு வீட்டாரின் சம்மதத்துடன் எங்கள் திருமணம் பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெற்றது.

நீண்ட கருங்கூந்தல். தலைநிறைய பூவாக நான் எதிர்பார்த்த மாதிரியே.என்னைப் பார்த்த அவள் என்னை பொப்பிசை பாடகனாக அடையாளம் கண்டு கொண்டாள். என்னோடு பேசினாள். என்னை டீ குடித்து விட்டு செல்லும்படியும் கேட்டுக் கொண்டாள். எனக்கு எல்லாமே கனவில் நடப்பது போல இருந்தது. இந்த சம்பவத்தை என் நண்பர்களிடம் கூற அவர்களும் அவளைப் பார்க்க வேண்டும் என்றார்கள்.

ஒருநாள் அவர்களுக்கும் அவளை அறிமுகம் செய்து வைத்தேன். மச்சான் உனக்கேற்ற ஜோடி தான்டா என்று நண்பர்கள் நற்சான்றிதழும் தந்தார்கள். அதற்குப் பிறகு நாங்கள் இருவரும் பேசப் பேச காதல் வளர்ந்தது. இந்த நேரத்தில் ஒன்றை சொல்ல வேண்டும். மஞ்சுளா எனக்காக அவளின் சொந்தத்தில் ஒரு நீண்ட கூந்தல் கொண்ட பெண்ணை பார்த்து வைத்திருக்கிறாள். ஆனால் யாழ். 'குகன் ஸ்டூடியோவில்' திருமணப் போட்டோ பிடித்தோம். என் மனைவியிடம் எனக்கு மிகவும் பிடித்தது, அந்த நீண்ட கூந்தல்தான். ஆனால் இன்று அவள் நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அந்த நீண்ட கூந்தலை வெட்டிவிட்டு குறைத்துக் கொண்டாள்.

என் மனதில் நின்ற செல்வராணி என்கிற அந்தக் கூந்தல் வளர்த்த கனவுக் கதாநாயகியை இன்று நான் தொலைத்துவிட்டேன் என்று கூறி முடித்தார் நித்தி.

'செல்லம்மா பாக்கியம், தம்பையா இவர்களை என்னால் மறக்க முடியாது. இவர்கள் அனைவருமே தலித் வகுப்பைச் சேர்ந்தவர்கள். தம்பையா ஒரு சலவைக்காரர். நான் எஸ். எஸ். சி. படிக்கும் போது கிளாசுக்கு இருபது ரூபா பணம் கட்ட நான் கஷ்டப்பட்ட போது எனக்கு இருபது ரூபா பணத்தை கொடுத்து உதவி செய்தவரே இந்தத் தம்பையா.


அப்புறம் பாக்கியம் அக்கா ரொம்பவும் கஷ்டத்தில் இருந்தவர். தனது மரணக்கு செலவுச் என ஒரு 500 ரூபாவை இவர் ஒதுக்கி வைத்திருந்தார். தன் மரணத்தின் பின்னரும் பிறருக்கு தொந்தரவாக இருக்கக் கூடாது என்ற நல்ல எண்ணம்.

அவளின் இந்த ஐநூறு ரூபா விடயம் ஊருக்கே தெரியும். நான் இந்தியாவிற்கு படிக்கப் போகும் போது என் கஷ்ட நிலையை உணர்ந்திருந்த பாக்கியம் அக்கா, எனக்கு உதவியாக இருக்குமே என்று தான் பொக்கிஷமாக வைத்திருந்த 500 ரூபாவை என்னிடம் தந்தாள். பின்னர் நான் வளர்ந்து பெரிய பாடகனான பிறகு பாக்கியம் அக்காவை சந்தித்தேன். அவளின் காலில் விழுந்து வணங்கி அவளிடம் வாங்கிய ஐநூறு ரூபாவை திருப்பிக் கொடுத்தேன். அப்போது நான் அவளை அம்மா என்று அழைத்தேன். நான் அப்படி அழைத்ததும் அவள் ரொம்பவும் நெகிழ்ந்து போனாள். அவருக்கு பிள்ளைகள் இல்லை. எனக்கு ஒரு மகன் கிடைத்து விட்டான் என்று என்னை கட்டிப் பிடித்து அழுதாள்.

செல்லம்மாவை பற்றியும் சொல்ல வேண்டும். அவளும் எனக்குத் தாய்தான். நானும் அவளிடம் பால் குடித்து இருக்கிறேன். நிமோனியா காய்ச்சலால் நான் பாதிப்புற்றிருந்த போது அவளிடம் வாங்கிய தாய்ப்பாலில் தான் மருந்து கரைத்து எனக்குக் குடிக்க கொடுத்தார்கள். நான் சிறுவனாக இருந்த போது எங்கள் வீட்டிற்கு செல்லம்மா எப்போது வந்தாலும் எனக்கு பல்லி மிட்டாய் வாங்கி வருவாள். நான் திருமணமான போது என்னை வாழ்த்த வந்த செல்லம்மா எனக்கு ஒரு பரிசையும் கொடுத்தாள். ஒரு சிறிய காகிதத்தில் சுற்றிய ஒரு பொட்டலத்தை தந்தாள். அதை நான் பிரித்துப் பார்த்த போது நான் அழுதேன். ஏன் தெரியுமா? அதில் எனக்குப் பிடித்த பல்லி மிட்டாய் இருந்தது.

எத்தனையோ பேர் பெறுமதியான பொருட்கள் எனக்கு பரிசாக தந்திருந்த போதும் செல்லம்மா தந்த அந்த பல்லி மிட்டாய்க்கு அவை ஈடாகியிருக்கவில்லை.

இச்சம்பவத்தை அவர் நினைவு கூர்ந்த போது அவர் உணர்ச்சி வசப்பட கண்களில் கண்ணீர் வழிந்தது.



# To the Baila Beat

Nithi Kanagaratnam on how he uses Tamil Baila music to reach social messages to people



Remember 'Chinna Maamiye' — that hugely popular song among generations of college students in Tamil Nadu? But, not many Tamil music listeners have heard of Nithi Kanagaratnam, who composed and sang it. Tamil Baila music is his forte, however, Nithi has not received recognition in proportion to his talent. Not surprising, since his contributions to Tamil music came mostly while he was living in Sri Lanka and Australia, and at a time when he was balancing music and academics.

**Resounding success**

Nithi composed 'Chinna Maamiye' in the mid-1960s, and put it to the test during a cricket match in Jaffna. As this Tamil song set to racy Baila music was greeted with enthusiasm, Nithi felt encouraged to concentrate on the genre. Nithi started off with English bands in Colombo as a singer who could also play the drums and the guitar. He specialised in singing cover versions of Tom Jones and Engelbert Humperdinck. Following 'Chinna Maamiye's resounding success in Tamil Nadu as well as in Sri Lanka, Nithi began to focus on Tamil pop.

While studying agriculture at Allahabad University in the late 1960s and early 1970s, he composed music prodigiously. "I put together six solo albums," says Nithi. Colleges in Tamil Nadu were a testing field for his songs, but he did not totally ignore the North. He displayed his music skillsat singing competitions up North, and won several trophies.

Music took a backseat after Nithi finished his Masters in Plant Pathology, and immersed himself in research work. Responsible and prestigious positions such as the Head of the Department of Agriculture at the Eastern University of Sri Lanka meant Nithi had to constantly squeeze out time for music. As he believed social reformation could be effected through music, Nithi wrote, composed, arranged and sang songs despite a hectic academic career.

Nithi discovered that the peppy Baila was a reliable vehicle to reach social messages to people. Nithi's song 'Kallukada Pakkam Pogatha' is a Baila classic against alcoholism. "M.G. Ramachandran, the then Chief Minister of Tamil Nadu, used this song in the campaign against alcohol consumption," recalls Nithi.

In the 1980s, Nithi migrated to Australia, and at present, teaches pharmaceutics at Victoria University. He continues to compose songs in English and Tamil, and translate from Sinhalese to Tamil. He is credited with writing the Tamil version of the Australian national anthem. His Tamil Baila songs have been broadcast on Music Deli, a programme on Australian national radio, on Songs In Language (BBC) and Songs Of The World (Voice of America).

Sixty-five-year old, Nithi now devotes much of his leisure to an etymological and philological research of the Tamil language and to visit Chennai. During a recent visit, he spent most of his time expounding Tamil Baila at various forums.

**BAILA BASICS**

* Baila music is Sri Lanka's signature sound. In truth, it was born of an international music collaboration that took place in an atmosphere of informality many centuries ago.

* It is traced down to 'kaffir', a mixed community influenced by the Portuguese, African and Sinhalese ethos; the buoyant dance music of this community was known as 'kaffirhina'.

* While it existed in the island for many centuries, kaffirhina gained prominence only in the mid-Twentieth century. After a large number of Sinhalese songs was set to racy kaffirhina, a new name was coined for the genre — Baila, which drawn from the Portuguese verb for dancing.


**(Source The Hindu April 19, 2010)**

THE HINDU

இசை

# To the Baila Beat

Nithi Kanagaratnam on how he uses Tamil Baila music to reach social messages to people



Remember 'Chinna Maamiye' — that hugely popular song among generations of college students in Tamil Nadu? But, not many Tamil music listeners have heard of Nithi Kanagaratnam, who composed and sang it. Tamil Baila music is his forte, however, Nithi has not received recognition in proportion to his talent. Not surprising, since his contributions to Tamil music came mostly while he was living in Sri Lanka and Australia, and at a time when he was balancing music and academics.

**Resounding success**

Nithi composed 'Chinna Maamiye' in the mid-1960s, and put it to the test during a cricket match in Jaffna. As this Tamil song set to racy Baila music was greeted with enthusiasm, Nithi felt encouraged to concentrate on the genre. Nithi started off with English bands in Colombo as a singer who could also play the drums and the guitar. He specialised in singing cover versions of Tom Jones and Engelbert Humperdinck. Following 'Chinna Maamiye's resounding success in Tamil Nadu as well as in Sri Lanka, Nithi began to focus on Tamil pop.

While studying agriculture at Allahabad University in the late 1960s and early 1970s, he composed music prodigiously. "I put together six solo albums," says Nithi. Colleges in Tamil Nadu were a testing field for his songs, but he did not totally ignore the North. He displayed his music skillsat singing competitions up North, and won several trophies.

Music took a backseat after Nithi finished his Masters in Plant Pathology, and immersed himself in research work. Responsible and prestigious positions such as the Head of the Department of Agriculture at the Eastern University of Sri Lanka meant Nithi had to constantly squeeze out time for music. As he believed social reformation could be effected through music, Nithi wrote, composed, arranged and sang songs despite a hectic academic career.

Nithi discovered that the peppy Baila was a reliable vehicle to reach social messages to people. Nithi's song 'Kallukada Pakkam Pogatha' is a Baila classic against alcoholism. "M.G. Ramachandran, the then Chief Minister of Tamil Nadu, used this song in the campaign against alcohol consumption," recalls Nithi.

In the 1980s, Nithi migrated to Australia, and at present, teaches pharmaceutics at Victoria University. He continues to compose songs in English and Tamil, and translate from Sinhalese to Tamil. He is credited with writing the Tamil version of the Australian national anthem. His Tamil Baila songs have been broadcast on Music Deli, a programme on Australian national radio, on Songs In Language (BBC) and Songs Of The World (Voice of America).

Sixty-five-year old, Nithi now devotes much of his leisure to an etymological and philological research of the Tamil language and to visit Chennai. During a recent visit, he spent most of his time expounding Tamil Baila at various forums.

**BAILA BASICS**

* Baila music is Sri Lanka's signature sound. In truth, it was born of an international music collaboration that took place in an atmosphere of informality many centuries ago.

* It is traced down to 'kaffir', a mixed community influenced by the Portuguese, African and Sinhalese ethos; the buoyant dance music of this community was known as 'kaffirhina'.

* While it existed in the island for many centuries, kaffirhina gained prominence only in the mid-Twentieth century. After a large number of Sinhalese songs was set to racy kaffirhina, a new name was coined for the genre — Baila, which drawn from the Portuguese verb for dancing.

**(Source The Hindu April 19, 2010)**



# ஐம்பது ஆண்டுகளாக சின்ன மாமியின் சின்ன மகளைத் தேடும் நித்தி கனகரத்தினம்!

இலங்கை, தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் உட்படத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் உலக நாடுகள் பலவற்றிலும் சின்னமாமியே பாடல் மூலம் புகழ் பெற்ற நித்தி கனகரத்தினம் அவுஸ்திரேலியாவுக்கு வந்த பின்பும் சின்ன மாமியை மறக்காமல் பாடிக்கொண்டிருக்கிறார். இந்தச்சின்னமாமிக்கு (பாடலுக்கு) 2017ம் ஆண்டு 50 வயதாகப் போகிறது. நித்தி படித்தவர்.- பண்பான இயல்புகளைக் கொண்டவர். பிரபலமான பல மேடைப்பாட்டுக் கலைஞர்களிடம் இயல்பாகவுள்ள பலவீனங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட மனிதாபிமானவாதி. தான் இயற்றிப்பாடிய பாடல்களை சமூக சீர்திருத்தப் பாடல்கள் என்று கலாரசிகர்களும் விமர்சகர்களும் கருதினாலும்- நான் அவற்றை மண்ணின் ராகங்கள் - என்று தான் சொல்லுவேன் என்ற கருத்து நிலையில் இருப்பவர்.

அவுஸ்திரேலிய விக்ரோரியா மாநிலத்தின் விக்ரோரியா பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானக் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றியவர். ஆயிரக்கணக்கான மேடைகளைக்கண்டவர். அவர் எழுதிக் கொண்டிருக்கும் **என் இசையும் என் கதையும்** நூல் வெளியாகும் பட்சத்தில் நித்தியின் கலையுலக வாழ்வின் பல பரிமாணங்களை அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் உரும்புராயில் பிறந்த நித்தி- தமது ஆரம்பக்கல்வியை வேம்படி ஆரம்பப்பாடசாலையில் தொடங்கி யாழ் மத்திய கல்லூரி, அம்பாறை ஹார்டி தொழில் நுட்பக்கல்லூரி விவசாய பீடம் முதலானவற்றில் மேற்கல்வியைத்தொடர்ந்து இந்தியாவில் அலகபாத் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் கற்று முதுமாணிப்பட்டம் பெற்றவர்.

1955ம் ஆண்டளவில் நித்தியின் பாடுந்திறன் கண்டு ஆசிரியர் வேலுப்பிள்ளை ஊக்குவித்து விழா நிகழ்ச்சிகளின் போது வாழ்த்துப்பா பாட அழைத்திருக்கிறார். நித்தியின் பாடல் , கலையுலகப் பிரவேசத்தக்கு வித்திட்டது ஆசிரியர் வேலுப்பிள்ளைதான் என்று ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்பும் மறக்காமல் நன்றியுணர்வுடன் நினைவு கூருகிறார். நித்தி நடித்த முதல் நாடகம் துருவன். ஏட்டு வயதுச் சிறுவனாக இருக்கும் போது ,எமது ஊருக்குத் தமிழகத்திலிருந்து வந்திருந்த குகானந்தவாரியார் என்ற பெரியவர் முன்னிலையில் :"***நாறியிடைப்பாகருக்கு நஞ்சளித்த வைகையன்றி வாவியிடை போகாத வைகையே- பாரில் இடத்தும் வலத்தும் இருமருங்கும் ஓடி நடத்தும் தமிழ்ப்பாண்டி நாடே***" என்று பாடினேன். அப்பெரியார் எனது தலையில் தொட்டு ஆசிர்வாதம் வழங்கினார் என்று நெகிழ்வுடன் சொல்கிறார்.சிறிய வயதிலேயே கவிமணி தேசிகவினாயகம் பிள்ளையின் மலரும் மாலையும் தொகுப்பைப் படித்து - கவிதை எழுதவும் பயின்ற நித்தி , யாழ். மத்திய கல்லூரியில் கற்கும் காலத்தில் மாங்கனி என்ற கையெழுத்துப்பத்திரி;கையையும் 1957ல் வெளியிட்டுள்ளார்.

கல்லூரி விழாக்களின் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று தமது கலை ஆர்வத்தை வளர்த்துக் கொண்ட நித்தி குழந்தை இலக்கிய கவிஞர் அழ.வள்ளியப்பா , முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் , கி.வா. ஜகந்நாதன் , முதலான தமிழக இலக்கியவாதிகளினதும் வாழ்த்துக்களைப் பெற்றிருப்பவர்.

ஆரம்ப காலத்தில் - ஊர் சனசமூக நிலையங்களில் பல கிண்டல் நாடகங்களை அரங்கேற்றியுள்ள நித்தியிடம் இயல்பாகவே அங்கதச்சுவையுணர்வும் இருந்தமையால்தான் பின்னாளில் சின்ன மாமியே உன் சின்ன மகளெங்கே , கள்ளுக்கடைப்பக்கம் போகாதே , சோளஞ் சோறு பொங்கட்டுமா - முதலான பாடல்களைப் பாட முடிந்திருக்கிறது. ஊர் மேடைகளில் கிண்டலடிக்கும் பாடல்களைத் தாமே இயற்றிப் பாடிக் கவனத்தை ஈர்ந்தவரிடம் - உங்கள் ஞாபகத்தில் இருக்கும் அந்தக் கிண்டல் பாடல் ஒன்றைச் சொல்லுங்களேன் என்றேன்.

ஆமணக்கம் சோலையிலே

பூமணக்கப் போற பெண்ணே....



-இவ்வாறு பாடி விட்டு - இப்படி நிறைய இயற்றியிருக்கிறேன் அந்தக் காலத்தில். காலம் மாறி விட்டது.இனி, காலத்துக்கேற்ற பாடல்கள் பாட வேண்டும் - என்ற மனப்பாங்கு உருவாகியுள்ளது என்றார். சிங்கள பைலாப்பாட்டு உடனுக்குடன் இயற்றப்பட்டு வாதப்பிரதி வாதங்களுடன் கிண்டலுடன் இரட்டை அர்த்தங்களுடன் பாடப்பட்ட கால கட்டத்தில் - தமிழிலும் இவ்வாறு எமது மண்சார்ந்த இயல்புகளைச் சித்திரிக்கும் பாடல்களை நாமும் ஏன் இயற்றிப் பாடக் கூடாது- என்ற சிந்தனையின் தாக்கத்தால் நான் உந்தப்பட்டேன். அம்பாறை ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரிக்கு 1966ம் ஆண்டளவில் படிக்கச் சென்ற சமயம்- ஹார்டிடே விழா நிகழ்ச்சியில் தான் - முதல் முதலில் சின்ன மாமியே உன் சின்ன மகளெங்கே? பாடினேன். எதிர்வரும் 2017ம் ஆண்டு - இந்தப் பாட்டுக்கு 50 வயதாகப் போகிறது - என்றார் நித்தி.

இலங்கையில் பிறந்த சின்ன மாமி - இன்று தமிழகத் திரைப்படங்களிலும் இடம் பெற்றுள்ளாள். அந்தளவுக்கு அதன் மவுசு இன்னமும் குறையவில்லை. நித்தியின் அந்தப்பாடல்களைப் பாடியே இலங்கையிலும் - மலேசியாவிலும் தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலும் புகழ் பெற்ற பாடகர்கள் பலர் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கு - பௌர்ணமிவிழாக்களிலும் - யாழ் மத்திய கல்லூரி - யாழ் பரியோவான் கல்லூரி கிரிக்கட் ஆட்டங்களின்போதும் நித்தியின் பாடல் கள் மக்களின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளன. இலங்கைப் பத்திரிகைகளின் ஆண்டு விழா நிகழ்ச்சிகளிலும் நித்தி பாடிப் புகழ் பெற்றுள்ளார். ஈழநாடு பத்தாவது ஆண்டு விழா - யாழ்ப்பாணத்தில் நடந்த தினகரன் விழா முதலானவற்றிலும் பங்கேற்றதைப் பெருமையுடன் நினைவு கூர்ந்தார்.இலங்கையிலும், தமிழகத்திலும் கவனத்தைப் பெற்ற இக்கலைஞர் - நோர்வே - டென்மார்க்- ஜேர்மன் - பிரான்ஸ்- கனடா- அமெரிக்கா- லண்டன்- மலேசியா- சிங்கப்பூர்-புரூணை முதலான நாடுகளிலும்- தற்போது வாழும் அவுஸ்திரேலியாவிலும் பல மேடைகளில் பாடியுள்ள நித்தி வட இந்தியாவில் அலகபாத்தில் நடந்த கலை நிகழ்ச்சியொன்றில் இந்தித் திரையுலகில் பிரபலம் பெற்ற **சங்கர்- ஜெய்கிசான்** இரட்டையர்களுடன் சேர்ந்து பாடியதை பெருமிதத்தடன் நினைவு கூர்ந்தார்.


தாய் மொழியாம் தமிழில் மாத்திரமின்றி ஆங்கிலம்,சிங்களம், ஹிந்தி ஆகிய மொழிகளிலும் பாடும் திறன் பெற்ற நித்தி கனகரத்தினம் - 1970களில் பொப்பிசைப்பிதா என்ற பெயரெடுக்கும் அளவுக்கு இலங்கையில் புரபலம் பெற்றார். நித்தி ரசிகர்களின் கவனத்தை ஈர்ந்த காலத்தில் ஸ்டனி சிவானந்தன், எஸ் இராமச்சந்திரன், ஏ.ஈ.மனோகரன், கணபதிப்பிள்ளை, டோனி ஹசன், சுரேஸ், அமுதன் அண்ணாமலை, முத்தழுகு முதலான பல கலைஞர்களும் மக்கள் மத்தியில் பிரபலமடைந்தனர். இத்தகவலையும் காலம் கடந்தும் சக நண்பர்களை மறக்காமல் நினைவு கூர்ந்து சொன்னார்.

மலேசியாவில் 45வது சுதந்திர தின விழா - மேடே காடே- ஊர்வலக் காட்சிகளை , மலேசியாவில் நின்ற சமயம் தொலைக்காட்சியில் பார்த்தேன். மலே, சீனம், தமிழ் ஆகிய மொழிகளில் மக்கள் பாடிக் கொண்டு சென்றார்கள். தமிழர் சென்ற ஊர்வலத்தில் எனது பாடல்களை அம்மக்கள் பாடிக்கொண்டு சென்றதைப்பார்த்து இன்ப அதிர்ச்சி அடைந்தேன். என்னையறியாமல் என் கண்களில் கண்ணீர் சொரிந்தது.எங்கோ பிறந்த பாடல் எங்கெங்கோ சென்று மக்களின் மனதில் இடம் பிடித்திருப்பதைப் பார்த்துப் பரவசமடைந்தேன் என்றார்.

ஒரு சமயம் (1975இல்) பருத்தித்துறையில் மீன் சந்தையில் பேராசிரியர் கா. சிவத்தம்பியை எதிர்பாராத விதமாக நித்தி சந்தித்துள்ளார். நித்தியிடம் பொப்பிசை குறித்து கலந்துரையாடிய அவர் பின்பு ஓர் இதழில் கட்டுரையும் எழுதியுள்ளார்.1986ல் மட்டக்களப்புப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் தலைவர் பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டுப்புறப்படும் தறுவாயில் நடந்த பிரிவுபசார விழாவில் பலரது வற்புறுத்தி;னால் - பாடியுள்ளார். ஆனால் அது நித்தியின் வழக்கமான பொப்பிசைப்பாடல் அல்ல.அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும் என்ற சுதந்திர வேட்கை நிரம்பிய பாடலை மாத்திரம் பாடி விடை பெற்றார்.

தமிழகத்தில் எம்.ஜீ.அர், முதல்வராகப் பதவி ஏற்ற சமயம் - மதுவிலக்கு கொள்கை மீண்டும் அமுலுக்கு வந்த போது அங்கு பட்டி தொட்டி எங்கும் ஒலி பரப்பான பாடல் நித்தியின் கள்ளுக்கடைப் பக்கம் போகாதே. ரஜனிகாந்த் நடித்த அவசர அடி ரங்கா, எஸ்.பி. பாலசுப்ரமணியம் நடித்த சிவரஞ்சனி விஜயகாந்த் நடித்த ரமணா - முதலான படங்களிலும் நித்தியின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. எனினும் - இதற்காக தமிழக முதல்வரிடமிருந்தோ தமிழ்த் திரைப்படத் துறையிடமிருந்தோ நித்திக்கு வெகுமதிகள் கிடைக்கவில்லை.

**(முருகபூபதி)**



# அம்மா

## ஆழியாள்

அம்மா

தினமும்
புல்வெளியைக் கடந்து,
தார் வீதியைக் கடந்து,
மைதானத்தைக் கடந்து,
ஓடுகின்றாள்.

பள்ளிக்கூடத்தில்
தெருவில்,
விளையாட்டுத் திடலில்,
வயல்களில்,
தொடர்மாடி வேலைத்தளத்தில்,
வீட்டில் என
எங்கும்
அம்மா சில்லுக்கட்டினாற் போல் ஓடினபடியே இருக்கிறாள்.

நம் ஓய்வுநேரங்களிலும்,
விடுமுறை நாட்களிலும், பண்டிகைக் காலங்களிலும் கூட
அம்மா அவதியாய் ஓடிக்கொண்டுதான் இருக்கிறாள்.

இலைகளைக் காணாது பாதையோரத்து மரங்கள்
வெலவெலத்து நிற்கின்ற நாட்களில்,
சருகுகளைச் சலசலக்க வைத்தபடி
அம்மா ஓடுகிறாள்.

காதோரச் சவ்வுகளில் வலிசுண்ட
கிளைகளாய் உறைந்து தொங்குகிற
கொடும் பனியின் வெண்மையூடு,
ஒரு சறுக்கு வித்தைக்காரியைப் போல்
அம்மா குளிரில் ஓடுகிறாள்.

அம்மா
எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கிறாள்.
நேரம், நேரம் என்று ஆலாய்ப் பறக்கிறாள்.
அமைதியின் நிழற் பொழுதுகளில்
ஏகோன் காய்கள் பொத் பொத்தெனெ உதிரும் போதும்
பறவைக்கூட்டங்கள் ஜிவ்வென நீருள் இறங்கும் போதும்
அம்மாவின் கால்கள் மாத்திரம் ஓடிக்கொண்டு இருக்கின்றன.

அம்மா ஓடிக்கொண்டே இருக்கிறாள்
வசந்தம் முளைகட்டி மலர்வதைப்போல்
தலைதிருப்பி
என்னையும், உன்னையும் பார்த்தபடி
புன்னகைத்துக் கையசைத்த வண்ணம்
அதோ அம்மா ஓடுகிறாள்.
**[மார்ச் 2011]**


**(நன்றி : *'கருநாவு'* கவிதைத் தொகுதி)**

**ஆழியாள் (கான்பெரா):** தொண்ணூறுகளில் எழுதத்தொடங்கிய ஆழியாளின் மூன்று கவிதைத் தொகுப்புக்கள் [**உரத்துப் பேச**'(2000),**துவிதம்** (2006). & **கருநாவு** (2013).] இதுவரை வெளிவந்துள்ளன. இவரது படைப்புகள் **மூன்றாவது மனிதன், கணையாழி, சரிநிகர், ஆறாம்திணை, உயிர்நிழல், அம்மா, பெண், கல்குதிரை, தீராநதி, உயிர்மை, காலம்** ஆகிய இலக்கியச் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.


இவரது பல கவிதைகள் **ஆங்கிலம், மலையாளம், கன்னடம்** மற்றும் **சிங்களத்திலும்** மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது கவிதைகள் பல சர்வதேச தமிழ் மற்றும் ஆங்கில தொகுப்புகளிலும் இடம்பெற்றுள்ளன.





சிறுகதை



# அம்மாவின் கடிதம்

## யோகன்

இன்றைக்கும் வீட்டிலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. எப்போதும் போலவே, வேலையால் வந்து உடைமாற்று முன்னமே கடிதத்தைப் பிரிப்பதென.... இன்றும் அப்படித்தான். முகப்பு விலாசத்திலிருந்தே அம்மாவின் கடிதம் என்று உணர்ந்து, பரபரப்புடன் படித்து முடித்தாயிற்று.. மனதை நெகிழ்த்திய பகுதிகளை மீண்டும் படிக்கிறான்.

"உனது கொப்பாவுக்கு C.T.B இல் இப்போ வேலையில்லை. பழைய சைக்கிள் வாங்கி எங்கள் படலையின் முன்னால் ஒரு சைக்கிள் சாமான் கடை நடத்துகிறார். வாகனப் போக்குவரத்துகள் ஒன்றுமில்லை. ஈஸ்வரி வழமைபோல பயந்த சுபாவம். பொம்மர் சத்தம் கேட்டதும் வீட்டுத் தாழ்வாரத்தில் கீழ் வந்து ஒழிந்து நிற்பா. இந்த வீடு வாசல் காணி பூமி ஒன்றும் வேண்டாம். இந்த நாடும் நம் சொந்த நாடு இல்லை என்ற மனப்பான்மையுடன் வேறு எங்காவது நிம்மதியாக இருக்கலாமென்றால் அதற்கும் வழி தெர-ியவில்லை. சந்தையடியில் மூன்றாவது முறையாகக் குண்டு போட்டு சந்திக் கடையில் நாலு பேர் இறந்து விட்டார்கள். பாடசாலைக்குப் பிள்ளைகள் போவதும் இல்லை. வாத்தியார் சைன் பண்ண மட்டும் போகிறார்கள்.

ஈஸ்வரியையும் ஒரு நல்ல துணையுடன் வாழவைக்க வேண்டும் என்பது எனது விருப்பம். அதற்காக கடவுளைத்தான் வேண்டுதல் செய்வேன். போன வருசம் எத்தனையோ பிரச்சினைகள் வந்தும் கடவுள் எங்களைக் கைவிடவில்லை.... தம்பி பிடிபட்டு விடுதலையானது... சண்முகண்ணைக்கு நடந்தது.... நீ வெளிநாட்டுக்குப் போனது... எல்லாவற்றையும் நினைத்துப்பார்ப்பேன்....."

கடைசி வரிகளை மனம் தானாகவே அழுத்தம் கொடுத்துப்படிப்பதை உணர்ந்தான். தொடர்ந்து வாசிக்க முடியாமல் கடிதம் நின்று போகிறது....

சண்முகண்ணை என்று அவனுக்குத் தெரிந்த சண்முகரத்தினம் அவனது குடுப்பத்துக்கு ஒரு வகையில் சொந்தம்தான். எப்படியென்று அவனுக்கு தெரிவதில்லை. உன்ரை... ஆச்சியின்ர, தம்பியின்ரை... என்று உறவுக்கயிற்றின் ஒரு நுனியை இவனில் முடிந்து மறு நுனியை கொண்டுபோய சண்முகண்ணையில் முடிந்து விடுவாள். இடையில் சிக்கலான பல முடிச்சுகள் இருக்கும். இவனால் கிரகிக்க முடிவதில்லை

இதெல்லாவற்றையும் விட சண்முகண்ணையென்று அவன் கூப்பிடும் உறவே நிலைத்திருந்தது. ஒரு அச்சுக்கூடத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அச்சுக் கோப்பாளராக இருந்தாரென பிறகு அறிந்தான். பத்மா அக்காவும், பிள்ளைகள் ராஜியும், சுசியும் ஒரு அமைதியான குடும்பமாக இருந்த அந்தக்காலங்கள்.... வயற் காணிகளை ஒட்டிய அவர்களது வீடுகள்..



தேங்காய் ஏற்றிச் செல்லும் மாட்டு வண்டிகளின் இரும்புச்சில்லுகள் புழுதிச்சாலையில் கரகரக்கும் ஓசையில் துயிலெழும் அம்மா, அடுப்படியில் தேத்தண்ணி ஊத்த அடுக்குப்பண்ணுகையில், இவன் படிப்பதற்கு லாம்பு கொழுத்திக் கொண்டு அறைக்கு வருவான். அரச மரத்தடியில் குயில்கள் கூவும் பின்னணியில், காகங்களும் குருவிகளும் குரல் காட்டும் அவ்வதிகாலையில இவன் வீட்டையும் சண்முகண்ணை வீட்டையும் பிரிக்கும் கிடுகு வேலியினூடே தெரியும் அறை யன்னலூடும் ஒரு லாம்பு வெளிச்சம் தெரியும். அது ராஜியின் யன்னல்... அவளும் அந்த வருடம் A/L ற்காக படித்துக்கொண்டிருந்த காலம்... இவனுக்கோ அந்த படிப்பிலும், தன் திறமையிலும் பெரும் நம்பிக்கை இருக்கவில்லை. அக்கா ஈஸ்வரியும் படிப்பை கைவிட்டு(படிப்பு அவளைக் கைவிட்டது என்பதே உண்மை) வீட்டோடு இருந்தாள். அவளிற்கும் எப்படியோ பொழுது போய்க்கொண்டிருந்தது. சண்முகண்ணை வீட்டிற்கு அடிக்கடி போவாள். இளையவள் சுசியும் இங்கு இவன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். அவள் அப்போதுதான் ஆறாவதோ ஏழாவதோ படித்துக் கொண்டிருந்தாள்.

அப்பா அன்று வேலையால் வரப்பிந்திய ஒரு இரவு...
அப்பாவின் வேலை அப்படி. C.T.B இல் மெக்கானிக்காக இருப்பதால், எப்போதும் அலுத்துக்களைத்து வந்து படுக்கையில் விழுகிறார். இவர்களது ஒழுங்கை போய் ஏறும் மெயின் றோட்டால் போகும் பஸ்சில் அப்பாவுக்கு அம்மா கட்டித்தரும் சாப்பாட்டை கொடுத்து விடுவதற்காக அடுத்து வரும் C.T.B பஸ்சை எதிர்பார்தபடி காத்து நிற்பான். பஸ்சை மறித்து டிரைவரிடம் சாப்பாட்டைக் கொடுத்து பழகியதில் பல டிரைவர்கள் இவனுக்கு பழக்கம். பிறகு இவனுக்கு வயசு வந்ததும் தம்பியிடம் அந்த வேலையை பாரம் கொடுத்துவிட்டான்.

ஒழுங்கையால் போகும் வாகனங்கள் கிழப்பும் புழுதி வேலியோரத்துப் பூவரசமிலைகளில் படிந்து போனதால், வளர்பிறை சந்திரன் ஒளிபட்டு பூவரசமிலைகள் அந்த இரவில் பளபளக்கவில்லை. இப்போ சும்மா வாகனங்கள் மட்டுமா, இராணுவ டிரக்குகளும், கவசவா-கனங்களும் அல்லவா அம்மண்ணை நசித்து செல்கின்றன.

அவன் வளவுக்கு பின்னால் பரந்து கிடக்கும் வயல் ஒன்றில் சிறுதானிய விதைப்புக்காக உழுது கொண்டிருந்த டிரைக்டரின் வெளிச்சம் இடைக்கிடை தெரிந்தும் பின் மறைந்தும் கொண்டிருந்தது. உழுத மண்வாசனையையும், டிரைக்டரின் சத்தத்தையும் சுமந்து வந்தது காற்று.

பின்னே விரிந்திருந்த வயல்களின் நடுவே இருந்த குளம் வற்றிப்போயிருந்தது. மாரிகாலத்தில் குளம் முட்டிவிடும். குளம் முட்டினால் கதிர் விட்டிருக்கும் நெற்பயிர்களையெல்லாம் மூடி வெள்ளாமையை நாசம் செய்யும் அடைமழை அடிக்கொருதரம் பெய்யத்தான் செய்கிறது. குளத்தில் ஒரு மூலையில் அரச மரத்தின் கீழேள்ள வைரவர் கோவிலில் மாரிகாலத்திலேயே திருவ-ிழா நடக்கின்றது. எனவே மழைக்காலம் மிகவும் அவனுக்கு பிடிக்கும். அடை மழைக்குப் பின் வெளிக்கும் ஒரு சூரிய கதிர் நிறை காலையில் வயல்களையும், குளத்தையும் மூடிக்கிடக்கும் நீர்ப்பரப்பையும், மெல்லிய காற்று அதில் எழுப்பும் அலைகளையும் பார்த்து நிற்பான். பின் இருட்டத்தொடங்கும் வேளையில், பல்புகளின் வெளிச்சத்திலும், மக்கள் கூட்டத்திலும் ஜொலிக்கும் கோயிலின் விம்பத்தை தூரத்தே தண்ணீரில் கண்டு தனிமையில் மகிழ்வான்.

வயற்கரை வேலியில் நின்ற பூவரச மரங்கள் காற்றுக்குத் தலையை விரித்தன. காற்றுக்குக் காவோலைகள் பனை-களில் உரஞ்சும் சத்தம் கேட்டுப் பீதியுற்ற ஈஸ்வரி கதவு முகப்பில் அப்பாவுக்காக காத்திருந்த அம்மாவுடன் வந்து நின்றாள். அப்போதுதான் பக்கத்து வீட்டிலிருந்து அந்த அவலக்குரல் எழுந்தது. பத்மாக்காவின் குரல்.....

"அவரை ஒன்டுஞ் செய்து போடாதை-தயுங்கோ"

கிடுகு வேலிக்கிடையிலிருந்த பொட்டுக்குள்ளால் புகுந்து சண்முகண்ணை வீட்டுக்கு ஓடினான். அவன் பின்னே அம்மாவும் ஈஸ்வரியும்....

அப்போதுதான்போதுதான் இருட்டினுள் அவர்களில ஒருவனைக்கண்டு மலைத்துத் தடுமாறி....

இருளின் மைந்தர்களென அவர்களுக்கு முகங்கள் இருக்கவில்லை. துப்பாக்கிகளே பேசின. ஒருவன் சண்முகண்ணையை துப்பாக்கி முனையில் நகர்த்தியபடி..... இன்னெருவன் பத்மாக்காவையும், அவவுடன் ஒட்டிக் கொண்டு அழுதுகொண்டிருந்த ரா ஜீயையும் முன்னேறவிடாமல் தடுத்தபடி.....



"அழவேண்டாம் விசாரணை செய்தபின் விட்டுவிடுவோம்"

இவனுக்கு நாவறண்டு கால் நடுங்கிக்கொண்டிருந்தது. யாவருக்கும் எதுவும் பேசமுடியவில்லை. அப்போதுதான் வாசலில் இன்னும் பலரும் நின்றுகொண்டிருப்பதை கண்டான். எல்லாரிலும் ஆயுதங்கள் கொழுவபட்டிருந்தன. மானிடம் அங்கு இல்லாமல் வெறும் ஆயுதப் பொம்மைகளாக.... ஏன்? ஏன்? ஏன்?

"என்னத்திற்காகப் பிடிக்கின்றேர்கள்?" அந்த நேரத்தில் இது அர்த்தமற்றுப் போன கேள்வி.

"அழவேண்டாம் விசாரணை செய்தபின் விட்டுவிடுவோம். தமிழிலைதான் கதைக்கிறம்."

மீண்டும் கதைத்தால் அடிப்பார்கள் போலிருந்தது. முஸ்டியை ஓங்கி வயிற்றிலோ, அல்லது துப்பாக்கியின் மரப்பிடியால் மண்டையிலோ ஒன்று போடக்கூடும். மீண்டும் பயந்தான். பத்மா அக்காவும் பிள்ளைகளும்

பலத்து அழுதனர். சண்முகண்ணை பரிதாபமாக அவர்களைப் பார்த்து " வந்து விடுவேன் பயப்படாதயங்கோ" என்று முணுமுணுப்பது போலிருந்தது.... நித்திரை குழம்பிய விழிகளுடன் ....

நேரத்தை வீணாக்க அவர்கள் விரும்பவில்லை. சண்முகண்ணையை அழைத்துக்கொண்டு படலையைக் கடந்தனர். கொஞ்ச நேரங் கழித்து இவன் ஓடிப்போய் தெருவைப்பார்த்தான். சற்று தூரத்தில் நிறுத்தப்படடிருந்த ஒரு வாகனத்தில் யாவரும் நடந்து சென்று ஏறினார். பின் மறைந்தனர். வண்டியின் பின் பிறேக் வெளிச்சம் சிவப்பாக தெருக்கோடி திருப்பத்தில் பளிச்சிட்டு மறைந்தது. ஊரே உறங்கிக் கொண்டிருந்த இரவு. வானிற் சந்திரன் அசையாதிருந்தான். காற்றும் அடங்கிப்போக நிசப்தத்தின் ஆட்சி....

ஏப்படி சண்முகண்ணை வீட்டுக்கு போவது? ஏப்படி ஆறுதல் சொல்வது? தயங்கினான். ஏன்? ஏன்? ஏன்?. ராஜியும் சுசீயும் இவனைத் துளைத்தனர்.

" விசாரணை செய்தபின் விட்டுவிடுவினம்... " அவர்கள் சொன்ன அதே பதிலை இவனும் சொன்னான். தூக்கம் இழந்த இரவு ஒன்று கடந்தது. களைத்துப்போய் விழிகள் மூடிய விடியக்காலைத் தூக்கம்.

காலை இவனுக்கொரு சேதி சொல்லக் காத்திருந்தது. இவன் ஓரளவு எதிர்பார்த்திருந்தான். சண்முகண்ணையின் உடல் மெயின் றோட்டினை ஒட்டியுள்ள கடைக்கருகில் கிடப்பதாக.. ஓடினான்.. தலையைத் துளைத்திருந்தது ஒரு ரவை.... வழிந்த இரத்தம் சிவப்பிலிருந்து கறுப்பாகிக் கொண்டிருந்தது. போகும் வழியிலேயே காரியத்தை முடித்துவிட்டார்கள். விசாரிக்கவும் விருந்தோம்பவும் அவர்களுக்கு நேரமும், தேவையும் இருக்கவில்லைப் போலும்.

ஒரு அரசியல் இயக்கத்துக்கு ஆதரவாய் இருந்தாராம் என்று ஆட்கள் பேசிக்கொண்டார்கள். எப்படி...? ஒருவேளை அவ்வியக்கத்திற்கான பிரசாரப் பிரசுரங்களை வெளியிட உதவினாரா? சனங்களும் இந்த ஊகத்தையே, உண்மையேன நம்பினார். யார் இதைச் செய்தது.? யார்? யார்? யார்?....

மனமும் உடலும் சோர்ந்த பல நாட்கள் நகர்ந்தன.

பிறகு நடந்தவைகள்' எதுவும் இவனுக்கு பிடித்ததாக இல்லை. பிறகு இவன் இந்த நாட்டுக்கு வந்து சேர்ந்தான். அதையெல்லாம் எப்படி சொல்ல...?

சொல்ல வேண்டியது அம்மாவுக்குப் பல இருப்பது போல ....

" அம்மா, ஈஸ்வரி மட்டும் உன் பெண் பிள்ளையல்ல. ரா ஜியும் சுசீயும் கூட உன் பிள்ளைகள்தான். தகப்பனில்லாத அவர்களை நீயும் கவனித்துக்கொள். ஏன் அப்பாவும்தான்! நான் இங்கிருந்து செய்யக்கூடியதெல்லாம் பண உதவியும், இந்த ஆறுதல் கடிதங்களும்தான் என்னால் இப்போ தீர்மானிக்கமுடியாத ஒரு நாளில் நான் ஊருக்கு வருவேன்....."

அந்த நாட்கள்! அந்த இருப்பு! எவ்வளவு விருப்பமுடையதாய் இருந்தன! இங்கே இந்த நாட்டில் இவனொரு நினைவுகளின் மியூசியமாக.... எல்லா நினைவுகளும் வரலாற்றின் ஏடுகளாக.... அதையே தனது சொத்துக்களாக...

**(<u>நன்றி</u>: மரபு May 1991)**



**யோகன் (சொலமன் யோகானந்தம் - கான்பெரா)**: 1985ம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழகக் கலாசாரக்குழு ஊடாக 'மண் சுமந்த மேனியர்' என்ற நாடகத்தை மேடையேற்றினார்கள்(பிரதி- குழந்தை ம.சண்முகலிங்கம் நெறியாள்கை- க.சிதம்பரநாதன்.) குடாநாடெங்கும் அறுபது மேடையேற்றங்களையும் கண்டு குடாநாட்டைப் போட்டு உலுப்பியிருந்தது அந்நாடகம். இந்த நாடகத்தில் நடித்ததின் மூலமாக இவரின் கலைப் பயணம் தொடங்கியது. 90களில் அவுஸ்ரேலியாவுக்கு இடம் பெயர்ந்தார். மெல்பேர்ணில் பாரதி பள்ளிக்காக மாவை நித்தியானந்துடன் இணைந்து பல சிறுவருக்காக விடியோ திரைப்படங்களை உருவாக்கினார்.

அத்துடன் பல நாடகங்ளை எழுதியும் நடித்தும் உள்ளார். 80பதுகளின் ஆரம்பகாலங்களில் பல கவிதைகயையும் எழுதியுள்ளார். 90 களில் இவரின் பல சிறுகதைகள் கட்டுரைகள் 'மரபு' 'உதயன்' மற்றும் பல சஞ்சிகைளில் இவரின் படைப்புகள் வெளிவந்துள்ளன. அண்மையில் ஈழத்தில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட குறுந்திரைப்பட போட்டியிலும் நடுவர்களில் ஒருவராக கடமையாற்றினார். Yogan also translated and directed a play in Tamil '**Sixty years of Tamil History in 20 minutes**' by Ernest MacIntyre.



# ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை

## நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரை யுங்கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்கவா யூறிடுமே

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்துவிளக்குக் கொழுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டே
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

பழந் தமிழ் இலக்கியம்

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!



**சோமசுந்தரப் புலவர்** யாழ்ப்பாண மாவட்டத்தில் **நவாலி** என்னும் ஊரில் 1880ம் ஆண்டு ஆனி மாதம் 12ம் திகதி பிறந்தார். ஆரம்பத்தில் தனது கல்வியை அருணாசல உபாத்தியாயரிடமும், தனது தந்தையிடமும் திறம்பட கற்ற இவர் பதினைந்தாவது வயதில் பல பாடல்களை தாமாகவே ஆக்கத் தொடங்கினார். வட்டுக்கோட்டையில் உள்ள சின்னத்தம்பி ஆசிரியரும் சோமசுந்தரப் புலவரும் சேர்ந்து அவ்வூரில் ஒரு ஆங்கிலப் பாடசாலையைத் தொடங்கினார்கள். அப்பாடசாலையில் புலவர் நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், இதிகாசம் போன்ற பாடங்களையும் கற்பித்தார். இவர் யாப்பிலக்கணங்கள் கற்பதற்கு முன்னரே பல தனிப்பாடல்களை பாடினார். இதனால் இவரை வரகவி என்று அழைத்தனர்.

சிறுவர்களுக்கெனப் பல கதைப்பாடல்களையும் பாடியுள்ளார். '**தாடி அறுந்த வேடன் எலியும் சேவலும்**' என்ற கதைப்பாடல்கள் இவரின் கவிதை ஆற்றலை பறைசாற்றுவதுடன் சிறுவர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பன. இவை சிறுவர்களால் நாடகமாகவும் நடிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இவற்றை கவிதைநாடகம் என்றும் கூறுவர். சோமசுந்தரப் புலவர் சிறுவர்களிற்காக ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி, புளுக்கொடியல், பவளக்கொடி, இலவுகாத்தகிளி முதலான பல பாடல்களை பாடியுள்ளார். இவர் சிறுவர்களுக்காக பாடிய பாடல்கள் '**சிறுவர் செந்தமிழ்** என்ற பெயரில் 1955ம் ஆண்டு நூலாக வெளிவந்தது.

இவரது காலத்திலேயே **விபுலானந்த அடிகளாரும், சுவாமி ஞானப்பிரகாசரும்** வாழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1925ம் ஆண்டு **உயிரிளங்குமரன்** என்னும் நாடகத்தை எழுதினார். இவர் **அந்தாதி, கலம்பகம், வெண்பா, பதிகம்** போன்ற பல இலக்கிய வடிவங்களை தந்துள்ளார். அதுமாத்திரமல்லமல் **தில்லைஅந்தாதி, அட்டமுகில் கலம்பகம், கதிரைச்சிலேடைவெண்பா, கழையோடைவேற்பதிகம், விநாயகர் பாமாலை, மரதனோட்டம், நல்லை திருப்புகழ், நல்லையந்தாதி, நான்மணிமாலை, இலங்கைவளம், தாலவிலாசம், தந்தையார் பதிற்றுப்பத்து, நாமகள் புகழ் மாலை, முருகன் பாமாலை, சுகாதாரக் கும்பி** போன்று சுமார் 15000 பாடல்களை (செய்யுள்கள்) இயற்றியுள்ளார்.

கட்டுரை

# தமிழர் திருநாள்



• பேரறிஞர் அண்ணா

பொங்கல், உழவர் விழா! தமிழர் திருநாள்! நம்பொனாப் புராணக் கருத் தினை நாட்டினர் மனதிலே மூட்டிவிடும் மற்றைய விழாக்கள் போலன்றி, உழைப் பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் உன்னதமான விழா. களத்திலே காணப் பட்ட பயன், வீட்டிலே, புதுப்பானையிலே, பொங்கிவழியும் நாள், பொங்கல் விழா. செந்நெலும், செங்கரும்பும், பச்சைக் காய்கறியும் பசும்பொன்நிறப் பண்டங்களும், வண்ணக் கோலமும், வாடாமலர்களும், மனைதோறும் குவிந்திடும் மக்கள் நன்னாள்! கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நாள்! ஆடல், பாடல், கொட்டுமுழக்கு, குதூகலம் கூத்தாடும் நாள், பொங்கல் விழா. பாடுபட்ட உழவன் தன் வீட்டுப் பானையில், தான் உழைத்ததில் சிறிதளவு பயனாவது சேர்வதைக் நாள்.

காணும்

களத்திலே செந்நெல் குவியலைக் கண்டபொழுதும், அது புதிய கலத்திலே தீம்பாலமுதாக மாறுவதைக் காணும்பொழு தும், அவனுடைய உள்ளத்தில் உவகை பொங்குகிறது! அவன் பாடுபட்ட நாட்கள், திருந்தாத நிலத்தில் அவன் பட்ட கஷ்டங்கள், வாய்க்காலுக்கு வரப்பெடுத்த காலம். வரப்பைச் சூழ்ந்த கள்ளிமுள்ளி யைக் கல்லி எடுத்துவிட்டுப் பயன்தருமிடமாகச் செய்தகாலம். முதலில் ஏர்பூட்டியது. எருவூட்டியது. பரம்படித்தது. மடை திறந்தது. விதைதூவியது, களைஎடுத்தது. காற்றிலும் மழையி லும், கடும் வெயிலிலும், பயிரைப் பாதுகாத்தது. கதிர்காய்ந்ததும் களத்திலே குவித்தது. இவை எல்லாம் அவன் நினைவுக்கு வருகின்றன. அவனுடன் கூடச்சேர்ந்து உழைத்த உற்றார், உறவினர், ஆருயிர்த்

தோழர்களைப் பற்றிய நினைவும் வருகிறது.

இவ்வளவு நற்கருத்துகளும், இவ்விழாவின் உட்பொருளாக அமைந்திருக்கிறது. அறுவடைதரும் ஆனந்தத்தை, பயன்பெறுபவர் கொண்டு மகிழ்கின்றனர். மகிழ்கையில், அவர்தம் மனதிலே எப்படிப்பட்ட பாடுபட்டபிறகு, இந்த அறுவடை சாத்தியமாயிற்று என்பது பற்றிய எண்ணம், எழாமலிருக்க முடியுமா?

பொங்கல் புதுநாள், தமிழர் திருநாள், வாழ்வின் உட்பொருளை உணருவதற்கு உதவும் நாள்.

அதோ பாலிலே குழையும் சீரகச்சம் பாவைப் பெறுவதற்குப் பாட்டாளி சிந்தியது வியர்வை! இரத்தமும் கூடத்தான்! பாற்பொங்கலாகும்போது, சுவையும் பயனும்! இச்சுவையும் பயனும் கிடைத்திடப் பல பாடுபட்டான்; பஞ்சை யாகி நொந்தான். பகலெல்லாம் உழைத்து விட்டு இரவிலே தூக்கம் பிடிக்காமல் புரண்டிருக்கிறான். கார்கண்டு களிப்பான்! கடுங்காற்றுக் கண்டு கிலி கொண்டிருப் பான்! பூச்சிகண்டு பதைத்தான்! பூமி உலரக்கண்டு பீதி கொண்டான்! முளை கண்டால், முகம் மலரும்! களைகண்டால், கரம் செல்லும் களைய! கதிர்கண்டு ஒரு களிப்பு! அதிலே மணி முற்றுவது கண்டு ஒரு பூரிப்பு! அறுவடையின்போது மகிழ்ச்சி! இவ்வளவுமான பிறகுதான், இன்பம் தரும் பொங்கற் புதுநாள் காணமுடிகிறது! களிப்பூட்டும் விழா நாளன்று, இந்தக்கருத்து மனைதோறும் உலவவேண்டும்.

வாழ்க்கையிலே இன்பம் பெறுவதையே குறிக்கோளாக மக்கள் கொண்டுள்ளனர். இந்த இன்பத்தைப் பெறுவதற்காகப் பாடுபடவேண்டும். முறையுடன்; திறத்துடன்; களைக்காமல் சளைக்காமல் என்பதைப் பொங்கல் விழாதரும் பாடமாகக் கொள்வோம்.

முதலிலே, நஞ்சையும் புஞ்சையும், வரப்பு வாய்க்காலுடன், வேலி காவலுடன், வாவி அருவியுடன், இருந்ததோ பெரு வெளி- மணற்காடு- சதுப்பு நிலம்- சிறுகாடு- இவையன்றோ வயல்களாக மாற்றப்பட்டன. மந்திரக் கோல் கொண்டா? -அல்ல மதிவழிநடக்கும் மக்கள் பாடுபட்டதனால்.

எத்தனை இரவுகள் விழித்துக்கொண்டு எண்ணி எண்ணி ஏக்கமுற்றுப் பிறகு கண்டுபிடித்திருப்பான் உழவுமுறையை! பல தோல்விகளுக்குப் பிறகு, துயரத்தால் தாக்கப்பட்ட பிறகு, விடாமுயற்சியின் பயனாகக் கண்டறிந்தான், நிலத்தைத் திருத்தி நற்பயனைக் காணும் முறையினை. இன்று சாதாரணமானதாகக் காணப்படும் முறைகளைக் கண்டறிய, முன்னாளில் மக்கள் அரும்பாடுபட வேண்டியிருந்தது.

இன்பம்பெற, உழைத்தாக வேண்டும், முறையும் திறனும் கொண்டு! இயற்கையை எழிலிடமாகவும், பயன்தருமிடமாகவும் ஆக்குவதற்குப் பாடுபட்டே வெற்றி காணமுடிந்தது. இயற்கை, வளம் நிரம்பக்கொண்டது. வாழ்வளிக்கும் வல்லமை கொண்டது - ஆனால், இயற்கை, மனிதனின் மதியும் திறனும் கலந்த உழைப்பைப் பெற்றால் மட்டுமே, பரிசளிக்கும் பண்பு கொண்டது! மனிதனுக்குத் தெளிவு இல்லா நிலையிலே, இயற்கை, அவனை மிரட்டும் - மிரட்டுகிறது - மிரட்டி இருக்கி றது பன்னெடுங்காலமாக! பெருவெள்ளமாக, கடுங்காற்றாக, நெருப்பாக, இயற்கைக் கோலம் காட்டி மிரட்டியிருக்கிறது. சிங்காரச் சிற்றருவியாகிச் சிந்துபாடி இருக்கிறது! சந்தனக் காட்டிலே உலவி நறுமணத்தைச் சேர்த்தெடுத்துக்கொண்டு வந்துசேர்க்கும் தென்றலாகி இன்பம் தந்திருக்கிறது! ஒளியும் ஒலியுமாகி, திருவிளக்காகவும், தீங்குழலிசையாகவும் மக்களை மகிழ்வித்திருக்கிறது. இயற்கை ஓர் இன்பவல்லி - ஆனால், ஒரு ஜாலக்காரி! அவள் மிரட்டுவது கண்டு, அவளை அடியோடு வெறுத்து ஒதுக்கிவிட முடியாது- ஒதுக்கிடின், மக்களுக்கு வாழ்வில்லை. அவள் புன்னகை கண்டு பூரித்துச் செயலற்றுமிருந்து விடமுடியாது- வாழ்க்கை செம்மைப்படாது.



இயற்கை, மனித முயற்சியினாலும், மதியின் வளர்ச்சியினாலும், கட்டுப்படுத்தப்பட்டுப் பயன்தரும் விதமாகப் பணியாற்றும் பாவையாக்கப் படவேண்டும். நீரின்றி வாழமுடியாது. நீரிலேயே வாழவும் முடியாது! நெருப்பின்றி வாழ முடியாது! நெருப்பிலேயே வாழவும் முடியாது! காற்றின்றி உயிர் இல்லை. காற்றிலேயே இருந்துகொண்டிருக்க முடியாது! இயற்கையின் சக்திகளின்றி வாழ முடியாது. ஆனால், இயற்கையுடன் மட்டுமே வாழவும் முடியாது! தானாக விளைவதைக் கண்டு, உண்டு, நீருள்ள இடத்திலே சென்று தண்ணீரை உண்டு, காற்றடித்தால் கஷ்டப்பட்டு, நெருப்புப் பரவினால் பயந்தோடி, வெள்ளம் கிளம்பினால் மிரண்டோடி இயற்கையினாலே ஆட்டிவைக்கப்படும் ஆதி மனித நிலையை விட்டு, மனிதன் மிகமிகக் கஷ்டப்பட்டு இன்று அடைந்துள்ள முன்னேற்றம், கொஞ்ச நஞ்சமல்ல. எண்ணிப் பார்த்தால் அவன் பெற்றுள்ள வெற்றிகள், சாமான்யமானவையல்ல என்பது தெரியும். ஆனால், அவன் பெறவேண்டிய வெற்றிகளோ, அநேகம்- வளர்ந்தபடி உள்ளன. இன்புற்றிருக்கவே இயற்கையைத் தன்வழிக்குக் கொண்டு வர, மனிதன் பாடுபட்டிருக்கிறான். வளம்கிடைக்க, வாழ்வுக்கு வழிகிடைக்கப் பாடுபட்டு, முறைபல கண்டறிந்தான்-அவற்றிலே அற்புதமானது இந்த உழவு முறை. ஆனால், வளம் நிரம்பிய தாய், வசதியாய், உலகு ஆக்கப்பட்டுவிட்டதால் மட்டுமே, இன்பம் கிடைத்துவிடுமா? இல்லை! உலகைப் பார்க்கி றோம்-கண்ணீர் நிற்கவில்லை! இரத்தும் சிந்தியபடியேதான் உள்ளனர்.

அதோ அழகுள்ள புள்ளிமான், அருவியோரத்தில் பசும்புல்லை

மேய்ந்துகொண்டு இருக்கக் காண்கிறோம்.

இன்புற்றிருக்கிறது- உண்மை. ஆனால், அதோ, சற்றுத் தொலைவிலே புதருக்குள்ளே ஒரு சலசலப்பு- இரு தீச்சுடர்கள்-ஓர் உறுமல்-பாய்ந்து வருகிறது சிறுத்தை! புள்ளிமானின், இரத்தம், சிறுத்தைக்கு இனிய பானமாகியது! பாய்ந்தோடித் தாக்கும் சிறுத்தை, பெற்ற இறைச்சியிலே, கீழே சிதறிய சிறுதுண்டுகளைக் கவ்விக்கொண்டோடும் சிறுநரி, இன்புறுகிறது மற்றொருபுறம். மாடப் புறாவை, வல்லூறு துரத்துகிறது-அதை வீழ்த்த, வேடனின் கணைபறக்கிறது! ஆடும் மயிலைக் கண்டு மகிழ்கிறான் வேடன்; அவன் காலைத் தீண்டிக் கொல்கிறது நாகம்! கீரி பாய்ந்து, நாகத்தைப் பிய்த்து எறிகிறது. இவ்விதம், காட்டுவாழ்வு இருக்கிறது - இரை கிடைத்தால் இன்பம் - இரை தேடும்போதோ ஆபத்து. வாழ்வு - அறிவு - வம்புக்கு முயற்சி, அழிவுக்கு வழி - என்றவண்ணம், ஒரு சஞ்சலச் சக்கரம் சதா சுழன்று கொண்டிருக்கக் காண்கிறோம்! இதற்கு இடையே, குயிலும் வானம்பாடியும் பாடிக்கொண்டுதான் உள்ளன. மயில்தோகையைவிரித்து ஆடிக்கொண்டுதான் இருக்கிறது. மான் விழி, மந்தியின் குளறுமொழி, கிளியின் கொஞ்சுமொழி எனும் பலவும் உண்டு! வாழ்வு உண்டு! ஆனால், அதற்கோர் நிலை கிடையாது - ஒன்றையொன்று அழித்துக்கொண்டாக வேண்டும் - வாழ்வு ஒரு பெரும் போராட்டம் - முறை, நீதி, நேர்மை எனும் எந்தக் கட்டும் இல்லாத ஒரு பயங்கரப் போராட்டம். புள்ளிமான் செய்த குற்றமென்ன - புலியாரின் கோபம் கிளம்பிடக் காரணம் ஏதேனும் உண்டோ? இல்லை! எனினும், மான் பிழைக்கிறதோ புலியின் பார்வைபட்டால்? இல்லை! இதுகாட்டுமுறை- வாழ்வு ஒரு கொலைக்களமாக இருந்துவரும் இடம்.

இந்நிலையின்றி, வளம் நிரம்பியதாக மட்டுமல்லாமல், ஒருவரை ஒருவர் அழித்தால் மட்டுமே வாழ முடியும் என்ற கொடிய நிலைமாறி, எல்லோரும் இன்புற்று இருக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன், அதற்கேற்ற நிலையை ஏற்படுத்துவதே,

மதிபடைத்த மனிதன் கொள்ளும் குறிக்கோள்.

இன்பமே, வாழ்க்கையின் குறிக்கோள் -இதிலே காட்டு முறை, இன்பம்பெறப் பிறரை அழித்தாலும் சரி, வதைத்தாலும் சரி, என்று இருப்பது; கண்ணியமான முறை, இன்பம் பெறவேண்டும், இன்னொருவனுக்குத் துன்பம் வராமலிருக்கவும் வேண்டும் - எல்லோருக்கும் வாழ உரிமை உண்டு. வழி வேண்டும்; ஒருவரை ஒருவர் சுரண்டியோ, ஏய்த்தோ பிழைப்பது வாழ்வல்ல - நீதியல்ல - என்ற எண்ணம் ஆட்சி புரியும் முறை. உலகப் பேரறிவாளர் யாவருமே, இந்த ‘முறையை' நிலைநாட்டவே, பல்வேறு வழிகளிலே, பாடுபட்டு வருகின்றனர். சிறுசிறு வெற்றிகளும் பெற்று வருகின்றனர்.

இயற்கையை, அறிவுத்திறன் கொண்டு அடக்கிப் பயன்தரச் செய்து, வாழ்வுக்குத் தேவையான வளம் கிடைத்திடச் செய்த முதல் முயற்சி, ஆற்றலை அடிப்படையாகக் கொண்டது! பிறகோ, வளம்மட்டும் போதாது, வாழ்வு சிறக்க-முறைவேறு தேவை என்ற எண்ணம் தோன்றுகிறது - அன்பு நெறி பிறக்கிறது. நாம் மட்டும் வாழ்ந்தால் போதுமா, அதோ பலர் வதைகிறார்களே - நாம் வாழ்கிறோம், நமக்கு வாழ்வளித்த பலர் வதைகிறார்கள்; நாம்வாழப் பலரை வதைத்தோம் என்ற உண்மை மனத்திலே தாக்கத் தொடங்கும்போது, அன்பு நெறி பிறக்கிறது. இரக்க உணர்ச்சி பிறக்கிறது. ஏதோ ஒருவகையிலே, நம்மாலான அளவுக்கு, வாழ்விலே இன்பம் பெறாது, வதைக்கப்படும் மக்களுக்கு அன்பு காட்டுவதன்மூலம், உதவி தருவோம் என்று எண்ணுகிறார்கள். இந்த அன்புநெறி- நல்லுபதேசம், ஒழுக்கப் போதனை, ஓங்காரத்தின் துணை தேடுதல், சத்திரம் சாவடி கட்டுதல் எனும் பல முறை களாகின்றன. ஆயினும், இந்த அன்புநெறி, தேடிய பயனைத் தரவில்லை - எல்லோரும் இன்புற்றிருக்க வழி ஏற்படவில்லை, என் செய்வது! ஆற்றல், வாழவழி செய்து தந்தது! ஆயினும், பலர் அழிவது தெரியக்கண்டு சிந்தைநொந்தது! அன்புநெறி பிறந்தது எனினும், அதனாலும் இன்பம் அனைவருக்கும் கிடைக் கும் என்ற முறை நிலைக்க வில்லை. எனவே, ஏன் சிலர் வாழ்கிறார்கள், பலர் வதை கிறார்கள் - சிலருடைய வாழ்க் கைச் சுகத்துக்காகப் பலர் பதைபதைத்து வதைய வேண்டுமா? - சிலர் காட்டும் அன்பு, பலருடைய அல்லலை, அவதியை, எங்ஙனம் போக்கும்? பாலைவனத்திலே பன்னீரைத் தெளித்துப் பயன் என்ன? - என்றெல்லாம் எண்ணுகிறார்கள். எல்லோருமா? - இல்லை - எத்தர்கள் எண்ணிடார்; ஏமாளிகள் எண்ணிடத் திறமிலாதார்; அறிஞர் பெருமக்கள் சிலர் எண்ணுகிறார்கள் - அந்த எண்ணத்திலே பூத்திடும் கருத்தே, அறநெறி! அறத்தால் வருவதே இன்பம், ஆற்றலால் மட்டுமல்ல - அன்பு தெளிப்பதால் அல்ல - அறத்தால் வருவது இன்பம் என்று கூறுகின்றனர். இம்மை செய்தது மறுமைக்கு ஆமெனும் வணிகரின், பண்டமாற்று அல்ல அறம் - அந்த அறத்தை அல்ல, எல்லோரும் இன்புற்று இருக்க வழியாகக் கொள்ள வேண்டியது.

இயற்கையின் முழுவல்லமையைக் கண்டறிந்து - தெரிந்த அளவையும் திறம்படப் பயன்படுத்திப் பயன்கண்டதை, அவரவர் தத்தமது கடமையைச் சரிவரச் செய்து அறநெறியை மேற்கொள்ளின், உலகம் வாழ, ஒரு பகுதி வதைக்கப்படும், இன்னொரு பகுதி இன்புற்றும் உள்ள இழிநிலையில் அல்ல; எல்லோரும் வாழும் நிலையில், உலகம் வாழ முடியும் என்று உறுதி பிறக்கிறது.

உழைப்பு முறை, உழைப்பின் பயனாகக் கிடைக்கும் பயன்களைப் பகிர்ந்து கொள்ளும் முறை, எனும் இருதுறை களில், முன்னதில் ஆற்றலும், பின்னதில் அறநெறியும் காட்டல் வேண்டும்!

அறநெறி என்று கூறப்படுவது, மந்திர உச்சாடனச் சொல் அன்று; ஓமகுண்டத்தருகே உலவுவதன்று! கள்ளமில்லா உள்ளத்திலே பூத்துக் காய்த்து பழுத்திடும், பயனும் சுவையும் உள்ள கனி அது. வெறும் பொருள் பகிர்ந்து கொள்ளும் முறை மட்டுமன்று - தொழில் அமைப்புத் திட்டம் மட்டுமன்று - இவற்றுடன்கூட, மக்கள்

எவ்வகையிலே இழிவாலும் கொடுமையாலும் தாக்கப்பட்டாலும், அவர்களை மீட்டிடவும், அத்தகைய தாக்குதல் மக்களுக்கு நேரிடாதபடி முறைவகுத்தலும், ஆகிய எல்லாம் சேர்ந்த, பொதுவான, பொறுப்பான, வாழ்க்கை அமைப்புத் திட்டம் அறநெறி! எனவே தான் மனிதகுலம், குரங்கு நிலையிலிருந்து, கோயில்கட்டிக் கும்பிடும் நிலை அளவுக்கு வளர்ந்தும், எந்த இன்பம் இன்னமும் கிடைக்கவில்லையோ, அந்த இன்பத்தைப் பெறுவதற்கு, வள்ளுவர் அறநெறியைக் காட்டியிருக்கிறார்; அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்; அறத்தால் வருவதே இன்பம்!

பாட்டாளியின் கூலியைக் குறைத்துச் சேர்ந்த இலாபச் சொத்திலே, பழனியாண்டவருக்குப் பஞ்சாமிருத அபிஷேகம் செய்வதோ, பத்துப் பண்டாரங்களுக்குச் சோறிடுவதோ, அறமாமோ! ஆகாது! செல்வம் சேர்ந்தவிதமே, அறத்தை அழித்தமுறையால்! அவன் செய்வது, வேடபக்தி- விளம்பரதானம் - அறமன்று!

வள்ளுவர் கூறிய அறம், ஆரிய முறைப்படி நம்மவருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தான தருமம் அல்ல - மக்களின் வாழ்விலே, உள்ள பொறுப்புகளுக்கும் கடமைகளுக்கும் ஏற்றபடி, வாழ்க்கைத் திட்டம் அமைய வேண்டும் - ஒருவர் வாழ்வை மதித்து மற்றவர் நடத்தல் வேண்டும் - அவரவர் களுக்குள்ள கடமையினின்றும் வழுவாதிருக்க வேண்டும் - வாழ உரிமை கொண்டோரே மக்கள் அனைவரும் என்ற பொதுநீதியை அழிக்காதிருக்க வேண்டும். இது அறநெறி; இதனை அறிந்து நடந்தால்தான் இன்பம் வரும் என்று கூறிய வள்ளுவர் வாக்கை, இன்பம் தரும் நாளாம் இப்பொங்கற் புதுநாளன்று மனத்திற் கொண்டு, அந்த அறநெறி தழைத்திடும் அரும்பணியாற்ற உள்ள உரம் கொள்ளக் கோருகிறோம், வள்ளுவர் வாழ்ந்த தமிழக மக்களை. வாழ்க தமிழ்த் திருநாடு! வளர்க அறநெறி!!

(திராவிட நாடு பொங்கல் மலர் - 1949)



# தாய் மடி தேடி

## இரவுச்சூரியன்

நேரம் மதியம் இரண்டைத் தாண்டியிருந்தது. நாவற்குழிச் சந்தியில் கண்டி வீதியிலிருந்து கிளை விட்டுப் பிரிந்து, தச்சன் தோபபு , தனங்கிளபபு ஊடாக சங்குப்பிட்டி நோக்கி செல்லும் அந்தத் தார் வீதி யுத்தத்தின் கோர வடுகக்ளைச் சுமநத்தன் காரணமோ, கனலாய்த் தகித்துகெ காண்டிருந்தது. கானல் நீர் கணக் ளைக் கூசவைக்கும் அப்பொழுதில் இன்னும் கூட அந்த மண்ணின் வாசம் சுமந்து செங்காற்று வீறாபபு குறையாமல் வீசிக்கொண்டிருகக் , புழுதி படர்ந்த அந்த தார்வீதியில் மிக வேகமாய் தனியார் பேருந்து ஒன்று பயனித்த வண்ணமிருந்தது.

பேருந்தின் இறுதி இருகல் கயில் வெள்ளை வேட்டிசட்டையுடன், தடித்த கறுப்பு நிற சடட்மிடட் மூ க்குக்கண்ணாடியுடன் ஓர் முதியவர் அமர்ந்திருக்கின்றார். பேருந்தின் வேகத்திற்கு ஈடுகொடுகக் இருக்கையை ஒரு கையால் இறுகப்பற்றி மறுகையால் பிரயாணப்பையை வாஞ்சையுடன் அணைத்துக்கொள்கிறார். தனங்கிளப்பு சந்தியில் தரித்த பேருந்து பெருமூச்சுடன் கிளம்ப சந்தியில் சிதிலமடைந்து கவனிப்பாரற்று கிடக்கும் மடத்தை பார்த்தவுடன் முதியவரின் கண்களில் நீர் முட்டுகின்றது. எத்தனை பேருக்கு ஆறுதலளித்த மடமது. விரைந்த பேருந்து அரைமணி நேர பயணத்தின் பின் குழுக்கலுடன் தரித்துக் கொள்கின்றது. " ஐயா இது தான் நீங்கள் கேட்ட இடம், கெதியாய் இறங்குங்கோ" கரகரத்த குரலில் சாரதி தனக்கேயுரிய நாட்டாமைத் தொனியில் உத்தரவிட, நினைவு திரும்பிய முதியவர் மெல்ல இறங்கிகொள்கிறார். புழுதியைக் கிளப்பியவண்ணம் விரைந்து சென்ற பேருந்து கானல் நீரில் கலங்கித் தெரிந்து, சிறு புள்ளியாய் மறைவதை ஆசையுடன் பார்த்துக்கெ ாள்கிறார். திரும்பிய முதியவர்கண்முன்னே தெரியும் வெண்ணிற மணல் ஒழுங்கையைப் பார்கிறார். பின் சுற்றும் முற்றும் பார்க்கிறார். அந்த அகோர வெயிலில் கால்நடைகள் பூவரச மரநிழலை நாடி அதன் கீழ் அசைபோட்ட வண்ணம் அமர்ந்திருகின்றன.

இப்படியா இந்த இடம் இருந்தது, என முதியவர் யோசிக்க, ஆட்காட்டி குருவி ஒன்று அவர் தலைக்கு மேல் பறந்து பெரிதாய் குரலெடுத்து நிசப்தத்தைக் குலைத்த திருப்தியோடு சடுதியில் மறைகிறது.

மெல்ல அந்த வெண்ணிற மணல் ஒழுங்கையில் அடியெடுத்து வைத்த முதியவர் இருபுறமும் கம்பரமாய் இருந்த தென்னைதோப்புகளைத் தேடுகின்றார். யுத்தத்தினால் சிதிலமடைந்த களையிழந்த தோப்புகள், பாராமரிபப்பு பஞ்சத்தினால் தோப்பிலே பனைவடலிகள் காடாய் முளைவிட்டிருந்தன. எங்கே தொலைந்தது இந்த மக்களின் ஆரவாரம் என நினைகக் முதியவரின் தலை வேகமாக கிறுகிறுக்கிறது. முழந்தாளிட்டு மணல் ஒழுங்கையில் அமர, இருகண்களிலும் தாரை தாரையாக கண்ணீர் பெருக்கெடுக்கின்றது. சிறுபிள்ளைப்போல் கேவிக்கேவி மனப்பாரம் நீங்க் அழத்தொடங்குகின்றார்.



மங்கிய மாலைப்பொழுதில் தொழுவத்தில் தன் தாயப்பசுவைத் தொலைத்து விட்டு, பாலுக்காக

" அம்மா" எனக் கதறி தவிக்கும் இளங்கன்றாய்

இன்று தாய் மடி தேடும் இந்த முதியவர் யார்? இவர் செய்தது பிழையா இல்லை இளங்கன்று பயமறியாது என நியாயப்படுத்திக் கொள்ளலாமா, தெரியவில்லை.

அறுகுவெளி, அது ஒரு அழகான மருதம். நாற்புறம் பார்த்தாலும் கண்ணுக்கெட்கெட்டிய தூரம் வரை பச்சைப்பசேலென வயல் வெளிகள். வயல்வெளியின் நடுவே கம்பீரமாய் ஓர் ஆலமரம். அதனை ஒட்டி ஓர் குளம், அதனருகே பிள்ளையார் கோயில். கோயிலருகே தீர்த்தக் கிணறு, வயல் வெளிகளை ஊடறுத்து கிழக்குத் திசையில் வரம்பினூடே நான்கு மைல்கள் நடந்தால் குடிமனைகள் கண்களுக்கு புலப்பட, வறுமையின் கோரமுகமும் சேர்ந்தே தென்படும். மிகக் குறைந்த குடித்தொகையும் , கணக்கற்ற விளை நிலங்களையும் கொணட அந்த அழகிய கிராமம், வறுமைக்கோட்டின் கீழ் அல்லல்பட முதலாளி வர்க்கமே காரணமாகியிருந்தது.

பெரும்பாலும்அறுகுவெளியை அண்டிய சாவகச்சேரியைச்சேர்ந்த நிலக்கிழார்களே அந்த வயல் வெளிகளின் பெருமைமிகு சொந்தகாரர்கள். அப்பாவிகளின் உழைப்பை உறிஞ்சிய நகரம், நாகரீகக் காற்று அந்த கிராமத்தில் பிரவேசிப்பதற்கு கூட தடை விதித்திருந்தது. விதைப்பு மற்றும் அறுவடை நாட்களிலே நகரத்தார் கால்கள் இந்த மண்ணில் பதியும். விளைச்சலை உறிஞ்சிய நகரம் அறுகுவெளியினவிருத்தி நாடிய உயிர்ப்பை கருவறுத்திருந்தது.

பின்தங்கிய அறுகுவெளிக்கு நம்பிக்கை நட்சத்திரமாய் திகழ்ந்தவர் முததையா அண்ண ன். ஆறுஅடி உயரமும் வெயிலில் உழைத்து உரமேறிய கருமேனியாய் கம்பீரமாய் காட்சியளிப்பார். இவரே சாவகச்சேரி நகரத்திற்கும் அறுகுவெளிக்கும், இடையே உத்தியோகபற்றற்ற இணைப்பதிகாரி. மேற்சட்டை

அணிந்து இவரை என்றுமே காணமுடியாது. வெள்ளை வேட்டி, தலைப்பாகையுடன் முத்தையா அண்ணன் அந்த பச்சை வயல் பரப்பினூடே கம்பீரமாய் நடந்து வருவது பார்ப்பதற்கு கொள்ளை அழகு. அவர் அப்படி நடை அவர் பேச்சை மீறியவர்கள் அக்கிராமத்தில் இல்லையென்றே சொலலலாம். ஊருக்கே தெய்வமான முத்தையா அண்ணன்

இருந்ததெல்லாம் ஓர் குடிசையில்தான். அவருக்கு கூட விளை நில உரிமை மறுக்கபப் ட்டிருந்தது. அறுகு வெளயில் வயற் பிள்ளையார் மட்டுமே கல் வீட்டில் குடியிருந்தார். பூசைக்கு கூட ஐயர் சாவகச்சேரியிலிருந்து வரவேண்டியிருந்தது. பிள்ளையார் அருளிய முக்கிய வரங்களிலொன்று நகரத்தார் ஒழுங்கு செய்யும் பொங்கல் நாட்களில் அக்கிராமத்தின் பசியை தீர்த்துவைப்பது.

அறுகு வெளி மண்ணுக்காய் உழைத்த முத்தை தயா அண்ணன், அம் மணணிலே பிறந்த விசாலாட்சியை மணமுடித்திருந்தார். பல நாட்கள் பிள்ளைபேறு இல்லாது தவித்த தம்ப திகளுக்கு பதினைந்து வருடங்களின் பின் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அன்று கிராமத்திற்கு விருந்து படைத்த முத்தையா அணண்ன் மகனுக்கு முருகேசர் என பெயர்சூட்டினார்.

தனது ஐந்து வயது வரை கிராமத்து பிள்ளைகளுடன் சுதந்திரமாக விளையாடித் திரிந்த முருகேசர் பலத்த கட்டுபாடுகளை சிறிது சிறிதாக உணர்ந்து கொண்டார். தன்னைப்போலல்லாது, தனக்குபின் ஓர் படித்த வாரிசை அறுகுவெளி முன்னேற்றத்திற்காக உருவாக்குவதில் முத்தையா அண்ணன் குறியாக இருந்தார். அதன் நேரடி விளைவு, கிராமத்தில் பாடசாலை இல்லாத காரணத்தால் முருகேசர் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரிக்கு அனுபப்பட்டார். தனது ஆறுவயதிலேயே அனுபவத்தால் செங்கோண முக்கோண தேற்றத்தை அறிந்து வைத்திருந்தார் முருகேசர். சாவகச்சேரி, தனங்கிளபப் , அறுகு வெளி மூன்றையும் இணைத்து கோடு வரைந்தால் செங்கோண முக்கோணம் போலிருக்கும். தேறற் விதியின்படி செம்பகக் நீளம், மற்றய இருபகக் நீளங்களின் கூட்டுத்தொகையை விட குறைவானது. அதை அனுபவத்தினால் அறிநத் முருகேசர், தனது ஆறுவயதில் புத்தகப்பையையும் கட்டுச்சோறுமாய் அறுகு வெளியிலிருந்து, ஒற்றைப்பனை மரத்தை குறிவைத்து நடந்தாரென்றால் இரண்டு மணிநேர நடையில் சாவகச்சேரி சுடலையின் பின்புறத்தை அடைந்துவிடுவார். அவ்விடத்தில் ஓட்டம் பிடிக்கும் முருகேசர் நிற்பது பாட-சாலை வாசலில்தான்.

நாள் ஒன்றுக்கு நான்கு மணிநேரம் நடையில் செலவிட்டு படித்த முருகேசர், தான் படிப்பிலும் சூரப்புலி என நிருபித்துக்கொண்டார். எந்தச் சமூகம் தனது மக்களின் உரிமைகளை மறுதத் தோ, அந்தச் சமுகத்தில் படிப்பிலே தனக்கென தனியிடம் பதித்துகொணட் முருகேசர் பதினாறு வயதை அடைந்தபோது பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்காக தன்னை தயார்படுத்துவதில் குறியாக இருந்தார். முத்தையா அண்ணனும் விசாலாட்சியும் நடுச்சாமம்வரை மகன் மங்கிய விளக்கொளியில் அக்கரையாய் படிப்பதை பெருமிதத்துடன் பார்த்து, தூரத்தில் விடிவெள்ளி தெரியும்வரை இருந்து, அவ்வெள்ளியாய் நிச்சயம் முருகேசா் அக்கிராமத்திற்கு விளங்குவார் என எண்ணி ஆறுதலடைந்து சற்று நேரம் கண் அயர்வார். முருகேசரின் அபரீத வளர்ச்சியில், முன்னேற்றத்தில், விசாலாட்சியின் அண்ணன் மகள் கோமதி உன்னத பங்காற்றியிருந்தாள். தனங்கிளபப்பு பாலர் பாட-சாலையில் மூன்றாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக்கொணட் கோமதி, முருகேசருக்கு பிடித்த உணவு தாயாரிப்பது முதல், உடுப்பு துவைப்பதுவரை தன்னாலியன்ற அனைத்து உதவி-களையும் செய்து, முருகேசரை முழுமுச்சாய் படிப்பில் ஈடுபட வைத்தாள். தான் கூலி வேலையில் சம்பாதித்ததில் தெரிந்தவாகள் சாவகச்சேரி செல்லும்போது துணிமணி வாங்கி, முருகேசரை வியப்பில் வைத்துவிடுவாள். முருகேசர் அதை அணிந்திருப்பதை இரகசியமாக பார்த்து இரசிப்பாள்.

வயல்வெளிகளே கதியாகக்கிடந்து வேலை செய்தாலும், இயற்கை கோமதியின் அழகிற்கு குறைவைக்க வில்லை. தாவணியில் தென்படும் . அவளை கம்பன் கூறியது போல " விரி மழை குலம் கிழித்து ஒளிரும் மின்னென" சட்டென கண்டுகொள்ளலாம்.



அது முருகேசர் பலக்லைகழகப் புகுமுகப் பரீட்சையை முடித்துவிட்டு பெறுபேறுகளுக்காக காத்திருந்த காலம். முருகேசரின் பொழுது போக்கிற்காக, பேச்சுத் துணையாக கோமதி தென்பட்டாள். இயற்கையின் உந்துதல் முருகேசர் சிறிது சிறிதாக தன்னையறியாமல் கோமதி மேல் காதல் கொண்டார். யாருமற்ற வேளைகளில் குளத்தங்கரையில் அமர்ந்து காதல் மொழி பேசுவது அவர்களுக்கு தேனாய் உருசித்தது. இதுவரையில் எந்தவொரு உயிர்ப லிக்கும் குற்றப்பத்திரிகை வாசிக்கப்படாத அந்த குளத்தில் இருந்த முதலையைத்தவிர, வேறு எவருக்கும் இவர்கள் காதலுக்கு சாட்சியாக முடியாதிருந்தது. வயல்வெளி, தோப்பு , வாயக் கால் எனக் காதல் மொழிகள் பேசியபோதும் கோமதி கிராமத்து பெண்ணுக்குரிய எல்லைகளைப் பேணி, முருகே-கசரை தூய காதலின் பக்கம் ஈர்த்துச்செல்ல முயன்றாள்.

அன்று பலத்த மழை, வாய்காலில் தணணீர் கரை புரண்டு ஓடியது. பரீட்சை பெறுபேறுகளை அறியச் சென்ற மகனுக்காய் முத்தையா அண்ணனும், விசாலாட்சியும் திண்ணையில் அமர்ந்திருந்தனர். தூரத்தில் முருகேசர் மழையில் நனைந்து ஓடி வருவதைக் கண்ட முத்தையா அண்ணன் சாக்கை தலையில் போட்ட வண்ணம் மகனை கிராம மக்களைத் தற்காலிகமாக பிரிந்து, கொழும்பு

நோக்கி ஓடினார். உழைப்பு வீண் போகவில்லை. முருகேசர் கொழும்பு பல்கலைகழகத்திற்கு மருத்துவப் படிப்பிற்காகத் தெரிவாகியிருந்தார். முத்தையா அண்ணன் பிள்ளையார் கோயில் திசையை நோக்கி கையெடுத்து கும்பிட்டு, முதன் முறையாக வாய்விட்டு அழுதார். அன்று கிராமமே திரண்டிருந்தது, கிராம வாயிலான அந்த வெண்மணல் ஒழுங்கையின் முடிவில். சங்குப்பிடடியில் இருந்து சாவகச்சேரி நோக்கி செல்லும் பேருந்து தரித்து நிற்க , பெற்றோரை, காதல் மொழி பேசி கவர்ந்த காதலியை, இன்று அதே முருகேசர், தனது எழுபதாவது வயதில் சிறுபிள்ளை போல அதே வெண்மணல் ஒழுங்கையின் முகப்பில், முழந்தாழிட்டு கேவிக் கேவி குழந்தை போல அழுகின்றார், தாய் மடி தேடும் இளங்கன்றாய்.

கொழுமப் சென்ற முருகேசரை கோட்டை புகையிரத நிலையத்தில், தன்னை அறிமுகம் செய்து அழைத்துசெல்கிறார், சாவகச்சேரியைச் சேர்நத் நிலகிழாரும் கொழும்பில் சொந்த வீட்டுடன் பெரிய வேலையிலிருக்கும் சரவணமுத்து. தெகிவளையில் அமைந்திருந்த அந்தப் பெரிய வீட்டில் முருகேசருக்கு முன் அறை ஒதுக்கி தரப்படுகின்றது. பலக் லைகழகத்தில் முருகேசர் மிகத்திறமையாக முன்னேறிக்கொண்டிருந்தார். வருடத்தில் இருமுறை கிராமத்திற்கு வரும் முருகேசர் ஆசையாக கோமதிக்கு அன்பளிப்புகளை வாங்கிவருவார். அன்று அவர்கள் குளத்தங்கரையில் தனித்திருந்ததை அவதானித்த முத்தையா அண்ணன் மனதில் பட்டண



மோகம் தன் மகனின் தொப்புள் கொடி உறவின் உணர்வை பாதிகக்வில்லை எனத் திருப்தியுற்றார். மகன் படிப்பை முடித்தவுடன் கல்யாணத்தையும் முடிக்கலாம் என மனைவியிடம் கூற, விசாலாட்சிக்கு தலைகால் புரியவில்லை. ஒரு புது மணமகனின் வரவிற்காக, ஒரு வைத்தியரின் தரிசிப்பிற்காக அந்த அறுகு வெளிக் கிராமமே யாசித்து இருந்தது.சரவணமுத்துவிற்கு ஒரே ஒரு மகள். ஜெயமாலினி காண்போரை கவரும் அழகி, நுனிநாக்கில் ஆங்கிலம் புரள அவள் கதைப்பதே தனி அழகு.

அவளின் நிறமும், உடை நடையும் முருகேசரை கிறுகிறுகக் வைத்ததுண்டு. எனினும் அடிக்கடி கோமதி நினைப்பு அவரை கட்டிப்போட்டு வைத்திருந்தது. ெ ஜயமாலினி ஒர் தனியார் மருத்துமனையில் மருந்தாளராக கடமையாற்றிக் கொணடி ருந்தாள். அது கொழும்பில் பலபேரை மலேரியா தாக்கிய காலம். படுத்த படுக்கையாகிய முருகேசர் கிராமத்துக்கு தகவல் சொலல் மறுத்து விடட் ார். அருகே இருந்து கவனித்த ஜெயமாலினி மேல் ஈர்பபுக் கொணட் முருகேசர், கோமதியோடு அவளை ஒப்பிட சிந்தையில் கோமதி சிறுபுள்ளியாய் ஓடி மறைந்தாள். பலக் லைகழக இறுதி முடிவு வந்தபோது முதல் மாணவனாக தெரிவாகிய முருகேசர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்புத் தொடர அனுமதி கிடைத்தது. தகப்பனின் அழைப்பை ஏற்று கிராமம் செலல் மறுத்த முருகேசர் ஜெயமாலினியுடன் கொழும்பில் ஊர் சுற்றத் தொடங்கினார். தருணம் பார்த்திருந்த சரவணமுத்து வைத்தியர் மாப்பிளளையை தவறவிடாது கெட்டியாயப் பிடித்து, பதிவுத் திருமணம் செய்து வைத்துவிட்டார். செய்தி கேட்ட முத்தையா அண்ணன் மெய் சோர திண்ணையில் அமர்ந்துவிட்டார். விசாலாட்சி தலையிலடித்து அழ, பனை மட்டை படலையைத் திறந்து தலை தெறிகக் ஓடிவந்த கோமதியை இருவரும் நிமிர்ந்து பார்கக் திராணியற்று நின்றனர். கிராமமே சோபை இழந்து முத்தையா அண்ணன் வீட்டில் குழுமியிருந்தது.

கோமதியோ அந்த சோகத்திலும் சுழன்று சுழன்று மாமா, மாமிக்கு பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவளைப் பொறுத்தவரை முருகேசர் முன்னேற்றமே அவள் எண்ணமாக இருந்தது. தன்னை மணம் முடிப்பதை விட ெ ஜயமாலினியை மணம் முடிப்பது முருகேசருக்கு சாலச்சிறந்தது என எண்ணினாள். ஆனால் முத்தையா அண்ணனோ தனக்குப்பின்இந்தக் கிராமத்தின் வழிகாட்டி என யாரை நினைத்தாரோ அந்த வழிகாட்டியைத் தொலைத்த துக்கத்தில் படுத்த படுக்கையாகினார். இலணட்ன் சென்ற முருகேசர் அங்கே ஜெயமாலினியையும் அவள் பெற்றோரையும் வரவழைத்து தனது திருமணதன் த மிகவும் ஆடமப் ரமாய் நடாத்தினார். அடுத்த வருடம் முத்தையா அண்ணன் இறந்த செய்தியும், அதற்கு இரு



வருடங்களின் பின்னர் விசாலாட்சி இறநத் செய்தியும் முருகேசருக்குத் தெரிவிக்கப்படட் போதும், இலண்டன் இரைச்சலில் முருகேசர் காதுகளுக்கு அது கேட்கவில்லை. கம்பீரமாய் அந்த வயல்வெளிகளில் உலா வந்த முத்தையா அண்ணன் கொள்ளி வைக்க மகன் இன்றி அக்கினியுடன் சங்கமமாகிய போது கிராமமே பெருங்குரலெடுத்து கதறிய பொழுது, வீசிய காற்று கூட அந்த வயல்வெளியை கடந்து போக கூசி நின்றது.

காலம் தன் கடமையை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருநத் து. முருகேசர் ஜெயமாலினி தம்பதியின் ஓர் மகனும், மகளும் படித்து பெரியவர்கள் ஆனதும் தங்கள் விருப்பப்படியே வாழ்கைத் துணைகளைத் தேடிக்கொண்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தான் செய்த பாவம் தன்னைத் துரத்துவதை முருகேசர் முதன்முறையாக உணரத் தலைப்பட்டார். பேரப்பிள்ளைகள் பிறநத் பொழுது சிறிது கவலைகளை மறந்திருநத் முருகேசர் பேரப்பிள்ளைகளும் வளர்ந்த பொழுது, அவர்களின் நாகரீகப் போக்குகள் விசித்திரமாக இருந்த பொழுது மீண்டும் யோசிகக் ஆரம்பித்தார். பணத்திற்காக அலையும் நகர வாழ்ககை அவரை யோசிக்க வைத்தது. அறுகு வெளி கிராம மக்களை, வயல்வெளிகளை, குளத்தங்கரையை,

கோமதியை நினைத்தார். தன்னை எண்ணி வெட்கப்பட்டார். கூடவே வந்த ஜெயமாலினியின் திடீர் மரணம் அவரை மேலும் வெறுமையாக்கியது. இலண்டனில் புகழ்பூத்த முருகேசர் என்ற அந்த வைத்தியருக்கு முதன்முறையாக மனிதநேயம் இதயத்தில் பிரவகித்து உடலின் ஒவ்வொரு அணுக்களிலும் சென்றடைந்தது.


விடியற்காலை நடைப்பயிற்சிக்காக வந்த முருகேசரின் நண்பருக்கு பூட்டியிருந்த வீடு ஆயிரம் கேள்விகளை எழுப்ப, மெல்ல வாயிற்படிக்கு வந்தார். கதவோரத்தில் இருந்த கடிதம் அவர் பெயரிடப்பட்டிருந்தது. அதில் எனபாவத்தினை கழுவ நான்“அறுகு வெளி” என்ற “காசிக்கு செல்கிறேன் என்று எழுதப்பட்டிருந்தது. பாவம் நண்பருக்கு அது புரியவில்லை.

கேவிக் கேவி அழுத முருகேசரை விரைந்து சென்ற வண்டியின் இரைச்சல் நிஜ உலகிற்கு கொண்டு வந்தது. மெலல் எழுந்து பிள்ளையார் கோயிலை நோக்கி நடக்க ஆரம்பித்தார். யுத்தம் முடிந்திருந்ததினால் வயல்வெளிகள் விதைப்புக்குள்ளாகி இருந்தன. தனது இருபத்தைந்து வயதில் கடைசியாக அறுகு வெளி வந்த முருகேசர், தற்போது நாற்பத்தைந்து ஆண்டுகளின் பின் தனது எழுபதாவது வயதில் வந்திருக்கின்றார்.

குளத்தங்கரையைக் கடக்கும் போது தானும் கோமதியும் தனித்திருந்த இடத்தினடியில் நின்று நடுங்கும் கைகளினால் மண்ணை தடவி என்னை மன்னித்துக்கொள் கோமதி என வேண்டிக்கொள்கிறார். சேதமடையாது இருந்த பிள்ளையார் கோயில் முகப்பில் அமர்ந்திருந்த முருகேசர் சற்று நேரம் கண் அயர்ந்து விழித்த போது, கிராமமே திரண்டிருந்தது. ஒருவருக்கும் முருகேசரைத் தெரியவில்லை. பல கேள்விகள் பல பதில்கள் முருகேசர் அடையாளம் காணப்படவில்லை.

நான் செய்த பாவத்தினால் என் அடையாத்தை என் இருப்பையே தொலைத்துவிட்டேனே என முருகேசர் கலங்கியபோது கூட்டத்திலிருந்து ஓர் உருவம் கிழிந்த அழுக்கு சேலையுடன், கணக் ளைக் கூசிப் பார்த்தவண்ணம் அவரை நோக்கி முன்னேறியது. “நீங்கள் இப்படி அழலாமா? நான் இருக்கும்வரை நீங்கள் கலங்கக்கூடாது” என்ற அந்த முதிய உருவத்தைக் கண்ணாடியை சரிசெய்து முருகேசர் உற்றுநோக்கினார். இடி இடித்து மின்னல் வெட்டுகின்றது. “ஓ! இவள் என் கோமதியல்லவா” என முருகேசர் இதயம் ஓலமிடுகின்றது. “வாஙகோ வீட்டிற்கு போவம்” என கைப்பிடித்து கோமதி அழைத்துசெல்ல, திராணியற்று பின் தொடர்கிறார் முருகேசர். முருகேசர் பிறந்து வளர்ந்த குடிசை சிதிலமடைந்து, கோழிக்கூடாக மாறியிருந்தது. சற்றுத் தொலைவில் அவரை அமரச் செய்த கோமதி குழுமிய கிராம மக்களுக்கு நிலைமையை விளக்குகிறாள். உடனே அழகிய குடிசை ஒன்று முருகேசருக்காக உருவாகத் தொடங்கியது. வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த முருகேசர், மெல்ல எழுந்து அருகில் கிடந்த பலகையை எடுத்து அதில் “முத்தையா ஸ்ரீ விசாலாட்சி” மருத்துவமனை என எழுதி, அதை முன்னிருந்த தென்னைய மரத்தில் ஆணி அடித்து மாட்ட அதை இரு கண்களிலும் நீர்முடட் பார்த்த கோமதி, பிள்ளையார் கோயில் திசையை நோக்கி தலைக்கு மேல் கரம் கூப்புகிறாள்.

முருகேசரோ அந்தத் தெனன் ன மரத்தில் “அ.மு” என தனது தகப்பன் அவரது பெயரின் முதல் எழுத்துகளை பதித்து, அதன் கீழ் அணில் எறாது இருக்கதாரினால் வரைந்த பாம்பின் படத்தையும், தன் விரல்களினால் பாசத்துடன் கண்ணில் நீர் சொரிய தடவிக் கொள்கிறார்.



**இரவுச்சூரியன் (கான்பெரா)** : இச் சிறுகதை இவரின் முதல் படைப்பு. பல வருடங்களாக இவரின் இதயத்தில் கருக்கட்டிக் கனத்துக் கொண்டிருந்த கரு, ஓர் விமானப் பயணத்திபோது சிறுகதையாக முழுமைபெற்றது. தனது இளமைப் பிராயத்திலேயே தமிழ்மொழிப் பேச்சுப் போட்டிகள், விவாத அரங்குகள், நாடகமேடைகள் போன்றவற்றில் திறமையை வெளிப்படுத்திய இரவுச்சூரியனின் கலைப் பயணம் 1980களின் நடுப்பகுதிளில் உத்வேகம் கொண்டது.

இவரின் படைப்புகளான கவிதைகள், கட்டுரைகள், மேடை நாடகங்கள், சிறுகதைகள், மேடை நாடகங்கள், சிறுகதைகள் என்பன இலங்கை வாரப் பத்திரிகைளிலும், பல்வேறு நாடுகளின் தமிழ் கழக சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்படடும் மேடையேற்றப்பட்டும் இருக்கின்றன. 1990இன் நடுப்பகுதியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் பல்வேறு விவாத மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியிருக்கின்றார். இத்துடன் இலங்கையின் தொழிற்சார் உயர்கல்வி நிறுவனமொனறின் உத்தியோகபூர்வ விவாதக் குழுவில் தொடர்சியாக இரு வருடங்கள் அங்கம் வகித்துமிருக்கின்றார்.



# விடை காணமுடியாத வினா

யோகேஸ்வரி கணேசலிங்கம்

வீட்டு வேலையில் மும்மரமாக ஈடுபட்டிருந்த கௌரி ரெலிபோன் மணி ஓசை கேட்டு ரிஸீவரைத் தூக்கினாள்.

'அக்கா நான் நித்தியா கதைக்கிறன். தெரியுதா அக்கா? உங்கடை பக்கத்து வீட்டிலை இருந்த செல்லம்மா அக்காவுடை மகள். அக்கா! நான் இப்ப அவுஸ்திரேலியாவிலை இருக்கிறன்.'

'ஓம், ஓம் எனக்கு அது தெரியும். இப்ப என்ன திடீரெண்டு என்ரை ஞாபகம்? என்ன விஷயம் சொல்லு நித்தியா' ஆர்வத்துடன் கௌரி கேட்டாள்.

'அக்கா, அம்மாவுக்கு அவுஸ்திரேலியா விசா கிடைச்சிட்டுது. இங்கை வர இருக்கிறா. நேற்றுக் கோயிலிலை உங்கடை மகள் ரஞ்சியைக் கண்டனான். நீங்களும் இங்கை வர இருக்கிறியள் எண்டு சொன்னவ. அது தான் அம்மாவையும் கூட்டிக் கொண்டு வாங்கோ எண்டு சொல்ல எடுத்தனான். உங்களுக்கு தெரியும் தானே? அம்மாவுக்கு இது தான் முதல் தரம் பிளேன் பிரயாணம். அவவும் பயப்பிடுகிறா உங்களோடை வந்தால் எனக்கும் நிம்மதி. அம்மாவுக்கும் உங்கடை உதவி கிடைச்சிரும் அவவுக்கு உங்கடை துணை விருப்பமாக இருக்கும்.'

மனப்பாடம் செய்து ஒப்பித்தது போல நித்தியா சொன்னதைக் கேட்கக் கௌரிக்கு வியப்பாக இருந்தது.

செல்லம்மா அக்கா அவுஸ்திரேலியா போகப் போகிறா. மழைக்குக் கூட அவ பள்ளிக்கூட நிழலிலை ஒதுங்கவில்லை. இளம் வயதில் கணவனை இழந்து, நித்தியாவை வளர்க்க அவ பட்டபாடு! நாள் முழுவதும் பலகாரம் செய்து வாழ்ந்தவ. ஏதோ பிற்காலத்திலை எண்டாலும் மகளோடை வசதியாக இருக்கட்டும்.

கௌரி யோசனையில் இருக்கவும் 'என்னக்கா கோல் 'கட்' ஆகிவிட்டதா? நான் சொல்லுறது கேட்குதா?' நித்தியா வின் குரல் கௌரியை இவ்வுலகிற்கு கொண்டு வந்தது.

'சரி நித்தியா. நீ யோசியாதை. செல்லம்மா அக்காவை அவுஸ்திரேலியாவுக்குக் கொண்டு வந்து சேர்க்கிறது என்ரை பொறுப்பு. இண்டைக்கே அம்மாவை என்னோடு தொடர்பு கொள்ளச் சொல்லு. நான் வாற அண்டைக்கே ரிக்கட் போட்டு அவவைக் கூட்டிக் கொண்டு வாறன்.' கௌரி உறுதியுடன் சொன்னதும் நித்தியா திருப்தியுடன் ரிஸீவரை வைத்தாள்.

நித்தியா என்றதும் கௌரிக்கு நினைவுக்கு வந்தது அவளுடைய செம்பட்டை மயிர்தான். யாழ்ப்பாணத்தில் கௌரி வீட்டின் அயலிலே வாழ்ந்த நித்தியாவைக் கௌரி எப்படி மறப்பாள்?

பத்து வருடங்களுக்கு முன் கொழும்புக்கு வருவதற்கு முன் பல வருடங்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவள் கௌரி. அப்போது அயல் வீட்டில் வாழ்ந்த நித்தியாவோடும், தாயார் செல்லம்மாவோடும் கௌரி நெருக்கமாகப் பழகியவள். இரு குடும்பங்களுக்கும் இடையே பணம் ஏற்றத் தாழ்வைக் கொடுத்தாலும் கௌரிக்கு ஒன்றென்றால் உதவிக்கு ஓடி வருவது செல்லம்மா அக்காதான். பணவசதி இல்லை என்றாலும் பண்பாடு நிறைந்த செல்லம்மா அக்காவுக்குப் பல வழிகளிலும் வழிகாட்டி கௌரி தான். தனது கஷ்டங்களைச் சொல்லி ஆறுவது, பண நெருக்கடி நேரங்களில் கைமாற்றாகப் பணம் வாங்குவது என்று கௌரியைப் பல வழிகளிலும் நம்பி வாழ்ந்தவள் செல்லம்மா.

அழகான முகம், நல்ல நிறம், துரு துரு என்ற கண்கள் எல்லாம் நிறைந்த சுறுசுறுப்பான பெண்தான் நித்தியா எல்லாவற்றையும் கொடுத்த கடவுள் அவளுக்குச் செம்பட்டை முடியைக் கொடுத்து விட்டார். ஆளைப் பார்த்தவுடனே மற்றைய அழகுகள் தெரியாவிட்டாலும் நித்தியாவுடைய செம்பட்டை முடி தெரிந்து விடும். செல்லம்மாவுக்கு மகளுடைய செம்பட்டை முடி பெரிய கவலையைக் கொடுத்தது.

பாடசாலைக்கு மகளைக் கூட்டிக்கொண்டு போய்ச் சேர்த்த அன்று மாலை, கௌரியின் வீட்டிற்கு வந்த செல்லம்மா கூறிய வார்த்தைகள் இன்றும் கௌரியின் காதில் ரீங்காரமிட்டன.

'தங்கச்சி! அந்தப் பெரிய பள்ளிக்கூடத்திலை ஒரு பிள்ளைக்குக் கூடச் செம்பட்டை மயிர் இல்லை. எல்லாப் பிள்ளைகளுக்கும் கரு, கரு என்ற முடிதான். எண்ணெய் வைச்சுப் பின்னி ரெட்டைப் பின்னல் போட்டிருக்கிற பிள்ளையளோடை என்ரை



மகளைப் பாக்கப் பாவமாக இருக்குது. கடவுள் ஏன்தான் இப்பிடி ஒரு குறையைக் குடுத்தாரோ?' கண்ணீர் மல்க நாத்தழு தழுக்க செல்லம்மா கூறிய போது கௌரிக்குப் பரிதாபமாகத் தான் இருந்தது.

'அக்கா இதுக்குப் போய்க் கண்கலங்கிறியளே? நித்தியா என்ன ஊமையா? குருடா? இது ஒரு குறையில்லை. நீங்கள் கவலைப்பட்டால் அவளும் கலங்கிப் போவாள். மனதை அலட் டாமல் இருங்கோ.' அறிவுரை கூறினாள் கௌரி.

கௌரி கூறிய வார்த்தைகள் அந்த நேரம் ஆறுதலளித்தா லும், அப்பப்ப செல்லம்மா மனதில் கவலை தோன்றிவிடும். ஒரு நாள் பாடசாலையால் மாலையில் வீட்டிற்கு வந்த நித்தியா கண்கள் சிவந்தபடியே விம்மி, விம்மி அழுதாள். பல மணி நேரம் அவள் அழுதிருக்கிறாள் என்பதை அவள் முகமே பறை சாற்றியது. என்ன பிள்ளை? என்ன நடந்தது? பதற்றத்து டன் தாயார் கேட்டாள்.

'அம்மா என்னை 'செம்பட்டை நித்தியா' எண்டு பட்டம் வைக்கிறாங்கள் இப்படிச் சொல்ல வேணாம் எண்டு சொன்னதற்கு உண்மையைத்தானே சொல்லுறம் உனக்குக் கறுப்பு மயிர் எண்டால் ஏன் பட்டம் வைக்கப் போறம் எண்டு ஒரு பெடியன் சொல்ல, கூட நிண்ட எல்லாரும் சிரிச்சினம். நான் இனி பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டன் எனக்குப் படிப்பு வேணாம்.' சொல்லியபடியே சாப்பிடாமல் படுத்துவிட்டாள் நித்தியா.

அடுத்த நாள் பாடசாலைக்குப் போகமறுத்த நித்தியாவைப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டபாடு! ஒரு படியாகக் கௌரி தலையிட்டு அரை மனசுடன் நித்தியா பள்ளிக்கூடம் போனாள்.

'பிள்ளை! பருத்தித்துறையில ஒரு பரியாரியார் எண்ணெய் காச்சிறவராம். நித்தியாவைக் கூட்டிக் கொண்டு போகப்போறன். ஏதும் நல்ல எண்ணெய் வைச்சால் செம்பட்டை நிறம் குறைஞ் சிடும்.' செல்லம்மா பருத்தித்துறைக்குப் போய் எண்ணெய் வாங்கி வைச்சும் நித்தியாடை முடி நிறம் மாறவில்லை. புருஷன் இல்லாத மனுசி. நெருப்புத் திண்டு உழைக்கிற காசை எத்தனை விதமாய்ச் சிலவழிக்குது. இந்த முடி நிறம் மாறாது. விளங்காத மனுசி தன்ரை ஆசையிலை காசைச் செலவழிக்குது.' தனக்குள் செல்லம்மாவுக்காகக் கவலைப்படு வாள் கௌரி.

வயது ஏற, ஏற நித்தியாவிடை கலியாணப் பேச்சுத் தொடங்கியது. செல்லம்மா அக்கா பயந்தது போல வந்த வரன் எல்லாம் செம்பட்டை முடியைச் சாட்டுச் சொல்லி நழுவப்பார்த்தார்கள்.

எல்லாக் குணமும் இருந்த நித்தியாவுக்கு, செம்பட்டை முடி குறுக்கே நின்றது. அது ஒரு பெரிய குறையில்லை எண்டு கௌரிதான் பல தடவை நினைத்திருக்கிறாள் ஆனால் வந்த தரகர்மார் சீதனத்தைக் கூடக் குடுத்தால் அந்தக் குறையை மறைச்சிடலாம் என்று ஆசை காட்டினார்கள்.

தகப்பனில்லாத பிள்ளை. கூடக் குறையக் குடுக்க செல்லம்மா எங்கே போவாள்? செல்லம்மா முறையிட்டது எல்லாம் தான் வணங்கும் தெய்வங்களிடம்தான். அவள் வேண்டாத தெய்வமில்லை. வைக்காத நேர்திக்கடனில்லை. பட்டினிகிடந்து விரதமிருந்த செல்லம்மா தன் குமர் கரை சேர்ந்துவிட வேண்டும் என்று தெய்வங்களை மன்றாடினாள். செம்பட்டை முடியைச் சாட்டி வந்த வரன் எல்லாம் தட்டுப் பட்ட போது துடி துடித்தாள் செல்லம்மா. என் வயிற்றில் பிறந்த குழந்தைக்கு ஏன் இப்பிடி ஒரு குறையை வைத்தான் இறைவன்?


இறைவன் மீதே அவளுக்குக் கோபம் வந்தது. தரகரிடம் ஒவ்வொரு முறையும் குறிப்பைக் கொடுக்கும் போதெல்லாம் இந்தத் தடவை திருமணம் பொருந்தாதா என்ற நப்பாசை அவள் மனதில் தோன்றும்.


ஒரு படியாக கௌரியும் தலைப் போட்டு ஒரு சம்மந்தம் சரி வந்து விட்டது. நித்தியா கழுத்தில் தாலி ஏறும் வரை செல்லம்மாவுக்கு நிம்மதியேயில்லை. செம்பட்டை முடிப் பொம்பிளையை எங்கே பிடித்தீர்கள்? என்று யாராவது குழப்பிவிடப் போகிறார்களோ என்று அவளுக்கு உள்ளூரப் பயம் இருந்தது.

ஏதோ ஒரு பிரச்சனையுமின்றி நித்தியா திருமணம் நடந்ததும், முதல் குழந்தை தாரினி பிறந்ததும் செல்லம்மா வுக்கு மட்டுமின்றி கௌரிக்கும் சந்தோஷம்தான்.

குழந்தை பிறந்ததைக் கேள்விப்பட்ட கௌரி பெரியாஸ்பத்தி ரிக்குக் குழந்தையைப் பார்க்கப் போனாள். கௌரிக்குக் கவனம்







எல்லாம் குழந்தையின் தலைமுடிமேல் தான் சென்றது.

'பிள்ளை! பார்த்தீரே? குழந்தைக்கு நல்ல கரு, கரு என்று சுருள் முடி வந்திருக்கிறது. பிள்ளையைப் பாக்கு மட்டும், எங்கை தாயிடை செம்பட்டை மயிர் வந்திடுமோ எண்டு நான் பயந்து கொண்டு இருந்தனான்.' முகத்திலை பூரண திருப்தியுடன் செல்லம்மா அக்கா குழந்தையைக் கௌரியின் கையில் கொடுத்தாள்.

களைப்புடன் கட்டிலில் படுத்திருந்த நித்தியா முகத்தில் பூரிப்பு! 'அக்கா! என்ரை மகளைப் பாத்திங்களே? நல்லகாலம் என்ரை செம்பட்டை அவவுக்கு வரவில்லை. எனக்கும் அம்மாவைப்போல மனதிலை பயம் இருந்தது. ஏதோ தப்பிவிட்டாள்.' சந்தோஷத்துடன் நித்தியா சொன்னாள். இதெல்லாம் நடந்து பல வருடங்களானாலும், கௌரிக்கு நினைவலைகள் மனதில் படமாக ஓடிக் கொண்டிருந்தது. கையில் ரிஸீவரை வைத்துக் கொண்டே கதிரையில் இருந்துவிட்டாள்.

'என்னப்பா? ஆரோடை கதைத்துவிட்டு கனவுலகிலை இருக்கிறீர்?' வெளியே சென்று விட்டு வந்த கணவன் கேட்டபோதுதான் கௌரி இவ்வுலகுக்கு வந்தாள்.

'உங்களுக்குத் தெரியும் தானே எங்கடை பக்கத்துவீட்டிலை இருந்த செல்லம்மா அக்காடை மகள் நித்தியாவை. அந்தப் பிள்ளை இப்ப அவுஸ்திரேலியாவிலை இருக்குது. அவ கதைச்ச நேரம் தொடக்கம் யோசனையில் இருந்திட்டன்.'

'அது தான் அந்தப் பெடிச்சி நித்தியா. அதுக்குத் தானே செம்பட்டை மயிர்? உமக்கு ஓடி, ஓடி வேலை செய்யுமே? அதுகளை எப்படி மறக்க முடியும்?' காலில் இருந்த சப்பாத்தைக் கழட்டிக் கொண்டே கௌரியின் கணவன் சொன்னார்.

'அந்தப் பிள்ளை நித்தியா தான் கதைச்சவ. தாய் மனுசிக்கு அவுஸ்திரேலியா விசா கிடைச்சிருக்காம். அவவுக்குத் தான் ஒண்டும் தெரியாதே? அதுதான் அவவை நான் அவுஸ்திரேலியாவுக்கு வரேக்கை கூட்டிக் கொண்டு வரட்டாம்.'

'மனுசி பாவம் தான். அவவுக்கு என்ன தெரியும்? கையெழுத்துக் கூடப் போடத் தெரியுமோ? உம்மோடை போனால் நல்ல துணையாய் இருக்கும்.' தன் பங்குக்குக்

அவுஸ்திரேலியாப் பயணத்திற்குக் கௌரி எடுத்த ஆயத்தங்களிலும், செல்லம்மா அக்கா கொண்டு வந்து இறக்கிய சாமான்கள் ஏராளம்.

முறுக்கு, பயத்தம் பணியாரம், தட்டைவடை, சிற்றுண்டி என வகை, வகையாக நாவூறும் பலகாரங்கள்!

ஒவ்வொன்றிலும் ரெண்டு, ரெண்டு பக்கற். மிக அழகாகப் பக்பண்ணிக் கொண்டு வந்திருந்தா.

'பிள்ளை கௌரி, என்ரை மகளுக்குக் கொண்டு வரேக்கை, உன்ரை பிள்ளைக்குக் கொண்டு வராமல் விடுவனா? அது தான் ரெண்டு பக்கற்' என விபரமாக எடுத்துரைத்தா.

'அக்கா! நித்தியா உங்களுக்கு ஒண்டும் சொல்ல இல்லையா? அந்த ஊருக்கு நாங்கள் இப்பிடிச் சுட்டு, பொரிச்சு ஒரு பொருளும் எடுத்துக் கொண்டு போகப்படாது. சில வேளை கஸ்ரம்சிலை தூக்கி எறிஞ்சும் போடுவாங்கள். இதுகளை ஏன் மினக்கெட்டுச் செய்தனீங்கள்?'

கௌரி விளங்கவைத்த போது செல்லம்மா அக்கா திடுக்கிட்டுப் போனா. எத்தனை நாளாகத் திட்டம் போட்டு மாவிடிச்சு, பதம் எடுத்துச் சுட்ட பலகாரங்கள்! இதுகளை அங்கை தூக்கி எறிவாங்கள் எண்டால் ஏன் கொண்டு போவான்?

இடிஞ்சு போயிருந்த செல்லம்மா அக்காவைப் பார்த்த முருகேசர் 'காவிக் கொண்டு போய்க் குப்பைத் தொட்டிக்குப் போடுறதுக்கு இங்கை விட்டிட்டுப் போங்கோ. அங்கை நேரமிருக்கேக்கை புதுசு புதுசாகச் சுட்டுக் குடுக்கலாம்' என்று கூறினார்.

அவர் சொன்னதும் சரியாய்ப்பட்டது. செல்லம்மா அக்கா ஆசை, ஆசையாகச் சுட்ட பட்சணங்கள் கௌரி வீட்டாருக்கு விருந்தாயமைந்தன.

ஒருமாதிரி அவுஸ்திரேலியா பயணமாகும் நாளும் வந்தது. அதற்கிடையிலை நித்தியா பத்துத்தடவை தாயோடும். கௌரியோடும் பேசியிருப்பாள்.

'ஒண்டுக்கும் யோசியாதை பிள்ளை. போம் நிரப்புற எண்டாலும், சீற் பெல்ற் போடுற எண்டாலும் சாப்பாட்டை வாங்கிக்குடுக்கிற எண்டாலும் பாத்ருமுக்குக் கூட்டிக் கொண்டு



போற எண்டாலும் நான் பார்த்துக் கொள்ளுறன்.'

தாயின் அறியாமையை நோக்கி மகள் பயப்பிடுகிறாள் என்பதை அறிந்த கௌரி, நித்தியாவுக்குத் தென்பூட்டினாள்.

பல மணி நேரப் பயணத்திற்குப் பின் அவுஸ்திரேலியா மண்ணில் காலடி எடுத்து வைத்த செல்லம்மா உண்மையிலேயே களைத்துப் போயிருந்தா. பிரயாண அலுப்பு, ஒரே இடத்திலை இருந்த கஷ்டம் எல்லாம் அவவைச் சோர்வடையச் செய்தன.

கௌரி தனது கெட்டித்தனத்தாலை சூட்கேஸ்களையும் செல்லம்மா அக்காவையும் ஒரு படியாக வெளியே கொண்டு வந்து சேர்த்துவிட்டாள்.

கௌரியின் மகளும், நித்தியாவும் ஒன்றாகக் காத்துக் கொண்டு நின்றபடியால் பிளேனிலை இருந்து வந்தவர்களுக்கு அவர்களைக் கண்டு பிடிப்பது சுலபமாக இருந்தது.

நித்தியாவின் பக்கத்தே மிக நாகரீகமாக ஒரு இளம் பெண் நின்றிருந்தாள். நிச்சயமாக அவள் நித்தியாவின் பெண்ணாக இருக்க வேண்டும். நித்தியாவின் சாயல். ஆனால் நாட்டுக்கு ஏற்ற வகையில் நாகரிகமாக உடையணிந்திருந் தாள்.

தலை முடியை விரித்து தலையில் ஓர் கிளிப்பைப் போட்டிருந்த அப் பெண்ணின் முடி தாயின் அதே செம்பட்டை முடி!

'என்ன? நித்தியாவின் பெண்ணுக்கு ஊரிலை இருக்கும் போது கரு, கரு என்று முடி இருந்துதே?'

குழந்தை பிறந்த போது ஆஸ்பத்திரிக்குப் பாக்கப் போன போது கூட முடி கறுப்பாக இருக்கு தெண்டு தாயும், பேத்தியும் பெருமைப் பட்டினமே? மனதில் பலதையும் நினைத்த கௌரி ஒன்றும் கேட்கப்படாது என மௌனமாக நின்றாள். ஆசையோடு தாயைக் கட்டியணைத்த நித்தியா என்னம்மா நல்லாய்க் களைச்சுப் போனீங்கள் போலை என்று சொல்லிக் கொண்டே தாயின் கையிலிருந்த சிறு பையை வாங்கினாள்.

உடலில் களைப்பு இருந்த போதும், பிற்காலத்தில் தனது மகள் நித்தியாவோடு இருக்கலாம் என்ற மகிழ்வுடன் வந்து இறங்கிய செல்லம்மா முகத்தில் திடீரென ஒரு சோகம் ஏற்பட்டது. அவவுக்கு ஏதோ ஒரு கவலை ஏற்பட்டு விட்டதென்பதைப் பார்த்த உடனேயே உணரக் கூடிய விதத்தில் அவ பேச்சற்று நின்றிருந்தா.

வஞ்சனையற்ற கிராமியப் பெண், மனதிலை இருக்கும் உணர்வுகளை ஒழித்து நடக்கத் தெரியாதவ. தனக்கு விளங்காததைப் பட்டெனக் கேட்கும் சுபாவமுள்ளவ. அதனால் அவ நின்ற விதமும், பேத்தியைப் பரிதாபமாகப் பார்த்த விதமும், அவவுக்குள் ஏதோ ஒரு கவலை இருப்பதை அங்கு நின்றோருக்கு உணர்த்தியது.

'என்ன அம்மா? ஏன் ஒரு மாதிரி இருக்கிறியள்? உங்களுக்கு ஏதும் செய்யுதோ? கோப்பி வாங்கித் தரட்டா?' பதற்றத்துடன் நித்தியா கேட்டாள்.

'ஏன் அக்கா? நல்லாய்த்தானே வந்து இறங்கினனீங்கள். இப்ப மகளைக் கண்டவுடனை பேச்சு மூச்சு இல்லாமல் இருக்கிறியள். ஏதும் செய்யுதா?' கௌரியும் பதைத்துப் போய்க் கேட்டாள். செல்லம்மா அக்காவுக்குப் பேச முடிய வில்லை. கண்கள் கலங்கியிருந்தன. நாத்தழுதழுத்தது. மகளின் கையைப் பிடித்தபடியே அயலே இருந்த ஒரு கதிரையில் உட்கார்ந்துவிட்டா.

'நித்தியா! உன்ரை மகளுக்கு எப்ப தலைமயிர் செம்பட்டை மயிராக மாறினது? நான் கவலைப்படப் போறன் எண்டு எனக்கு மறைச்சுப் போட்டியா? பிள்ளை பிறக்கேக்கை என்ன, யாழ்ப்பாணத்திலை இருக்கேக்கை என்ன, நல்ல கரு, கரு என்று தலைமுடி இருந்துதே? கருமையாக இருந்த மயிர் செம்பட்டையாக மாறும் என்று நான் கேள்விப்படவே இல்லை' ஏமாற்றத்துடன் மகளைப் பார்த்துக் கேட்டா.

'அம்மா! அது தானா நீங்கள் இடிஞ்சு போயிருக்கிறியள். அது ஒரு பெரிய கதை. வீட்டுக்கு போன உடனை ஆறுதலாகச் சொல்லுறன்' நித்தியா சர்வசாதாரணமாகச் சொன்னாள்.

'ஏன் நித்தியா? அம்மாவின் அவலம் தெரியுது தானே? அதை ஏன் வீட்டுக்கு போய்ச் சொல்ல வேணும். நானும் கேட்க ஆசைப்படுகிறன் இப்பவே சொல்லன்' கௌரியும் தனது எண்ணத்தை வெளிப்படுத்தினாள்.

'அக்கா! அம்மா தான் படியாதவ. உங்களுக்கும் தெரிய இல்லையா? என்ரை மகள் தலைமுடிக்கு ஒரு சாதிச் சிவப்பு 'டை' அடிச்சிருக்கிறா. இங்கை தலைமயிருக்கு 'டை' அடிக்கிறது நாகரிகம். என்ரை சொல்லைக் கேளாமல் அக்காவும், தங்கையுமாகப் போன கிழமை இந்த 'டை'யை அடிச்சுக் கொண்டு வந்தவை. இங்கை வளர்கிற பிள்ளையளை நாங்கள் தட்டிக் கேட்க முடியுதா?'

'அப்ப இது செம்பட்டை இல்லை. சிவப்பு 'டை' அப்படித் தானே?' அழுத்தமாகக் கேட்டாள் கெளரி.

'ஓமக்கா. எனக்கு இயற்கையாகச் செம்பட்டை முடி. என்ரை பிள்ளைக்குச் செயற்கையாகச் செம்பட்டை முடி. அதுதான் வித்தியாசம்.' பெரிய ஒரு விளக்கத்தைக் கொடுத்தவளாக நித்தியா கல, கல என நகைத்தாள்.

கறுப்பு 'டை' அடிச்சு நரை முடியை மறைப்பதைக் பற்றியே கேள்விப்படாத அந்த அப்பாவிக் கிராமவாசிக்கு 'டை' என்று ஒன்று இருக்கென்பதே அப்போதுதான் தெரிந்தது. தனது மகள் நித்தியாவோடு தான் பட்டபாடும், பட்ட அவமானங்களும் பேத்திமாருக்கு எங்கே தெரியப் போகுது? கரு, கரு என்று அழகாக இருந்த முடியை ஏன் சிவப்பாக்கி அலங்கோலப் படுத்தியிருக்கிறார்கள்?

செல்லம்மா அக்கா மனதில் இந்தக் கேள்வி எழுந்து கொண்டே இருந்தது.

செயலற்று நின்ற தாயின் கையை அன்புடன் பிடித்தபடியே நித்தியா காரை நோக்கிச் சென்றாள்.

வீட்டிற்குச் சென்ற செல்லம்மா அக்காவுக்குப் பேத்திமாரைப் பார்க்கும் போதெல்லாம் அவர்கள் ஏன் கறுப்பைச் சிவப்பாக்கினார்கள் என்ற வினா மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது. இன்று வரை அவ்வினாவிற்கு அவளால் விடை காண முடியவில்லை.


*திருமதி. யோகேஸ்வரி கணேசலிங்கம் (கான்பெரா) இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் விரிவுரையாளராக கடமை புரிந்தவர். இந்தச் சிறுகதை 'யாவரும் கேளிர்' என்ற சிறுகதைத் தொகுதியிலுருந்து எடுக்கப்பட்டது. இத் தொகுப்பைப் பற்றி பேரா. க. சிவத்தம்பி எழுதியது... ...*

திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கத்தினுடைய இந்தச் சிறுகதைத் தொகுதி கலைத்துவம் நிறைந்த ஓர் ஆக்க இலக்கிய எழுத்தாளரை எமக்கு அறிமுகம் செய்கிறது....

ஏறத்தாழ கடந்த ஒரு கால் நூற்றாண்டு கால போர்க்காலச் சூழல் நம்மைப் பாதித்துள்ள முறைமைகளையும் அவற்றிலும் மேலாக நாம் முற்றிலும் உணராத வகையில் நம்மிடத்தே ஏற்பட்டுள்ள நோக்கு மாற்றங்களையும் திருமதி யோகேஸ்வரி சிறுகதை என்னும் சம்பவப்படப்பதிவுகளான ஆற்றல் நிறைந்த ஓவியங்கள் மூலம் நம்முன்னே கொண்டு வருகிறார்....

இவர் பார்வையினுள் கோதாவரியின் ஆழத்தையும். காவிரியின் மௌனவேகத்தையும் காணக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய பதிவுகள்தான் நாமில்லாக் காலத்திலும் நமது உயிர் மூச்சுக்களின் சுருதியை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கும்.

- பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி



# The Dance of Siva

Ananda K. Coomaraswamy

***The Lord of Tillai's Court a mystic dance performs; what's that, my dear?"—Tiruvaçagam, XII,***

Amongst the greatest of the names of Shiva is Nataraja, Lord of Dancers, or King of Actors. The Cosmos is His theatre, there are many different steps in His repertory, He Himself is actor and audience—

***When the Actor beateth the drum,***
***Everybody cometh to see the show;***
***When the Actor collecteth the stage properties***
***He abideth alone in His happiness.***

How many various dances of Shiva are known to His worshippers I cannot say. No doubt the root idea behind all of these dances is more or less one and the same, the manifestation of primal rhythmic energy. Shiva is the Eros Protogonos of Lucian, when he wrote:

"It would seem that dancing came into being at the beginning of all things, and was brought to light together with Eros, that ancient one, for we see this primeval dancing clearly set forth in the choral dance of the constellations, and in the planets and fixed stars, their interweaving and interchange and orderly harmony."

I do not mean to say that the most profound interpretation of Shiva's dance was present in the minds of those who first danced in frantic, and perhaps intoxicated energy, in honor of the pre-Aryan hill-god, afterwards merged in Shiva. A great motif in religion or art, any great symbol becomes all things to all men; age after age it yields to men such treasure as they find in their own hearts. Whatever the origins of Shiva's dance, it became in time the clearest image of the *activity* of God which any art or religion can boast of. Of the various dances of Shiva I shall only speak of three, one of them alone forming the main subject of interpretation. The first is an evening dance in the Himalayas, with a divine chorus, described as follows in the *Shiva Pradosha Stotra*:

"Placing the Mother of the Three Worlds upon a golden throne, studded with precious gems,

Shulapani dances on the heights of Kailasa, and all the gods gather round Him:

"Sarasvati plays on the *vina*, Indra on the flute, Brahma holds the time-marking cymbals Lakshmi begins a song, Vishnu plays on a drum, and all the gods stand round about:

"Gandharvas, Yakshas, Patagas, Uragas, Suddhas, Sadhyas, Vidyadharas, Amaras, Apsarases and all the beings dwelling in the three worlds assemble there to witness the celestial dance and hear the music of the divine choir at the hour of twilight."

This evening dance is also referred to in the invocation preceding the *Katha Sarit Sagara*.

In the pictures of this dance, Shiva is two-handed, and the cooperation of the gods is clearly indicated in their position of chorus. There is no prostrate Asura trampled under Shiva's feet. So far as I know, no special interpretations of this dance occur in Shaiva literature.

The second well known dance of Shiva is called the *Tandava*, and belongs to His *tamasic* aspect as Bhairava or Vira-bhadra. It is performed in cemeteries and burning grounds, where Shiva, usually in ten-armed form, dances wildly with Devi, accompanied by troops of capering imps. Representations of this dance are common amongst ancient sculptures, as at Elura, Elephanta, and also Bhuvaneshvara. The *tandava* dance is in origin that of a pre-Aryan divinity, half-god, half-demon, who holds his midnight revels in the burning ground. In later times, this dance in the cremation ground, sometimes of Shiva, sometimes of Devi, is interpreted in Shaiva and Shakta literature in a most touching and profound sense.

Thirdly, we have the Nadanta dance of Nataraja before the assembly (*sabha*) in the golden hail of Chidambaram or Tillai, the centre of the Universe, first revealed to gods and rishis after the submission of the latter in the forest of Taragam, as related to the *Koyil Puranam*. The legend, which has after all, novery close connection with the real meaning of the dance, may be summarised as follows:

In the forest of Taragam dwelt multitudes of heretical rishis, following of the Mimamsa. Thither proceeded Shiva to confute them, accompanied by Vishnu disguised as a beautiful woman, and Ati-Sheshan. The rishis were at first led to violent dispute amongst themselves, but their anger was soon directed against Shiva, and they endeavored to destroy Him by

means of incantations. A fierce tiger was created in sacrificial fires, and rushed upon Him; but smiling gently, He seized it and, with the nail of His little finger, stripped off its skin, and wrapped it about Himself like a silken cloth. Undiscouraged by failure, the sages renewed their offerings, and produced a monstrous serpent,

which however, Shiva seized and wreathed about His neck like a garland. Then He began to dance; but there rushed upon Him a last monster in the shape of a malignant dwarf, Muyalaka

Upon him the God pressed the tip of His foot, and broke the creature's back, so that it writhed upon the ground; and so, His last foe prostrate Shiva resumed the dance, witnessed by gods and rishis.

Then Ati-Sheshan worshipped Shiva, and prayed above all things for the boon, once more to behold this mystic dance; Shiva promised that he should behold the dance again in sacred Tillai, the centre of the Universe.

This dance of Shiva in Chidambaram or Tillai forms the motif of the South Indian copper images of Shri Nataraja, the Lord of the Dance. These images vary amongst themselves in minor details, but all express one fundamental conception. Before proceeding to enquire what these may be, it will be necessary to describe the image of Shri Nataraja as typically represented. The images, then, represent Shiva dancing, having four hands, with braided and jewelled hair of which the lower locks are whirling in the dance. In His hair may be seen a wreathing cobra, a skull, and the mermaid figure of Ganga; upon it rests the crescent moon, and it is crowned with a wreath of Cassia leaves. In His right ear He wears a man's earring, a woman's in the left; He is adorned with necklaces and armlets, a jewelled belt, anklets, bracelets, finger and toe-rings. The chief part of His dress consists of tightly fitting breeches, and He wears also a fluttering scarf and a sacred thread. One right hand holds a drum, the other is uplifted in the sign of do not fear: one left hand holds fire, the other points down upon the demon Muyalaka, a dwarf holding a cobra; the left foot is raised. There is a lotus pedestal from which springs an encircling glory (*tiruvasi*), fringed with flame, and touched within by the hands holding drum and fire. The images are of all sizes, rarely if ever exceeding four feet in total height.

Even without reliance upon literary references, the interpretation of this dance would not be difficult. Fortunately, however, we have the assistance of a copious contemporary literature, which enables us to fully explain not only the general significance of the dance, but equally, the details of its concrete symbolism. Some of the peculiarities of the Nataraja images, of course, belong to the conception of Shiva generally, and not to the dance in particular. Such are the braided locks, as of a yogi: the Cassia garland: the skull of Brahma: the figure of Ganga, (*the Ganges fallen from heaven and lost in Shiva's hair*): the cobras: the different earrings, betokening the dual nature of Mahadev, 'whose half is Uma': and the four arms. The drum also is a general attribute of Shiva, belonging to his character of Yogi, though in the dance, it has further a special significance. What then is the meaning of Shiva's Nadanta dance, as understood by Shaivas? Its essential significance is given in texts such as the following:

"Our Lord is the Dancer, who, like the heat latent in firewood, diffuses His power in mind and matter, and makes them dance in their turn."The dance, in fact, represents His five activities (*Pancakritya*), viz.: *Shrishti* (overlooking, creation, evolution), *Sthiti* (preservation, support), *Samhara* (destruction, evolution), *Tirobhava* (veiling, embodiment, illusion, and also, giving rest), *Anugraha* (release, salvation, grace).

These, separately considered, are the activities of the deities Brahma, Vishnu, Rudra, Maheshvara and Sadashiva.

This cosmic activity is the central motif of the dance. Further quotations will illustrate and explain the more detailed symbolisms. *Unmai Vilakkam*, verse 36, tells us:

"Creation arises from the drum: protection proceeds from the hand of hope: from fire proceeds destruction: the foot held aloft gives release." It will be observed that the fourth hand points to this lifted foot, the refuge of the soul. We have also the following from *Chidambara Mummani Kovai*:

"O my Lord, Thy hand holding the sacred drum has made and ordered the heavens and earth and other worlds and innumerable souls. Thy lifted hand protects both the conscious and unconscious order of thy creation. All these worlds are transformed by Thy hand ***"His form is everywhere: all-pervading in His Shiva-***

bearing fire. Thy sacred foot, planted on the ground, gives an abode to the tired soul struggling in the toils of causality. It is Thy lifted foot that grants eternal bliss to those that approach Thee. These Five-Actions are indeed Thy Handiwork."

The following verses from the *Tirukuttu Darshana* (Vision of the Sacred Dance), forming the ninth tantra of Tirumular's *Tirumantram*, expand the central motif further:

***This is the sacred dance of Uma-Sahaya.***
***He dances with Water, Fire, Wind and Ether,***
***Thus our Lord dances ever in the court.***
Visible to those who pass over Maya and Mahamaya (illusion and super-illusion):
***Our Lord dances His eternal dance.***
***The form of the Shakti is all delight—***
***This united delight is Uma's body:***
***This form of Shakti arising in time***
***And uniting the twain is the dance"***
***His body is Akash, the dark cloud therein is Muyalaka,***
***The eight quarters are His eight arms,***
***The three lights are His three eyes,***
***Thus becoming, He dances in our body as the congregation."***

This is His dance. Its deepest significance is felt when it is realized that it takes place within the heart and the self. Everywhere is God: that Everywhere is the heart. Thus also we find another verse:

***"The dancing foot, the sound of the tinkling bells,***
***The songs that are sung and the varying steps,***
***The form assumed by our Dancing Gurupara—***
***Find out these within yourself, then shall your fetters fall away."***

To this end, all else but the thought of God must be cast out of the heart, that He alone may abide and dance therein. In *Unmai Vilakkam*, we find:

"The silent sages destroying the threefold bond are established where their selves are destroyed. There they behold the sacred and are filled with bliss. This is the dance of the Lord of the assembly, 'whose very form is Grace'."

With this reference to the 'silent sages' compare the beautiful words of Tirumular:

"When resting there they (the yogis who attain the highest place of peace) lose themselves and become idle. . . Where the idlers dwell is the pure Space. Where the idlers sport is the Light. What the idlers know is Vedanta. What the idlers find is the deep sleep therein."Shiva is a destroyer and loves the burning ground. But what does He destroy? Not merely the heavens and earth at the close of a world-cycle, but the fetters that bind each separate soul.3 Where and what is the burning ground? It is not the place where our earthly bodies are cremated, but the hearts of His lovers, laid waste and desolate. The place where the ego is destroyed signifies the state where illusion and deeds are burnt away: that is the crematorium, the burning-ground where Shri Nataraja dances, and whence He is named Sudalaiyadi, Dancer of the burning-ground. In this simile, we recognize the historical connection between Shiva's gracious dance as Nataraja, and His wild dance as the demon of the cemetery

This conception of the dance is current also amongst Shaktas, especially in Bengal, where the Mother rather than the Father-aspect of Shiva is adored. Kali is here the dancer, for whose entrance the heart must be purified by fire, made empty by renunciation. A Bengali Hymn to Kali voices this prayer:

***Because Thou lovest the Burning-ground,***
***I have made a Burning-ground of my heart—***
***That Thou, Dark One, haunter of the Burning-ground,***
***"Day and night blazes the funeral pyre:***
***Mayest dance Thy eternal dance.***
***Nought else is within my heart, O Mother:***
***The ashes of the dead, strewn all about,***
***I have preserved against Thy coming,***
***With death-conquering Mahakala neath Thy feet***
***Do Thou enter in, dancing Thy rhythmic dance,***
***That I may behold Thee with closed eyes."***

Returning to the South, we find that in other Tamil texts the purpose of Shiva's dance is explained. In *Shivajnana Siddhiyar*, Supaksha, Sutra V, 5, we find,

"For the purpose of securing both kinds of fruit to the countless souls, our Lord, with actions five,dances His dance." Both kinds of fruit, that is *Iham*, reward in this world, and *Param*, bliss in Mukti.

Again, *Unmai Vilakkam*, v. 32, 37, 9 inform us:

"The Supreme Intelligence dances in the soul . . . for the purpose of removing our sins. By these means, our Father scatters the darkness of illusion (*maya*), burns the thread of causality (*karma*), stamps down evil (*mala, anava, avidya*), showers Grace, and lovingly plunges the soul in the ocean of Bliss (*ananda*). They never see rebirths, who behold this mystic dance."

The conception of the world process as the Lord's pastime or amusement (*lila*) is also prominent in the Shaiva scriptures. Thus Tirumular writes, "The perpetual dance is His play." This spontaneity of Shiva's dance is so clearly expressed in Skryabin's *Poem of Ecstasy* that the extracts following will serve to explain it better than any more formal

*He dances, He whirls.*
*He is all rapture, all bliss, in this play* (lila)
*Free, divine, in this love struggle*
*In the marvellous grandeur of sheer aimlessness,*
*And in the union of counter-aspirations* (dvandva)
*in consciousness alone, in love alone,*
*The Spirit learns the nature* (svabhava) *of His divine being.*
*'O, my world, my life, my blossoming, my ecstasy!*
*Your every moment I create*
*By negation of all forms previously lived through:*
*I am eternal negation* (neti, neti)...
*Enjoying this dance, choking in this whirlwind,*
*Into the domain of ecstasy, He takes swift flight.*
*In this unceasing change* (samsara, nitya bhava), *in this flight, aimless* (nishkama), *divine*
*The Spirit comprehends Himself,*
*In the power of will, alone* (kevala) *free* (mukta),
*Ever-creating, all-irradiating, all vivifying,*
*Divinely playing in the multiplicity of forms* (prapancha), *He comprehends Himself....*
*'I already dwell in thee, O, my world,*
*Thy dream of me—'twas I coming into existence....*
*And thou art all—one wave of freedom and bliss....'*
*By a general conflagration* (maha-pralaya) *the universe* (samsara) *is embraced*
*The Spirit is at the height of being, and He feels the tide unending*
*Of the divine power* (shakti) *of free will. He is all-daring:*
*What menaced, now is excitement,*
*What terrified, is now delight.*
*And the universe resounds with the joyful cry I am."*

This aspect of Shiva's immanence appears to have given rise to the objection that he dances as do those who seek to please the eyes of mortals: but it is answered that in fact He dances to maintain the life of the cosmos and to give release to those who seek Him. Moreover, if we understand even the dances of human dancers rightly, we shall see that they too lead to freedom. But it is nearer the truth to answer that the reason of His dance lies in His own nature, all his gestures are own-nature-born (*svabhava-jah*), spontaneous, and purposeless—for His being is beyond the realm of purposes.

In a much more arbitrary way the dance of Shiva is identified with the *Pancakshara*, or five syllables of the prayer Shi-va-ya-na-ma, 'Hail to Shiva.' In *Unmai Vilakkam* we are told: "If this beautiful Five-Letters be meditated upon, the soul will reach the land where there is neither light nor darkness, and there Shakti will make it One with Shivam."5

Another verse of *Unmai Vilakkam* explains the fiery arch (*tiruvasi*): The Panchakshara and the Dance are identified with the mystic syllable 'Om,' the arch being the *kombu* or hook of the ideograph of the written symbol:

"The arch over Shri Nataraja is Omkara; and the akshara which is never separate from the Omkara is the contained splendor. This is the Dance of the Lord of Chidambaram."

The *Tiru-Arul-Payan* however (Ch. ix. ) explains the *tiruvasi* more naturally as representing the dance of Nature, contrasted with Shiva's dance of wisdom. The dance of nature proceeds on one side: the dance of enlightenment on the other. Fix your mind in the centre of the latter."

I am indebted to Mr. Nallasvami Pillai for a commentary on this:

The first dance is the action of matter—material and individual energy. This is the arch, *tiruvasi*, Omkara, the dance of Kali. The other is the Dance of Shiva—the akshara inseparable from the Omkara—called *ardhamatra* or the fourth letter of the Pranava—Chaturtam and Turiyam. The first dance is not possible unless Shiva wills it and dances Himself.

The general result of this interpretation of the arch is, then, that it represents matter, nature, Prakriti; the contained splendor, Shiva dancing within and touching the arch with head, hands and feet, is the universal omnipresent Spirit (*Purusha*). Between these stands the individual soul, as *ya* is between *Shi-va* and *na-ma*.

Now to summarize the whole interpretation we find that *The Essential Significance of Shiva's Dance is threefold: First, it is the image of his Rhythmic Play as the Source of all Movement within theCosmos, which is Represented by the Arch: Secondly, the Purpose of his Dance is to Release the Countless souls of men from the Snare of Illusion: Thirdly the Place of the Dance, Chidambaram, the Centre of the Universe, is within the Heart.*

" So far I have refrained from all aesthetic criticism and have endeavored only to translate the central thought of the conception of Shiva's dance from plastic to verbal expression, without reference to the

beauty or imperfection of individual works. But it may not be out of place to call attention to the grandeur of this conception itself as a synthesis of science, religion and art. How amazing the range of thought and sympathy of those rishi-artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex issue of life, a theory of nature, not merely satisfactory to a single clique or race, nor acceptable to the thinkers of one century only, but universal in its appeal to the philosopher, the lover, and the artist of all ages and all countries. How supremely great in power and grace this dancing image must appear to all those who have striven in plastic forms to give expression to their intuition of Life!

Every part of such an image as this is directly expressive, not of any mere superstition or dogma, but of evident facts. No artist of today, however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena. If we would reconcile Time with Eternity, we can scarcely do so otherwise than by the conception of alternations of phase extending over vast regions of space and great tracts of time. Especially significant, then, is the phase alternation implied by the drum, and the fire which 'changes,' not destroys. These are but visual symbols of the theory of the day and night of Brahma.

In the night of Brahma, Nature is inert, and cannot dance till Shiva wills it: He rises from His rapture, and dancing sends through inert matter pulsing waves of awakening sound, and lo! matter also dances appearing as a glory round about Him. Dancing, He sustains its manifold phenomena. In the fulness of time, still dancing, he destroys all forms and names by fire and gives new rest. This is poetry; but none the less, science.

It is not strange that the figure of Nataraja has commanded the adoration of so many generations past: familiar with all scepticisms, expert in tracing all beliefs to primitive superstitions, explorers of the infinitely great and infinitely small, we are worshippers of Nataraja still.

**(Coomaraswamy, Ananda K. The Dance of Shiva: Fourteen Indian Essays, Revised Ed., New York: The**




**Ananda Kentish Coomaraswamy (ஆனந்த குமாரசுவாமி**, Ānanda Kentiś Kumāraswāmī; 22 August 1877 – 9 September 1947) was a Ceylonese Tamil philosopher and metaphysician, as well as a pioneering historian and philosopher of Indian art, particularly art history and symbolism, and an early interpreter of Indian culture to the West. In particular, he is described as "**the ground breaking theorist who was largely responsible for introducing ancient Indian art to the West**."

**ஆனந்த கெந்திஷ் குமாரசுவாமி (ஆகஸ்ட் 22 1877 - செப்டம்பர் 9 1947)**, கீழைத்தேயக் கலைகளுக்கும், இந்து மதத்துக்கும் சிறந்த தூதுவராக விளங்கியவர். சிறந்த ஓவியர், சிற்பி, கட்டடக்கலைஞர், கலைத் திறனாய்வாளர் (விமரிசகர்), ஆராய்ச்சியாளர், நூலாசிரியர்.

சேர் முத்து குமாரசுவாமி, எலிசபெத் பீவி (Elizabeth Clay-Beevi) என்போரின் ஒரே மகன். கொழும்பிலே பிறந்தார். தாயார் இங்கிலாந்தின் கெண்ட் என்னும் ஊரைச் சேர்ந்தவர். தாயாருடன் 1879 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இங்கிலாந்து சென்றார். இரண்டு வயதாகுமுன் தந்தையை இழந்து தாயின் பராமரிப்பிலே இங்கிலாந்தில் வளர்ந்து லண்டன் பல்கலைக்கழகத்திலே BSc தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார். பின்பு அதே பல்கலைக்கழகத்தில் 1905 இல் DSc (Geology) பட்டத்தையும் பெற்றார். ஆனந்த குமாரசுவாமி ஆங்கிலம், இடாய்ச்சு, பிரெஞ்சு, பாரசீகம், சிங்களம், சமக்கிருதம், பாளி, இந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் சிறந்த புலமையுடையவராக விளங்கினார்.

1907 ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்திலும் இந்தியாவிலும் கலை முயற்சிகளில் ஈடுபட்டார். 1911 ஆம் ஆண்டில் அலகாபாத்தில் நடைபெற்ற பொருட்காட்சியின் கலைப்பகுதிக்குப் பொறுப்பு வகித்தார். இந்திய விடுதலை இயக்க ஆதரவாளராக, அதன் தலைவர்களோடு தொடர்பு கொண்டிருந்தார். ரவீந்திரநாத் தாகூர், சகோதரி நிவேதிதை முதலியோரின் நண்பராக வாழ்ந்தார். இந்தியக்கலைகளின் இறைமையை உலகிற்கு எடுத்துக் காட்டியசிறந்த தூதுவராகக் கருதப்படுபவர். இறைவனின் ஐந்தொழிலைப் (பஞ்சகிருத்தியத்தைப்) பிரதிபலிக்கும் சிவநடனத்தை விளக்கி 1912-இல் 'சித்தாந்த தீபிகை'யில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை மூலம் இந்தியக் கலைகளின் சிறப்பினை உலகிற்கு அறிமுகப்படுத்திய முன்னோடியாகக் கொள்ளப்படுகிறார். ஏராளமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சகோதரி நிவேதிதையுடன் இணைந்து பௌத்த புராணக்கதைகளையும் தொகுத்துத் தந்துள்ளார். 'பிரபுத்த பாரதா' என்ற இதழில் 1913, 1914, 1915 ஆம் ஆண்டுகளில் தாயுமானவர் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிலவற்றை எழுதினார்



# ஆருத்திரா தரிசனம்

சித்தாந்தரத்தினம், கலாநிதி க.கணேசலிங்கம்

நட்சத்திர வரிசையில் ஆறாவதாக வருவது திருவாதிரை. சைவசமயத்தில் இது முக்கிய இடம் பெறுகிறது. திருவெம்பாவை நாட்களின் இறுதியில் வரும் திருவாதிரையில் 'ஆருத்திரா தரிசனம்' நடைபெறும். கோயில் என்றால் சிதம்பரம் என்று சைவர்களால் போற்றப்படும் பெருங்கோயிலில் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தைக் காண்பதற்குப் பெருந்திரளாக மக்கள் கூடுவர்.

**திருவாதிரை விழா**

ஆதிரை என்று கூறப்படும் நட்சத்திரம் 'திரு' என்ற அடைமொழி பெற்று, திருவாதிரை என்று பெயர் பெற்றது. திருவாதிரையின் சிறப்பினைப்பற்றிச் சைவ நூல்களிற் காணலாம். அதனைச் சிவனுக்குரிய நட்சத்திரமாகச் சைவர்கள் கொள்வதுண்டு. எதிலும் சிவனைக் காணும் அப்பரடிகள், திருவாதிரை நட்சத்திரத்திலும் சிவனைக் கண்டு, **'ஆதிரை நாளர் போலும்'** (4-32-3) எனப் போற்றுகிறார்.

மார்கழியில் நடைபெறும் திருவாதிரைத் திருவிழா பண்டுதொட்டுப் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. திருவாரூரில் நடைபெறும் இவ்விழாவின் சிறப்புப்பற்றி அப்பரடிகள் ஒரு பதிகமே பாடியுள்ளார். விழாக் காண்பதற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து பெருந்திரளான மக்கள், ஆண்களும் பெண்களுமாக, நல்லவர் தீயவர் என்ற பேதமின்றி, வருகின்றனர். நோய்பிணி அகன்று, இடர் நீங்கி இன்பம் நிலைப்பதற்கும், இறையருள் பெறுவதற்கும் இன்னும் பலவற்றுக்கும் வேண்டுகின்றனர். இவற்றை விளக்கும் அப்பரடிகள் விழாக்கோலம் பூண்ட திருவாரூரையும் பின்வரும் பாடலில் எம் கண்முன் கொண்டு வருகிறார்.

***வீதிகடோறும் வெண்கொடியோடு விதானங்கள்***

***சோதிகள்விட்டுச் சுடர்மாமணிகள் ஒளிதோன்றச்***

***சாதிகளாய பவளமுமுத்துத் தாமங்கள்***


***ஆதியாரூ ராதிரைநாளா லதுவண்ணம்'. -(4-21-3)***

ஞானசம்பந்தப் பெருமானின் திருமயிலாப்பூர் பதிகத்தில் தமிழகத்துப் பண்டைய பெருவிழாக்கள் சில சொல்லப்படுகின்றன. உயிர் நீத்த பூம்பாவையை எழுப்பிய இப்பதிகத்தில், **'ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்'** (2-47-4) என்று பாடுகிறார். இது மயிலாப்பூரில் நடைபெறும் திருவாதிரைத் திருவிழாவின் சிறப்பையும் திருவாதிரையின் முக்கியத்துவத்தையும் உணர்த்துவதாக உள்ளது. கோயில்களிலெல்லாம் நடைபெறும் திருவாதிரை விழா, சிதம்பரம் நடராசர் கோயிலிலே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**'சேந்தனார் பக்தி**

திருமுறை ஆசிரியர்களில் ஒருவரான சேந்தனாரின் கதை சிதம்பரத்துடனும் திருவாதிரையுடனும் தொடர்புடையது. மார்கழித் திருவாதிரையில் பெருமழை பெய்ததால், சிதம்பரத்துப் பெருந்தேர் சேற்றில் புதைந்து ஓடாது நின்றது. அடியார்களால் அதனை இழுக்க முடியவில்லை.

அப்பொழுது ஓர் அசரீரி கேட்டது. அது, தேர் ஓடுவதற்குத் திருப்பல்லாண்டு பாடும்படி சேந்தனாரைப் பணித்தது. அவரும் '**மன்னுக தில்லை, வளர்கநம் பக்தர்கள்**' என்று தொடங்கும் திருப்பல்லாண்டைப் பாடினார். ஓடாத தேர் சிவனருளால் ஓடியது.



பட்டினத்தாரின்கீழ் பணிபுரிந்தவர் சேந்தனார். அவர் பின்னர் குடும்பத்துடன் சிதம்பரம் வந்து, விறகு வெட்டி விற்று வாழ்வதைத் தொழிலாகக் கொண்டவர். அதில் வரும் ஊதியத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு சிவனடியாருக்கு உணவளித்து வழிபடுவது அவரின் வழக்கம். ஒருமுறை தொடர்ந்து பெய்த மழையால் போதிய ஊதியமின்றி வாடினார். சிவனடியாருக்கு உணவளிப்பதும் இயலாமலிருந்தது. இந்நிலையில்,

வீட்டுக்கு வந்த ஒரு சிவனடியாருக்குக் வீட்டிலிருந்த மாவினால் களி சமைத்து உணவாக அளிக்கவே முடிந்தது.வந்த சிவனடியார் சிவபெருமானே என்பதை அவர் அறிந்திருக்கவில்லை இந்நிலையில் சிதம்பரம் திருக்கோயில் வழிபாட்டிற்குச் சோழமன்னன் சென்றான். நடராசப் பெருமானுக்கு நாள்தோறும் நடக்கும் பூசையில் கலந்து அவனின் காற்சிலம்பின் ஓசையைக் கேட்டுப் போற்றுபவன் அவன். சேந்தனார் சிவனுக்குக் களியை உணவாகப் படைத்த அன்று அவ்வொலி கேட்கும் பாக்கியம் சோழமன்னனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவன் மிகவும் மனம் நொந்திருந்தான்.

அன்றிரவு இறைவன் அவன் கனவில் தோன்றி, தான் சேந்தனார் படைத்த களியை உண்ணப் போனதாகவும,; அதனால் சோழமன்னனுக்குத் தரிசனம் கொடுக்க முடியவில்லை என்றும் உணர்த்தினான். மறுநாட்காலை கூத்தப்பெருமான் கோயிலுக்குப் போனபோது, அங்கே களி உணவு சிந்தியிருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தான். அதனை அறிந்த பலரும் சேந்தனாரின் இறைபக்தியைப் புகழ்ந்து போற்றினர். இது நடந்தது மார்கழித் திருவாதிரை நாளில் என்று கருதப்படுகிறது. இன்றும் இந்நாளில் சிதம்பரத்தில் திருவாதிரைக்களி படைக்கப்படுகின்றது.

**ஆன்மாவின் திரை**

சைவசித்தாந்த நோக்கில் 'ஆதிரை' என்ற சொல்லுக்குப் பொருள் பொதிந்த விளக்கமுண்டு. 'ஆ' என்பது ஆன்மாவையும், 'திரை' என்பது மறைப்பையும் குறிக்கின்றன.

ஆன்மா இறைவனைப்போல் என்றுமுள்ளது; அழிவற்றது. ஆன்மாவுடன் அனாதியே இயல்பாகச் சேர்ந்திருந்து அதன் ஆற்றல்கள் வெளிப்படாதவாறு தடுப்பது ஆணவம். ஆன்மாவின் அழுக்கு அல்லது குற்றம்போல் இருப்பதால் அது ஆணவமலம் எனப்படுகிறது. இயற்கையாகச் சேர்ந்துள்ளதால் சகசமலம் (சகஜமலம்) எனவும் கூறப்படுகிறது. அறியாமை, அகந்தை முதலிய தீய பண்புக் கூறுகளுக்கு மூலமாக அமைவது ஆணவம்.

ஆணவப் பிடியிலிருந்து ஆன்மாவை விடுவிக்கத் துணைபுரிவது இறைவனின் அருளாகிய பெருங்கருணை.



அவனருளால் ஆன்மா சிறிது சிறிதாக அறிவு விளக்கம் பெற்று வளர்ச்சியடைகிறது. ஆயினும் அது எதனையும் முற்றாக அறியமுடிவதில்லை. அதற்கு ஒரு மறைப்பு திரைபோல் இருக்கிறது. வாழ்வியல் அனுபவம் பெற்று, அறிவு வளர்ந்து, இறைவனைக் காணும் பக்குவம் வரும்வரை ஆன்மாவுக்கு இந்த மறைப்பு தேவைப்படுகிறது.

ஒரு குழந்தை படிக்கும்போது அதன் கவனம் படிப்பிலேயே இருக்கவேண்டும். படித்து முடியும்வரை தாய்; அதன்முன் வராமல் மறைந்திருப்பது நல்லது. தாயைக் கண்டதும், அது தன் படிப்பிலுள்ள கவனத்தை இழந்துவிடும். பிற பொருட்களிலும் அதன் கவனம் செல்லக்கூடாது. இல்லையேல் அதன் படிப்பு தடைப்பட்டுவிடும். இது போன்றே ஆன்மா வளர்ச்சியுற்று, பக்குவம் அடையும்வரை இறையருளும் தன்னைக் காட்டாமல் மறைந்து நிற்கிறது. பிறவற்றையும் காணமுடியாமல் மறைக்கிறது. இவ்வாறு மறைத்தல் செய்யும் சிவனின் அருள் திரோதான சக்தி எனப்படும். திரோதானம் என்றால் திரை அல்லது மறைப்பு. ஆதிரை என்பது ஆன்மாவின் இந்த மறைப்பைக் குறிக்கிறது.

திரோதான மறைப்பு ஆன்மா உலகியலில் ஈடுபட்டு, அனுபவம் பெற்று, அறிவு வளர்சியடைந்து, அறிவாகிய மெய்ப்பொருளை அடையத் துணைபுரிகிறது. மறைப்பை உண்டாக்கும்; திரோதான சக்தி, ஆன்மா பக்குவமடைந்தபின் அனுக்கிரக சக்தியாக நின்று அருள்பொழிகிறது. ஆருத்திரா தரிசனம் எனப்படும் திருவாதிரைத் திருவிழா இவற்றை உணர்த்துவதாக உள்ளது.

ஆருத்திரா என்பது ஆதிரையைக் குறிக்கும் வடமொழிச் சொல். நனைதல் அல்லது தோய்தல் என்பது இதன் பொருள். அனுக்கிரக சக்தியாகிய இறையருளில் ஆன்மாக்கள் தோய்தலையும் ஆருத்திரா தரிசனம் குறிக்கிறது.


**ஆருத்திரா தரிசனம்**

திருவெம்பாவையின் இறுதியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தில் ஆருத்திரா தரிசனம் நடைபெறும். கோயில் என்றால் சிதம்பரம் என்று சைவர்களால் போற்றப்படுவது சிதம்பரத்திலுள்ள நடராசர் கோயில்.

இங்கே அதிகாலையில் நடைபெறும் ஆருத்திரா தரிசனம் மிகச்சிறப்பானது. பெருமானுக்கு நடைபெறும் அபிடேகம், ஆராதனை முதலியனவும் அவனின் அழகுமிகு திருவுருவும் கண்கொள்ளாக் காட்சியாகும். ஆருத்திரா தரிசனம் கண்டு களிப்பதற்கு உள்நாட்டிலும் பிறநாடுகளிலும் இருந்து பெருந்திரளாக மக்கள் சிதம்பரம் வருகிறார்கள்.

திருவெம்பாவையும் ஆருத்திரா தரிசனமும் பத்து நாட்கள் பெருவிழாவாகச் சிம்பரத்தில் நடைபெறும். ஒன்பதாம் நாள் அலங்கரிக்கப்பட்ட அழகிய தேரினில் நடராசப்பெருமான்; திருவுலா வருவார். நடராசருடன் அவரின் சக்தியாகிய சிவகாமசுந்தரி, கணபதி, முருகன், சண்டேசுவரர் ஆகியோரும் எழுந்தருளி வருவர். சிவன் கோயில் திருவிழாக்களில் இவர்கள் பஞ்சமூர்த்திகள் எனப்படுவர்.

தேர் திரும்பி வந்ததும் நடராசர் ஆயிரங்கால் மண்டபத்திலுள்ள தேவசபையில் எழுந்தருளுவார். மறுநாள் அதிகாலையில் நடராசருக்கு அபிடேகம் ஆரம்பமாகும். இதனைக் காண்பதற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், மார்கழிக் குளிரையும் பொருட்படுத்தாமல், இரவு முழுக்கக் காத்திருக்கின்றனர். அபிடேகத்தின்பின் சுபவேளையில் நடராசப் பெருமான் கோயிலுக்குள் செல்வார். கோயிலின் நுழைவாசலில் முன்னும் பின்னுமாக மூன்றுமுறை ஆடியாடிச் செல்வார். இது ஆடும் பெருமானின் ஆனந்த நடனம்; ஆதிரையில் காணும் அருள் நடனம். இதனைக் கண்டு பரவசமடைந்து பிறவிப் பயன் பெறுவதற்காகவே பல்லாயிரக்கணக்கான மக்கள் திருக்கோயில் வந்து தவமிருக்கின்றனர்



ஆனந்தக் கூத்தனின்; முதல் நடனம் வியாக்கிரபாதர், பதஞ்சலி என்னும் இரு முனிவருக்காக ஆடப்பட்டது என்பது புராணக்கதை. வசிட்டமுனிவரின் உறவினரான மாத்யந்தினரே வியாக்கிரபாதர். சிவஞானம் பெறுவதற்காகத் தில்லைக்குச் செல்லுமாறு இவரின் தந்தை இவரைப் பணித்தார். தில்லை மரங்கள் அடர்ந்திருந்ததால் சிதம்பரத்துக்குத் தில்லை என்பது பெயரானது. தில்லைக்கு வந்த மாத்யந்தினர் சிவபூசைக்கு வேண்டிய பூக்களைப் பறிக்கவேண்டியிருந்தது. தேன் அருந்தும் வண்டுகள்

தொட்டுக்கெடாத மலர்களையே சிவனுக்குச் சாத்த விரும்பினார். பொழுது புலரமுன், வண்டுகள் வராத வேளையில், அவற்றைக் கொய்வதற்குக் கண்தெரியவில்லை. பூமரத்தில் ஏறக் கால்கள் வழுக்கின. இறைவனிடம் வேண்டி முறையிட்டார். இரவிலும் பார்க்கக் கூடிய கண்களையும் மரமேறுவதற்கேற்ற புலிக்கால்களையும்; இறைவன் மாத்யந்தினருக்கு அருளினான். புலிக்கால்கள் பெற்ற மாத்யந்தனர் புலிக்கால் முனிவரெனவும் வியாக்கிரபாதர் எனவும் அழைக்கப்படுகிறார். (வியாக்கிர - புலி; பாத - கால்)

பதஞ்சலி முனிவர் முன்னர் ஆதிசேடனாக இருந்தவர். சிவனின் திருநடனம் காண்பதற்கு இவரும் தில்லைக்கு வந்து தொழுதார். இவ்விருவரும் காண இறைவன் நடனம் ஆடியது சிதம்பரத்தில் திருவாதிரை நாளிலேயாகும். இவர்களுக்காக அவன் ஆடிய அருள்நடனத்தை இன்று ஒவ்வொரு மார்கழித் திருவாதிரையிலும் மக்கள் கண்டு களிக்கின்றனர்!

**ஆடும் பெருமான்**

பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் ஆடும் பெருமானைத் தொழுது அவனருள் பெற்றவர்கள். இவர்களைக் குறிப்பிடும் திருமூலர், **'மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்'** என்கிறார். இவர்கள் கண்ட சிவனின் திருநடனம் மேலான நடனமென மாணிக்கவாசகரால் வர்ணிக்கப்படுகிறது. **'பதஞ்சலிக் கருளிய பரம நாடக..'** (8-2-138) என்பது மாணிக்கவாச சுவாமிகளின் திருவார்த்தை. அனைத்து உயிர்களும் உய்தி பெற்று இறைநிலை காண்பதற்காக ஆடப்படுவது அவனின் திருநடனம்

ஆடும் பெருமானின் அழகுத் திருவுருவம் தமிழரின் உன்னத கலையுணர்வுக்கும் தத்துவப் புலமைக்கும் பண்பாட்டுக்கும் சான்று பகர்வது. அது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல். அருளல் என்னும் ஐந்தொழிலையும் குறிப்பது.

எழில் மிக்க இவ்வடிவத்தை உலகுக்குக் காட்டியவர் ஈழத்துக் கலாயோகி ஆனந்தாகுமாரவாமி அவர்கள். 'சிவனின் நடனம்' (Dance of Siva) என்ற அவரின் நூலில் ஆடும் சிவனின் அழகிய வடிவத்தையும், அது உணர்த்தும் அவனின் ஐந்தொழிலையும் விளக்குகிறார்.

திருவதிகை மனவாசகங்கடந்தாரின் 'உண்மை விளக்கம்' எனும் சைவசித்தாந்த நூலிலிருந்து பின்வரும் பாடலை விளக்கமாகத் தருகிறார்.

**"தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்**

**சாற்றியிடம் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா**

**ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி**

**நான்ற மலர்ப்பதத்தே நாடு".**

இதன் பொருள்: படைத்தலை உடுக்கேந்திய திருக்கரமும், காத்தலை அமைந்த திருக்கரமும், அழித்தலைத் தீ ஏந்திய திருக்கரமும், மறைத்தலை ஊன்றிய திருவடியும், அருளுதலை தூக்கிய திருவடியும் காட்டுவதை அறிவாயாக.

ஆதிரைநாளில் தில்லையில் காணும் அவனின் அருள்நடனம் என்றும் எங்கும் எதிலும் நடைபெறுகிறது. ஞானிகள் புறத்திலும் தம் இதயத்திலும் கண்டு களிக்கின்றனர். பிறிற்ஜொப் கப்ரா (Fritjof Capra) என்ற மேற்கத்திய விஞ்ஞானி அணுத்திரளின் அசைவிலே அதனைக் கண்டு வியந்துள்ளார்.

அருளாளர் பலரும் ஆடும் கூத்தனின் தரிசனம் காண்பதைப்

பெரும்பேறாகக் கொண்டனர். காரைக்காலம்மையார் 'அறவா, நீ ஆடும்போதுன் அடிக்கீழ் இருக்க வேண்டும்' என வேண்டுகிறார். அவனின்; வளைந்த புருவத்தையும். செவ்விதழில் நெழியும் புன்சிரிப்பையும், எறிந்த சடையையும், பவளம் போன்ற திருமேனியில் திகழும் வெண்ணீற்றின் அழகையும், தூக்கிய பொற்பாதத்தையும் காண்பதற்காகவே மனிதப்பிறவி எடுக்கலாம் என்று அப்பரடிகள் பாடிப் பரவசமடைகிறார்.

**"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்**

**பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்**

**இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்**

# Sharing a Thought on 'Truth'




யார் குற்றவாளி ?

பார்க்கும் சக்தி என்பது ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதம் ஆனால் நாம் நமது கண்களின் முழு அருமையையும் உணருவது கிடையாது. கண்களைப் பார்ப்பதற்கு பயன்படுத்துவதைவிட தூங்குவதற்கு அதிகம் பயன்படுத்துகிறவர்கள் உண்டு. கண்கள் திறந்திருக்கும்போதே எதிரில் தெரியும் காட்சியைச் சரியாகப் பார்க்காமல் கனவுலகில் சஞ்சரிப்பபவர்களுக்கும் உண்டு !

சரி.. தூங்கவும் இல்லை ! கனவும் காணவில்லை அப்போதாவது எதிரில் தெரியும் காட்சி, நம் கண்களுக்கு உள்ளது உள்ளபடி தெரிகிறதா ? அதுவும் பலருக்குத் தெரிவதில்லை. கண்ணிலே ஏதாவது ஒரு கலர் கண்ணாடி மாட்டிக் கொண்டு பார்ப்பவர்கள் அதிகம். கலர் கண்ணாடி என்று நான் குறிப்பிடுவது அவரவரது Perception I உறவினர்கள், நண்பர்கள், அக்கம்பக்கத்தில் வசிப்பவர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் விஷயங்களைப் பார்கும்போது எந்தவித முழுமையான ஆதாரமும் இல்லாமல் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் அபிப்பிராயங்கள் தான் Perception!

நள்ளிரவில் ஓங்கி உயர்ந்து நிற்கிற ஓர் அரசமரத்தின் அடியிலிருந்து நிமிர்ந்து பார்க்கிறபோது உங்களுக்கு முதலில் அதன் கிளைகள் தெரியலாம். இலைகள் தெரியலாம் அதையெல்லாம் ஊடுருவிப் பார்க்கிற போதுதான் இலைகளுக்கு அப்பால் மறைந்திருக்கிற நிலாவின் பிரகாசம் தெரியும்.

அதுபோல் எந்த விஷயத்திலுமே எடுத்த எடுப்பில் உங்கள் Perception ஒரு மனிதன் அல்லது அவனது செயல் மீது படிந்து. உண்மைக்கு மாறான தோற்றத்தையும் ஏற்படுத்தும்.

அந்த முதல் பார்வையை மனதுக்குள் வாங்காமல், நிதானத்தோடு விருப்பு வெறுப்புகள் இல்லாமல் தெளிவான மனநிலையில் அதே காட்சியை மீண்டும் அசைபோட்டுப் பார்த்தால்தான் பார்த்ததன் உண்மை உங்களுக்கு விளங்கும்.

இதைப் பகிர்ந்து கொண்டவர்:

***திருமதி சாந்தகௌரி சிதம்பரநாதன்***

கான்பெரா தமிழ் முதியோர் சங்க உறுப்பினர்

**(Extracted from the book above)**

# சினிமா விமர்சனம்




பார்க்கில் படுத்துறங்கி, பக்கத்து கிராமத்தில் வேலை பார்த்து வரும் தினேஷை போலீஸ் அள்ளிக் கொண்டு போகிறது. கூடவே அவருடன் பார்க்கில் தஞ்சமான மேலும் மூன்று பசங்களும் ஸ்டேஷனுக்கு அள்ளி வரப்பட, பிரித்து மேய்கிறார்கள் நால்வரையும். 'ஒத்துக்கோ ஒத்துக்கோ...' என்று அடிக்கும் அவர்களிடம், 'எதை ஒத்துக்கணும்?' என்பதை கூட அறிந்து கொள்ள முடியாத அந்த அப்பாவிகளுக்கு அப்புறம்தான் தெரிகிறது, நமக்கு திருட்டுப்பட்டம் கட்டப் போகிறார்கள் என்பது. இறுதிவரை "நாங்க தப்பு செய்யல. ஏன் செய்யாத தப்பை ஒத்துக்கணும்" என்று பிடிவாதம் பிடிக்கும் அவர்கள், கந்தலாக கிழிந்து காகிதமாக நைந்து போன பின் நீதிமன்றத்தால் விடுவிக்கப்படுகிறார்கள். விட்டாலும் விதி துரத்துமல்லவா? தங்கள் விடுதலைக்கு, போகிற போக்கில் உதவிய வேறொரு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு உதவப்போக, அதற்கப்புறம் அவர்கள் அனுபவிக்கும் அடிஷனல் அவஸ்தைதான் மீதிப்படம்! படம் ஆரம்பித்து முடியும் வரை, ஒரு இனம் பிரியாத பீதி தலைக்குள் இறங்கி, நெஞ்சுமேல் நடந்து, வயிற்றுக்குள் விரவி, அப்படியே கால்கள் வழியாக மெல்ல மெல்ல இறங்குகிறது. படத்தில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருத்தரும் மிரட்டிபுட்டாய்ங்களே...!

ஒரு லாக்கப், அதற்குள் ஆடு போல அடைக்கப்பட்டிருக்கும் கைதிகள். லாக்கப் கொடூரங்கள். அந்த முதல் பாதியை பார்க்கிற எவரும், போலீஸ் ஸ்டேஷன் அமைந்திருக்கும் தெருவழியாக கூட செல்ல மாட்டார்கள். அதுவும் தினேஷ் வாங்குகிற அடி, அப்படியே நிஜம். விழுகிற ஒவ்வொரு லத்தி அடிக்கும் அந்த தோலும், சதையும் எம்பி எம்பி அடங்குகின்றன. இவர் வைக்கிற காலடி ஸ்டெப்ஸ்சில் கூட, அவ்வளவு பாந்தமான நடிப்பு. ஹாட்ஸ் ஆ:ப் தினேஷ்! "யோவ்... அப்படியே திரும்பி நில்லு. சாயங்காலம் வரைக்கும் இப்படியே நிக்கணும்" என்று நீதிபதி சொல்கிற காட்சி, அவ்வளவு நேர அராஜகத்தின் மீதும் தடவப்பட்ட கருணை ஆயின்ட்மென்ட். தினேஷுடன் நடித்திருக்கும் முருகதாஸ் மற்றும் இரு இளைஞர்களுக்கும் ஸ்பெஷல் பாராட்டுகள்.

பிற்பாதியில் கதை அப்படியே ஜம்ப் ஆகி, இன்னொரு பரபரப்புக்குள் நுழைந்து கொள்கிறது. இது தமிழ்நாட்டு எல்லை. அதே போலீஸ் ஸ்டேஷன். அதே தினேஷ் அண்டு நண்பர்கள் குழு. ஆனால் தெலுங்குக் காரனாவது உசிரோட விட்டான். இவனுங்க? என்ற கேள்வியை எழுப்பி, கிறுகிறுப்பாக ஒரு வணக்கத்தை போட்டு படத்தை முடிக்கிறார் வெற்றிமாறன். நாடு முழுக்க ஒரே காக்கிதான். ஆள்தான் வேறுவேறு...

வசனங்களில் ஊசியை தடவிக் கொண்டு எழுதியிருப்பார் போலிருக்கிறது. தனி அட்ராக்ஷன் பெறுகிற வசனங்கள் ஒவ்வொன்றும். "கோட்டாவுல உள்ள வந்துட்டு சிஸ்டம் புரியாம பேசாதே..." என்று ஏ.சி, சமுத்திரக்கனியை அடக்குகிற அந்த காட்சியும் வசனமும், போலீஸ் அரசியலுக்கும் அதற்குள் உலவும் ஜாதி அரசியலுக்கும் ஒரு சின்ன உதாரணம்.

ஒரு பக்கம் அப்பாவிகளை அடித்து உதைக்கும் போலீஸ், தேவைபட்டால், பதவியில் இருப்பவர்களுக்காக, சமூகத்தில் அந்தஸ்த்தில் உள்ளவர்களையும் தூக்கி போட்டு மிதிக்கும். என்பதையும் ஆடிட்டராக வரும் கிஷோர் கேரக்டரின் மூலம் காட்டி போலீஸுக்கு அரசாங்கத்தாரால் தரப்பட்டிருக்கும் வரம்பு மீறிய அதிகாரத்தை அழகாக சுட்டி காட்டி, அது குறைக்கப்பட வேண்டும்.

எனும் கோரிக்கையையும் சொல்லாமல் சொல்லி வந்திருக்கும் வெற்றி மாறனின் "விசாரணை" - சரியான 'தோரணை'!

(http://www.cinemapettai.com)



ஊட்டியில் தனது தங்கை அனிகா வுடன் வசிக்கிறார் போக்கு வரத்து சப்-இன்ஸ்பெக்டர் ஜெயம் ரவி. டாக்டர் லட்சுமி மேனனை ஒருதலையாகக் காதலிக்கிறார். ஊரில் வைரஸ் நோய்த் தொற்றுக்கு ஆளாகிறது ஒரு நாய். அது ஒருவரைக் கடிக்க, வெறிநாயைவிட மோசமாக மாறும் அவர் தன் குடும்பத்தினரைக் கடித்துக் குதறுகிறார். அவர்களும் நோய்த் தொற்றுக்கு ஆளாகி, எதிர்ப்படும் அனைவரையும் கடிக்கின்றனர். கடிபட்ட அனைவரும் மனித மிருகங்களாக மாறுகிறார்கள். மனித மிருகங்கள் வேகமாகப் பெருக, ஊரே பீதியின் பிடியில் சிக்குகிறது.

தமிழின் முதல் 'ஸாம்பி' வகைப் படம் என்று சொல்லப்பட்ட படம் இது. ஆனால் ஸாம்பிக்கும் இதற்கும் துளியும் சம்பந்தம் இல்லை. ஸாம்பி என்றால் பிணம்போல உணர்ச்சியற்று நடமாடும் மனிதன் அல்லது மனிதனைப் போல நடமாடும் பிணம். இந்தப் படம் வைரஸ் தாக்குதலால் வெறிகொண்ட மிருகமாக மாறும் மனிதர்களைப் பற்றியது. அதையாவது ஒழுங்காகக் கையாண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் அதிலும் ஏமாற்றம்தான்.

மருந்து இல்லாத இந்த பயங்கரமான நோய்க்கு ஆளானவர்களைக் கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கும் காவல் துறை ஆணையர் அதன் பிறகு தன் காவல் படையினரைக் கூட்டிக்கொண்டு எங்கு போனார் என்று தெரியவில்லை. அனைவரும் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு பாய்கிறார்கள். ஜெயம் ரவி ஓயாமல் அவர்களை சுட்டுக்கொண்டும் அடித்துக் கொண்டும் இருக்கிறார்.

அரசியல்வாதியை சித்தரித்துள்ள விதம் அரதப் பழசு. தொடக்கத்தில் லட்சுமி மேனனிடம் ஜெயம் ரவி நடந்து கொள்ளும் விதத்துக்கு எந்தக் காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. 'முன்னாள் காதலி' என்னும் பாட்டு தேவையில்லாமல் வந்து எரிச்சலூட்டுகிறது. பதின் வயதில் உள்ள தங்கை, அண்ணனுக்குப் பெண் பார்ப்பதற்காக திருமணத் தரகரைக் கூட்டிவரும் அபத்தமும் படத்தில் உண்டு. தலைமை மருத்துவர் தொடர்பான சஸ்பென்ஸ், மரண பீதிக்கு நடுவே இழையோடும் காதல் கதை, அண்ணன் தங்கை பாசம் ஆகியவைதான் சிறிது ஆறுதலைத் தருகின்றன.

மிருக மனிதர்களின் ஒப்பனைகள், கிரா:பிக்ஸ் ஆகியவற்றின் தரம் மிகவும் சுமார். டி.இமானின் இசையில் பாடல்கள் கேட்கும்படி இருந்தாலும் பின்னணி இ(ம்)சையைத் தாங்க முடியவில்லை. எஸ்.வெங்கடேஷின் ஒளிப்பதிவு, படத் தைக் கொஞ்சம் தூக்கி நிறுத்துகிறது.

ஜெயம் ரவி நன்றாகவே நடித் திருக்கிறார். குறிப்பாக கடைசிக் காட்சி களில் நன்கு உணர்ச்சிகளைக் கொட்டி நடித்திருக்கிறார். சவால் இல்லாத வேடத்தில் லட்சுமி மேனன் கவனிக்க வைக்கிறார். குழந்தை அனிகாவின் நடிப்பு மனதில் நிற்கிறது. வித்தியாசமான கதையைக் கையில் எடுத்திருக்கும் இயக்குநர் சக்தி சவுந்தர் ராஜன், ஒரே மாதிரியான காட்சிகளை வைத்து ஒப்பேற்றி வெறுப்பேற்றுகிறார். (Source Tamil Hindu)

# 'பொப்பிசைப் பிதா' நித்தி கனகரத்தினம்

## சிறப்புப் பகுதி



இலங்கையின் பொப்பிசை வரலாறு

Multifaceted Nithi Makes Music Too

என் திருமணத்துக்கு பல்லி மிட்டாய் வாங்கி வந்திருந்த செல்லம்மா
சிட்டுக் குருவியாய் சிறகடித்து திரிந்த காலம்.......


*Nithi Kanagaratnam's Love Affair with Canberra*

Nithy Thurairajah
Editor - Kavolai

To the Baila Beat

ஐம்பது ஆண்டுகளாக சின்ன மாமியின்
சின்ன மகளைத் தேடும் நித்தி கனகரத்தினம்!

காவோலையான முதுமை!
க.கணேசலிங்கம்



அம்மாவின் கடிதம்
யோகன்

அம்மா
ஆழியாள்




விடை காணமுடியாத வினா
யோகேஸ்வரி கணேசலிங்கம்

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

தாய் மடி தேடி
இரவுச்சூரியன்

ஆருத்திரா தரிசனம்
சித்தாந்தரத்தினம், கலாநிதி க.கணேசலிங்கம்

*The Dance of Siva*
*Ananda K. Coomaraswamy*

சினிமா விமர்சனம்